விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk



சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம் (வ-து)
ஜசுபி பழரச தொழிற்சாலை
எமது பழரச தொழிற்சாலையின் தேவைக்காக உள்ளூர் உற்பத்தி -யாளர்களிடம் இருந்து தரமான மாம்பழம், திராட்சைப்பழம், நீத்துக்காய் என்பன கொள்வனவு செய்யப்படுகின்றன.
(C-2581)
தொடர்பு கொள்ளவேண்டிய
T.P.No -0212256065
விலாசம் :- ஆலடி, மானிப்பாய் வீதி, உடுவில்



சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 சித்திரை 31 திங்கட்கிழமை (14.05.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 146


# த.தே.கூட்டமைப்பு
# பலவீனம் அடைந்துள்ளது

## புளொட் மத்திய செயற்குழுக் கூட்டத்தின் பின் தர்மலிங்கம் சித்தார்த்தன் எம்.பி தெரிவிப்பு



*(வவுனியா)*

நாங்கள் விரும்புகிறோமோ இல்லையோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பலவீனமடைந்திருக்கிறது என்பதே உண்மை. கடந்த உள்ளூராட்சி தேர்தல் முடிவு அதனை மிகத் தெளிவாக காட்டியது என புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார். (24ஆம் பக்கம் பார்க்க)

பேருந்து கட்டணத்தை அதிகரிக்க

## சங்கங்களிடையே கருத்து முரண்பாடு!

(கொழும்பு)

எரிபொருள் விலை உயர்வுடன், கட்டண சீரமைப்பு தொடர்பில் பேருந்து சங்கங்கள் பரஸ்பரம் முரணான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றன.

விலை அதிகரிப்பு மூலம் 20 சதவீத கட்டண அதிகரிப்பு மற்றும் குறைந்த கட்டணமாக 15 ரூபாய் அறவிடல் போன்ற தீர்மானங்களை அகில இலங்கை தனியார் பேருந்து சம் 24

## புகையிரத கட்டணங்கள் அதிகரிக்கும்!

(கொழும்பு)

புகையிரத கட்டணங்கள் எதிர்வரும் ஜூன் முதலாம் திகதியிலிருந்து 15 சதவீதத்தால் அதிகரிக்கப்படவுள்ளதாக போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி தற்போது குறைந்த பட்ச கட்டணமாகவுள்ள 24

காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம்

## மரண சான்றிதழ் வழங்கும் காரியாலயமாகி விடக்கூடாது

செல்வம் அடைக்கலநாதன் எச்சரிக்கை



(யாழ்ப்பாணம்)

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகம், மரண சான்றிதழ் வழங்கும் காரியாலயமாக அமைந்து விடக்கூடாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் 24

நினைவேந்தலை ஒன்றிணைந்து முன்னெடுக்கத் தீர்மானம்

## பிரிந்திருந்த அனைத்து தரப்பினரும் முள்ளிவாய்க்காலில் நேற்று ஒன்று கூடினர்

(யாழ்ப்பாணம்)

மே -18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை ஒன்றிணைந்து முன்னெடுப்பதற்கு யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் முன்னெடுத்த முயற்சியின் பயனாக, பிரிந்திருந்த அனைத்து தரப்பினரும் முள்ளிவாய்க்காலில் நேற்று ஒன்று கூடியுள்ளார்கள் என மாணவ சமூகத்தினர் தெரிவித்துள்ளனர்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை முன்னெடுப்பது தொடர்பில் வடக்கு மாகாண சபை மற்றும் யாழ்.பல்கலைக்கழக மாணவ சமூகத்தினருக்கும் இடையே தொடர்சியான முரண்பாடுகள் ஏற்பட்டுவந்தன.

இந்த நிலையில் பொதுமக்களின் நலன் கருதி இரு தரப்பின 24

## அரச மருத்துவர்கள் இன்று வேலை நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து அரச வைத்தியசாலைகளிலும் (யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை நீங்கலாக) உள்ள வைத்தியர்கள் இன்று திங்கட்கிழமை காலை 8 மணி முதல் 24 மணி நேர அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளனர். 24

## காணாமல் போனோருக்கான பதிலை ஜனாதிபதியே வழங்க வேண்டும்

மனோ கணேசன் திட்டவட்டம்



(கொழும்பு)

காணாமல் போனோருக்கான பதிலை வழங்க வேண்டிய பொறுப்பு ஜனாதிபதியிடம் இருப்பதே சிறந்தது என தேசிய சகவாழ்வு அரச கரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். 24

## ராஜபக்ஷ சகோதரர்களிடையே கருத்து வேறுபாடு கிடையாது!

மகிந்த கூறுகிறார்



(கொழும்பு)

சிலர் கூறுவது போல் ராஜபக்ஷ சகோதரர்களிடையே எந்த விதமான கருத்து வேறுபாடுகளும் இல்லை என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். திம்பிரிகஸ்யாய பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற சமய நிகழ்வு ஒன் 24


துரித தபால்கள் பொதிகள் சேவை
எங்கும் இல்லாத மிகக் குறைந்த கட்டணத்தில்
11Kg க்கு மேற்பட்ட பொதிகளுக்கு

| | |
|---|---|
| UK | -550/= |
| Germany | -650/= |
| France | -700/= |
| Canada | -850/= |
| Australia | -800/= |

திருமுருகன் கொம் நெற்
கொழும்பு, யாழ்ப்பாணம், திருநெல்வேலி, நெல்லியடி, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார்.
Hotline -0777554528
(3963)


## உங்கள் இயலாமையை மறைக்க எங்களை குறைகூற வேண்டாம்!

அரசுக்கு கூட்டு எதிர்க்கட்சி எச்சரிக்கை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சூழ்ச்சிகளால் தோற்கடித்து தேசிய அரசாங்கம் 100 நாள் வேலைத்திட்டம் என்ற போலியான திட்டங்களை முன்வைத்து மக்களை ஏமாற்றி ஆட்சிக்கு வந்தது. ஆட்சி மாற்றத்தின் பின்னர் நாடு பொருளாதார மற்றும் மானிட வாழ்வியல் ரீதியில் முன்னேற்றமடையும் என்று தேசிய அரசாங்கம் குறிப்பிட்டது தற்போது முழுமையடைந்துள்ளதா என்று அரசாங்கத்தினை சாடிய கூட்டு எதிர்க்கட்சி, தேசிய அரசாங்கத்தின் முறை 24

# ஈரான் ஜனாதிபதியை சந்தித்தார் மைத்திரி



(கொழும்பு)

2 நாட்கள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு ஈரான் சென்றுள்ள இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று ஞாயிற்றுக்கிழமை மதியம் ஈரான் ஜனாதிபதி ஹசன் ரூஹானியை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

குறித்த சந்திப்பின் பின்னர் இரு நாடுகளுக் கிடையேயான பொருளாதார மற்றும் வர்த்தக ஒப்பந்ததில் கைச்சாத்திடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

2 நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி, ஈரான் நாட்டு நாடாளுமன்றத்திற்கும் விஜயம் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (மு)

## கண்ணீர் அஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 06 | 12 |
| . | . |
| 10 | 05 |
| . | . |
| 1942 | 2018 |

### திருமதி இராஜகோபால் குணவதி

எமது கல்லூரி ஆசிரியர் **இ.குகன்** அவர்களின் அன்புத் தாயார் திருமதி இராஜகோபால் குணவதி அவர்களின் மறைவையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரிய நண்பர்கள்
யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை.

(3961)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## மரண அறிவித்தல்

### திருமதி கந்தசாமி நல்லபிள்ளை (இராசம்மா)

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 31 | 13 |
| - | - |
| 07 | 05 |
| - | - |
| 1931 | 2018 |



யாழ்.புலோலி தெற்கு புலோலியைப் பிறப்பிடமாகவும் லண்டன் நாட்டில் நிரந்தர குடியுரிமையும் பெற்று தற்போது தனது பிறந்த இடத்தில் வசித்தவருமாகிய கந்தசாமி நல்லபிள்ளை நேற்று (13.05.2018) ஞாயிற்றுக்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஆழ்வாப்பிள்ளை தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும், ஆலடி தாமர் தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற கந்தசாமியின் அன்பு மனைவியும், ருக்மணிதேவி, முத்துஇலட்சுமி, இந்திரா, சிவபாலன், பாலஸ்கந்தராசா, லோகராணி, கிருஷ்ணராசா (கண்ணன்), சிவகுலசிங்கம் (இராசன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுப்பிரமணியம், சந்திரசேகரம், யோகராணி, உமாதேவி, ஜெயக்குமார், தவமலர் ஆகியோரின் மாமியாரும், அன்னப்பிள்ளை, இரத்தினம், தங்கராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், பார்த்தீபன், பிரதீபன், பவானி, மதுரா, சத்தியா, தாரணி, தனுஷா, தர்ஷா, அனித், அனித்தா, நவிலா, சயன் ஆகியோரின் பாட்டியும், பிருந்தன், சங்கவி, லிடிஸ், கேசிகா ஆகியோரின் பூட்டியும், அன்னப்பிள்ளை, வேலுப்பிள்ளை, சம்பந்தர், செல்லம், தங்கம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (14.05.2018) திங்கட்கிழமை காலை நடைபெற்று 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக பருத்தித்துறை சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புலோலி தெற்கு,
புலோலி.

தகவல்:-குடும்பத்தினர்
0212260068

(சி-2592)

## மரண அறிவித்தல்



### திருமதி தம்பிராசா பாக்கியம்

உரும்பிராய் கிழக்கு கற்புலம் வீதி, உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தம்பிராசா பாக்கியம் நேற்று (13.05.2018) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுவாமிநாதன்-சிவக்கொளுந்து தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற வீரவாகு-குட்டிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வீரவாகு தம்பிராசாவின் அன்பு மனைவியும், சிவலோகநாதன், சத்தியநாதன், கமலாதேவி, காலஞ்சென்ற சறோஜினிதேவி மற்றும் ருக்குமணிதேவி, அருள்தேவி, பவளராணி, தர்மராசா, குணபூசணி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற நடராசா, தம்பிராசா, பவளம் மற்றும் பொன்னுத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரியும், முத்துராணி, யோகானந்தராணி, காலஞ்சென்ற நவரட்ணம் மற்றும் திலகராஜா, சுப்பிரமணியம், தயானந்தன், ஆனந்தகுமார், சுஜாதா, சிவகுமார் ஆகியோரின் அன்பு மாமியாரும், சுரேஷ்-பிரதிபா, மயூரன், ஜனகன், சுதர்சினி-ரவீந்திரன், சசிகுமார்-ஜெயப்பிரியா, அனிஸ்குமார்-சுமதி, ரோகினி-அரவிந்தன், கஜானி-சிவகுமார், பாமினி-சுதாகர், சுதர்சன்-சுபா, நிஷாந்தன்-அகிலா, சதீசன்-மஞ்சுளா, தாரணி-சிறிஸ்கந்தராசா, பத்மாவதி, வினோகாந்தர்சினி, துசித்தா-சாந்தகரன், பிரதீபன்-கம்சா, வினோஜன், கஜன்-கிருஷா, துசியந்தன், அஜந்தன், சயந்தன், சஜீவன், ரவிராஜ், ஆர்த்திகா, ஆரணி, அபிராமி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், வித்தியா, அனுஜன், ஹரிசன், அபினாஷ், அஜீஸ், அக்சரா, அபினயா, அபிஷன், அக்ஷயன், அய்ஷா, யதுர்சன், விதுர்சன், கேதுஷ், தக்சிகா, வர்ஷா, வருண், கேசிகன், சாருகேசி, சஞ்சிசன், பானுஜன், ஜஜீவன், அஸ்மிதா, திவ்யா, ஹரேஷ்வந், நிருசன், டிலக்சிகா, அகிலேஷ், சயானா, டிஸ்னா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.05.2018) திங்கட்கிழமை பிற்பகல் 1 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இளங்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கற்புலம் வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

தகவல்:-குடும்பத்தினர்
0778893628

(3962)

# அரசாங்கத்தின் கொள்கை வஞ்சனை வேலைத்திட்டம்

## ஜி.எல்.பீரிஸ் குற்றச்சாட்டு



(கொழும்பு)

நாட்டின் தற்போதைய அரசாங்கத்தின் கொள்கை என்பது வஞ்சனையான வேலைத்திட்டம் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரான முன்னாள் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் குற்றம் சாட்டியுள்ளார்.


கொழும்பில் நேற்று முன்தினம் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை மத்திய வங்கியின் பிணை முறி மோசடியானது இலங்கையில் மாத்திரமல்ல முழு தெற்காசியாவிலும் நடந்த மிகப் பெரிய மோசடி. இதன் மூலம் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு கடும் பாதிப்பு ஏற்பட்டது.

பிரதமருக்கும் தற்போதைய அரசாங்கத்திற்கும் இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜூன் மகேந்திரனை இலங்கைக்கு கொண்டு வரும் தேவையில்லை.

தற்போதைய அரசாங்கம் மாறி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததும் மக்களுக்கு நியாயத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# பம்பரகந்த நீர்வீழ்ச்சியில் பாரியளவு நீர் பெருக்கெடுப்பு



(கொழும்பு)

இலங்கையில் சுற்றுலாப் பயணிகளை அதிகம் கவரும் மிக உயரமான நீர்வீழ்ச்சியான பம்பரகந்த நீர்வீழ்ச்சியில் அதிக நீர் வெளியேறுவதால் சுற்றுலா பயணிகள் அதன் அருகில் சென்று பார்வையிட முடியாது என ஹல்துமுல்ல பிரதேச சபையின் நீர்வீழ்ச்சிக்கு பொறுப்பான உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

பண்டாரவளை, பதுளை, ஹல்துமுல்ல போன்ற பகுதிகளில் தற்போது நிலவும் அடைமழை காரணமாக பம்பரகந்த நீர்வீழ்ச்சியில் பாரிய அளவு நீர் பெருக்கெடுக்க ஆரம்பித்துள்ளது.

இதன்காரணமாக சுற்றுலா பயணிகள் அருகில் சென்று பார்வையிடுவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும் என அந்த உத்தியோகத்தர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# ரயில்வே துறையை 20 வருடங்களில் அபிவிருத்தி செய்ய பாரிய திட்டம்

## அமைச்சர் நிமால் தகவல்



(கொழும்பு)

இலங்கை, ரயில்வே துறையை அபிவிருத்தி செய்யும் நோக்கில், எதிர்வரும் 20 வருட காலத்தை இலக்காகக் கொண்டு திட்டமொன்றை வகுப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

இதற்கென 60 கோடியே 50 இலட்ச அமெரிக்க டொலர்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

நாளாந்தம் ரயில்கள் மூலம் கொழும்புக்கு வரும் மற்றும் கொழும்பில் இருந்து புறப்பட்டு செல்லும் பயணிகளின் எண்ணிக்கை சுமார் 3 இலட்சமாகும். 2025ம் ஆண்டளவில் இந்த எண்ணிக்கை 12 இலட்சமாக அதிகரிக்கும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது" எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

"மக்களுக்கு வசதிகளை செய்து கொடுப்பதற்கான புதிய அபிவிருத்தி திட்டம் ஒன்று தேவையாகும். ரயில் பாதை கட்டமைப்பை மேம்படுத்தல். புதிய சமிக்ஞை கட்டமைப்பை அறிமுகப்படுத்தல். புதிய தொடர்பாடல் முறையும் இதன்மூலம் பயன்படுத்தப்படும். திட்டத்தை வகுப்பதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி 15 இலட்சம் அமெரிக்க டொலர்களை நிதியுதவியாக வழங்கியுள்ளது" எனவும் அமைச்சர் கூறினார்.

"இதற்கு மேலதிகமாக தள ஆய்வு மற்றும் தயாரிப்பு விடயங்களுக்காக 100 கோடி அமெரிக்க டொலர்களை ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இரண்டாவது வர்த்தக வலயம் தென் மாகாணத்தில் அமையும்



(கொழும்பு)


தென் மாகாணத்தில் இரண்டாவது வர்த்தக வலயத்தை அமைக்கும் பணிகள் இந்த வருடத்தில் ஆரம்பிக்கப்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

காலி, ஹபராதுவ புதிய செயலாளர் அலுவலக கட்டடத்தொகுதி நேற்று முன்தினம் காலை பொதுமக்களிடம் கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது வெலிகம பிரதேசத்தில் குறித்த வர்த்தக வலயம் அமைக்கப்படவுள்ளதாக பிரதமர் தெரிவித்துள்ளார். (இ-7)

# மின்சாரக் கட்டணத்தில் மாற்றங்கள் இல்லை

## அமைச்சர் சியம்பலாப்பிட்டிய தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையில் எரிபொருட்களின் விலை அதிகரிப்பு செய்யப்பட்டுள்ள போதும் மின்சாரக்கட்டணத்தில் எந்தவித மாற்றங்களும் செய்யவில்லையென மின்சக்தி மற்றும் சக்திவலு அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

கட்டுநாயக்க பிரதேசத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

உலக சந்தையில் ஏற்பட்டுள்ள எரிபொருட்களின் விலையேற்றத்தினால் இலங்கையிலும் எரிபொருட்களின் விலை அண்மையில் அதிகரிக்கப்பட்டது. இந்நிலையில் மின்சாரக் கட்டணத்திலும் அதிகரிப்பு ஏற்படலாம் என்ற அச்சம் மக்களிடையே ஏற்பட்டது.

எனினும் மின்சார அலகின் பெறுமதியில் எந்தவித மாற்றங்களும் இதுவரையில் மேற்கொள்ளப்படவில்லையென அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## எரிபொருள் விலை அதிகரிப்பு எதிரொலி

# அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் பகிஷ்கரிப்பு

(கொழும்பு)

நாளை மறுதினம் புதன்கிழமை அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் பணிப் பகிஷ்கரிப்பை நடத்துவதற்கு தீர்மானித்துள்ளது.

பஸ் கட்டணம் 20% மாகவும், ஆகக் குறைந்த கட்டணத்தொகை 15 ரூபாவாகவும் உயர்த்தப்படாவிட்டால், மேற்படி பணிப்பகிஷ்கரிப்பு நடத்தப்படுமென அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (இ-7)

# கிரேக்கத்தில் பாகிஸ்தான் குழுவால் பணயக் கைதிகளாக இருந்த மூன்று இலங்கையர்கள் மீட்பு

(கொழும்பு)

பணயக் கைதிகளாக, கிரேக்க நாட்டில் தடுத்து வைக்கப்பட்டிருந்த மூன்று இலங்கையர்கள் மீட்கப்பட்டுள்ளனர்.

கிரேக்க நாட்டு பொலிஸாரால் குறித்த மூவரும் மீட்கப்பட்டுள்ளனர். பாகிஸ்தானை சேர்ந்த குழுவொன்றினால் வடக்கு கிரேக்கத்தின் நகர் ஒன்றில் 50 அகதிகள் பணயக் கைதிகளாக தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

குறித்த அகதிகளின் குடும்பத்தாரை மிரட்டி கப்பம் பெறும் நோக்கில் அவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் தகவல் அறிந்த அந்நாட்டு பொலிஸார் தடுத்து வைக்கப்பட்டிருந்த அவர்களை மீட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன், 50 பேர் கொண்ட குழுவில் மூன்று இலங்கையர்களும் உள்ளடங்குவது உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

# சுதந்திரக் கட்சியின் 16 பேரால் கூட்டு எதிர்க்கட்சிக்குள் மோதல்

(கொழும்பு)

அரசாங்கத்தில் இருந்து விலகிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 16 நாடாளுமன்ற உறுப்பினர்களால் கூட்டு எதிர்க்கட்சிக்குள் மோதல்கள் அதிகரித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசாங்கத்தில் இருந்து விலகிய இந்த 16 நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கூட்டு எதிர்க்கட்சியுடன் இணைக்க ஒரு தரப்பினர் எதிர்ப்புகளை வெளியிட்டு வருகின்றனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை சேர்ந்த அதிகமான நாடாளுமன்ற உறுப்பினர்கள் தற்போது எதிர்க்கட்சியில் இருப்பதால், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை கைவிட்டு, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அதிகாரத்தை கைப்பற்ற வேண்டும் என கூட்டு எதிர்க்கட்சியிலுள்ள மற்றுமொரு தரப்பு கூறிவருகிறது.


அத்துடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அதிகாரத்தை கைப்பற்றி சுதந்திரக் கட்சியின் தனி அரசாங்கத்தை அமைக்க வேண்டும் என மேலும் சிலர் கருதுவதாகவும் கூட்டு எதிர்க்கட்சிக்குள் அரசியல் ரீதியான பிளவுகளை ஏற்படுத்தி, அதனை பலவீனப்படுத்தும் அரசியல் நகர்வுகளை முன்னெடுக்கும் நோக்கிலேயே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 16 பேர் அரசாங்கத்தில் இருந்து விலகி எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்துள்ளதாகவும் சந்தேகம் வெளியிட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது. (இ-7)




## இந்தியன் பிறிமியர் லீக் - 2018
## புள்ளிகள் பட்டியல்

| நிலை | அணி | போட்டி | வெற்றி | தோல்வி | புள்ளி |
|---|---|---|---|---|---|
| 01 | சன்ரைசர்ஸ் ஹைதராபாத் | 12 | 9 | 3 | 18 |
| 2 | சென்னை சுப்பர் கிங்ஸ் | 12 | 8 | 4 | 16 |
| 3 | கிங்ஸ் XI பஞ்சாப் | 11 | 6 | 5 | 12 |
| 4 | கொல்கத்தா நைட் ரைடர்ஸ் | 12 | 6 | 6 | 12 |
| 5 | ராஜஸ்தான் றோயல்ஸ் | 12 | 6 | 6 | 12 |
| 6 | மும்பை இந்தியன்ஸ் | 12 | 5 | 7 | 10 |
| 7 | பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் | 11 | 4 | 7 | 8 |
| 8 | டில்லி டேர்டெவில்ஸ் | 12 | 3 | 9 | 6 |

# பட்லர் அதிரடி; ராஜஸ்தான் வெற்றி



மும்பைக்கு எதிரான ஐ.பி.எல்., லீக் போட்டியில் பட்லர் அரைச்சதம் விளாச ராஜஸ்தான் 7 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

இந்தியாவில், 11ஆவது ஐ.பி.எல்., தொடர் நடக்கிறது. நேற்று மும்பையில் நடந்த 47ஆவது லீக் போட்டியில், "நடப்பு சம்பியன்" மும்பை அணி, ராஜஸ்தானை சந்தித்தது.

நாணயச் சுழற்சியில் வென்ற ராஜஸ்தான் அணியின் தலைவர் ரகானே, களத்தடுப்பை தேர்வு செய்தார்.

**லீவிஸ் அபாரம்**

மும்பை அணிக்கு சூர்ய குமார் யாதவ் (38) நல்ல ஆரம்பம் கொடுத்தார். அணித தலைவர் ரோகித் சர்மா (0) ஏமாற்றினார். ஸ்ரேயாஸ் கோபால் வீசிய 9ஆவது ஓவரில் தொடர்ச்சியாக 2 சிக்சர் பறக்கவிட்ட எவின் லீவிஸ் (60) அரைச்சதம் கடந்தார். இஷான் கிஷான் (12), குர்னால் பாண்ட்யா (3) நிலைக்கவில்லை. உனத்கட் வீசிய 19ஆவது ஓவரில், 2 சிக்சர் விளாசிய ஹர்திக் பாண்ட்யா (36) ஓரளவு கைகொடுத்தார். மும்பை அணி, 20 ஓவரில், 6 விக்கெட்டுக்கு, 168 ஓட்டங்கள் எடுத்தது. பென் கட்டிங் (10) ஆட்டமிழக்காமல் இருந்தார். ராஜஸ்தான் சார்பில் ஆர்ச்சர், ஸ்ரோக்ஸ் தலா 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

**பட்லர் அரைச்சதம்**

எளிய இலக்கை விரட்டிய ராஜஸ்தான் அணிக்கு ஷோர்ட் (4) சொதப்பினார். பின், இணைந்த அணித் தலைவர் ரகானே, பட்லர் ஜோடி பொறுப்புடன் விளையாடியது. பவுண்டரி, சிக்சர் மழை பொழிந்த பட்லர், தொடர்ந்து 5ஆவது அரைசதம் எட்டினார். ரகானே 37 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். தன் பங்கிற்கு சாம்சன் (26 ஓட்) சற்று அதிரடி காட்டினார். ஹர்திக் பந்தை சிக்சருக்கு பறக்கவிட்ட பட்லர் வெற்றியை உறுதி செய்தார். முடிவில், ராஜஸ்தான் அணி 18 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை (171) 7 விக்கெட்டுக்களால் அடைந்தது. பட்லர் (94 ஓட்., 53 பந்து) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

**5**

இப்போட்டியில் அசத்திய பட்லர், இந்த "சீசனில்" தொடர்ந்து 5ஆவது அரைச்சதம் அடித்தார். இதன் மூலம், ஐ.பி.எல்., தொடரில் சேவாக்கிற்குப்பின் (டில்லி அணி, 2012) இந்த இலக்கை எட்டிய வீரர் என்ற பெருமை பெற்றார்.




# சுவாரஸ்யம் இல்லாத சன்ரைசர்ஸ் ஆட்டம்
# ராயுடு சதத்தால் சென்னை இலகு வெற்றி

ராயுடுவின் சிறப்பான சதத்தால் புனேயில் நேற்று மாலை நடந்த ஐபிஎல் போட்டியில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத்தை 8 விக்கெடடுக்களால் எளிதாக வீழ்த்தியது சென்னை சுப்பர் கிங்ஸ்.

சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியின் சுவாரஸ்யமில்லாத துடுப்பாட்டம், எதிரணிக்கு சிரமம் கொடுக்காத பந்துவீச்சு, குழப்பமடைந்த களவியூகம், களத்தடுப்பு ஆகியவை சென்னை அணிக்குச் சாதகமாக மாறி வெற்றியை எளிதாக்கியது.

இந்தியாவில் 11வது ஐ.பி.எல்., 'ரி20' தொடர் நடக்கிறது.

நேற்று புனேயில் நடந்த 46ஆவது லீக் போட்டியில் சென்னை - ஹைதராபாத் அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற சென்னை அணியின தலைவர் தோனி பந்துவீச்சை தேர்வு செய்தார். சென்னை அணியில் கரண் சர்மாவுக்குப் பதில் சகார் வாய்ப்பு பெற்றார். ஹைதராபாத் அணியில் யூசுப் பதானுக்குப்பதில் தீபக் ஹூடா இடம்பிடித்தார்.

**தவான் அரைச்சதம்**

ஹைதராபாத் அணிக்கு ஹேல்ஸ் (2) சொதப்பினார். பின் இணைந்த ஷிகர் தவான், அணித் தலைவர் வில்லியம்சன் அபார ஆட்டத்தை வெளிப்படுத்தினர். ஜடேஜா பந்தை சிக்சருக்கு பறக்கவிட்ட தவான் அரைச்சதம் அடித்தார். வில்லியம்சன் ஐ.பி.எல்., அரங்கில் 10ஆவது அரைச்சதம் எட்டினார். பிராவோ பந்தில் தவான் (79) ஆட்டமிழந்தார். வில்லியம்சன் 51 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். ஷர்துல் தாகூர் 'வேகத்தில்' மணிஷ் பாண்டே (5) திரும்பினார்.


20 ஓவர்கள் நிறைவில் ஹைதராபாத் 4 விக்கெட்டுக்களை இழந்து 179 ஓட்டங்கள் எடுத்தது.

தீபக் ஹூடா (21), சகிப் (8) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் சென்னை அணி சார்பில் அதிகபட்சமாக தாகூர் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

**அபார ஆரம்பம்**

எட்டிவிடும் இலக்கை துரத்திய சென்னை அணிக்கு வோட்சன், ராயுடு ஜோடி அசத்தியது. சந்தீப் பந்தை பவுண்டரிக்கு அடித்த வோட்சன் அரைச்சதம் எட்டினார். இவர் 57 ஓட்டங்களில் ரன்-அவுட்டானார். ரெய்னா (2) ஒற்றை இலக்கில் ஆட்டமிழந்தார். சகிப் பந்துவீச்சில் தொடர்ந்து ஒரு சிக்சர், ஒரு பவுண்டரி அடித்த ராயுடு சதம் எட்டினார். இதன்மூலம், இந்த 'சீசனில்' வோட்சன் (சென்னை), ஹெய்ல் (பஞ்சாப்), ரிஷாப்பிற்குப்பின் (டில்லி) சதம் அடித்த 4 ஆவது வீரரானார்.



சென்னை 19 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை (180) 8 விக்கெட்டுக்களால் இலகுவாக அடைந்தது.

களத்தில் ராயுடு (100), தோனி (20) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.


## 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



**அமரர் பொன்னம்பலம் மகேஸ்வரன்**

**(கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்)**

| வையத்துள் | வானுலகில் |
|---|---|
| 5.10.1959 | 14.04.2018 |

எம் பொன்னம்பலத்து மகேஸ்வரன்
பூ (வு) லகெய்தி
நாவேழு நாட்கள்
நாடித் தூடிப்பின்றி
நாம் இங்கு தவிக்கையில்

எம் குடும்பக் குலவிளக்கு நோயுற்று இருந்த வேளையில் தேவையான உரிய வைத்திய வசதிகள் வழங்கிய யாழ்.போதனா வைத்தியசாலை வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கும் ஈமக்கிரியைகளினை உரியவகையில் நிறைவேற்றிய சமயப் பெரியவர்கள், ஆறுதல்கள், அஞ்சலி உரைகளினை வழங்கிய கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் அதிகாரிகள், பணியாளர்கள் மற்றும் யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள், சக மாணவர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் சிரம் தாழ்ந்த நன்றியறிதல்களை தெரிவிப்பதோடு இன்று (14.05.2018) திங்கட்கிழமை எமது இல்லத்தில் இடம்பெறும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் மற்றும் ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளில் கலந்து கொள்வதோடு தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**(இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்)**

பங்களா வீதி,
சாவகச்சேரி வடக்கு, மீசாலை.

(3964)

இங்ஙனம்
குடும்பத்தினர்













யாழ்ப்பாணத்தில் வடிவமைக்கப்பட்ட கார்களின் கண்காட்சி யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது.யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகத்துறை பணிப்பாளர் சு.கணேசநாதன் தலைமையில் இடம்பெற்ற இக் கண்காட்சியில் **Ultra light Pickup, Solar Powered baby car, Pedal Power car** வகையான கார்கள் காட்சிப்படுத்தப்பட்டதுடன் உடற்பயிற்சி செய்வதற்கான சிறிய நான்கு சில்லு சைக்கிள் போன்று ஓடும் வாகனமும், சிறிய மோட்டார் சைக்கிளும் காட்சிப்படுத்தப்பட்டன.ஓய்வுபெற்ற விரிவுரையாளர் எம்.சரவணபவா ஐயரும் அவருடன் இணைந்து அவரது குழுவினராலும் இவை ஒரு வருடமும் இரு மாதங்களும் ஓய்வு நேரத்தினை ஒதுக்கி உருவாக்கியதாக விரிவுரையாளர் எம்.சரவணபவா ஐயர் தெரிவித்தார்.ஒவ்வொரு வாகனங்களையும் இவரது குடும்ப உறவினர்களின் பிள்ளைகள் செலுத்திக் காட்டினர்.

இவற்றுக்கான சில இயந்திரப்பாகங்கள் ஐந்து சந்தி பழைய இரும்பு கடைகளில் பெற்று உருவாக்கப்பட்டுள்ளன.இக் கண்காட்சியினை சிறுவர்கள் பெரியவர்கள் என பலர் வருகை தந்து பார்வையிட்டதுடன் புகைப்படங்களையும் எடுத்துக் கொண்டனர்.(படங்கள்: ஐ.சிவசாந்தன், பொ.சோபிகா)

# ஐ.தே.க.-சு.க. இணைந்து

## அடுத்த தேர்தலில் போட்டியிடுவது தொடர்பான அரசியல் செயற்பாடுகள் ஆரம்பம்-ராஜித தகவல்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மற்றும் ஐக்கிய தேசியக்கட்சி ஆகியன இணைந்து அடுத்த தேர்தலில் போட்டியிடுவது தொடர்பான அரசியல் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் ராஜித சேனாரட்ன இது சம்பந்தமாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருடன் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது.

கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் தனித்து போட்டி ஸ்ரீயிட்டதன் காரணமாக ஏற்பட்ட தோல்வியை அமைச்சர் ராஜித சேனாரட்ன சுட்டிக்காட்டியுள்ளார்.

தேர்தலில் வெற்றி பெற வேண்டுமாயின் இரண்டு கட்சிகளும் இணைந்து போட்டியிட வேண்டும் என அமைச்சர் யோசனை முன் வைத்துள்ளார்.

எது எப்படி இருந்த போதிலும் ஜனாதிபதியும் பிரதமரும் இது சம்பந்தமான சரியான பதில் எதனையும் வழங்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.(இ-7)

# மரண அறிவித்தல்

## திருமதி. செல்வரத்தினம் செல்லையா



பிறப்பு: 1932.01.11
இறப்பு:2018.05.12

யாழ்.வடமராட்சி அல்வாயை பிறப்பிடமாகவும், இல 278, சில்வா வீதி, வட்டக்கச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் செல்லையா செல்வரத்தினம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) அவர்கள் 2018.05.12 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லதம்பி- சின்னாட்சிபிள்ளையின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்லையா (ஓய்வு பெற்ற ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும் கதிரிப்பிள்ளை-சின்னாட்சி ஆகியோரின் அன்பு மருமகளும் அமரர் பாக்கியம், அமரர் செல்லம்மா, அமரர் சின்னம்மா, அமரர் செல்லத்துரை, அமரர் சின்னத்துரை, சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் லலிதாம்பிகை, ஜெகதாம்பிகை (ஆசிரியர்-கிளி/வட்டக்கச்சி மத்திய வித்தியாலயம்), குகநாம்பிகை (சுவிஸ்), அம்பிகைதாசன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் விக்கிணேஸ்வரன், சேதுகாவலர், கிருஸ்ணலிங்கம் (சுவிஸ்), பேரின்பநாயகி ஆகியோரின் அன்பு மாமியாரும் மதுஷாலினி, நிவேதிகா, சிபானுஜன், தாரணி, மகியா, பிரவீணா, அனோக்சனா, அஸ்வின், அரவிந், தமிழினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 13.05.2018 ஞாயிற்றுக் கிழமை நேற்று அவரது இல்லத்தில் நடைபெற்றது என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

இல 278, சில்வா வீதி,
வட்டக்கச்சி.

தகவல்,
குடும்பத்தினர்.

# இராசி பலன்

**14.05.2018**

சித்திரை 31, திங்கட்கிழமை
சூரிய உதயம் காலை 5.55 மணிக்கு
சதுர்த்தசி முன்னிரவு 7.31 மணிவரை
அச்சுவினி பிற்பகல் 12.02 மணிவரை
சுபநேரம் 11.53-1.23 மணிவரை
இராகுகாலம் 7.23-8.53 மணிவரை
போதாயண அமாவாசை

வளவன்

கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | புத, சூரி, சந் | சுக் | |
| | இராசி பலன் | | ராகு |
| செவ், கேது | | | |
| சனி | | குரு | |

சந்திராஷ்டமம்
அத்தம்,சித்திரை

**மீனம்** — இறை வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், புதிய பொருட் சேர்க்கையுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மேடம்** — உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கனவு பலிதமுண்டு, எதிர்பார்க்காமல் செய்த வேலையொன்றில் கணிசமான ஆதாயம் கிடைக்கும்.

**இடபம்** — சேமிப்பில் சிறிது கரையலாம், பயணத்தால் பலனுண்டு, விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், பக்குவமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள்.

**மிதுனம்** — மற்றவர்கள் பாராட்டும் வகையிலான காரியம் ஒன்றைச் செய்து காட்டுவீர்கள், எண்ணிய காரியங்கள் எளிதில் கைகூடும், வருமானம் உயர்வடையும் நாள்.

**கும்பம்** — முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும், உடன் பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம்.

**கடகம்** — தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும், வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள்.

**மகரம்** — பிறர் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம்.

**சிம்மம்** — சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பேச்சில் இனிமை ஏற்படும், வீட்டைச் சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள்.

**தனுசு** — கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், பிள்ளைகள் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**விருச்சிகம்** — செய்தொழில் மேன்மையுண்டு, புதிய பொருட்களை வாங்குவதில் ஆர்வப்படுவீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**துலாம்** — குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பயணங்கள் கைகூடும், போசன சுகமுண்டு.

**கன்னி** — கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம், குடும்ப பெரியவர்கள் உங்கள் செயற்பாடுகளில் குறை கண்டு கூறலாம்.

## முள்ளிவாய்க்கால் எமது இனத்திற்கு ஓர் பாரிய சமூகவடு

# வன்னி இறுதிப் போர் அவலம் நிரந்தர விழிவெண்படலத்தை ஏற்படுத்தியுள்ளது

## மருத்துவர் சி.யமுனானந்தா சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

முள்ளிவாய்க்கால் அவலம் எமது இனத்திற்கு ஓர் பாரிய சமூக வடு. மனவடு என்பவற்றோடு சுவாசவடு, புற்றுவடு, விழிவடு என இனப்படுகொலையின் எச்சங்களாக அமைந்துள்ளது என்று சுட்டிக்காட்டியுள்ள மருத்துவர் சி.யமுனானந்தா, வன்னிப் போர் நிரந்தர விழி வெண்படல வடுவினை ஏற்படுத்தியுள்ளமை பற்றிய விழிப்புணர்வு அனைவருக்கும் ஏற்படல் வேண்டும் எனவும் அறிவுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

2008 - 2009 வன்னிப் பேரவலத்தில் பல்லாயிரக் கணக்கான குண்டுவெடிப்புக்களை விமானத்தில் இருந்தும், எறிகணை வீச்சில் இருந்தும் தமிழ் மக்கள் அனுபவித்தனர்.

இதில் பல்லாயிரக்கணக்கானோர் உயிரிழந்தனர். பல்லாயிரக்கணக்கானோர் காயமடைந்தனர். ஆனால் இவ் அவலம் நிகழ்ந்து 10 வருடங்கள் கழிந்த நிலையிலும், மிகவும் முக்கிய பாதிப்பான மக்களின் பார்வை தொடர்பான பாதிப்பு இதுவரை அடையாளங் காணப்படவில்லை.

குண்டு வெடிப்புக்களினால் பாதிக்கப்பட்ட மக்களில் 80 வீதமானோர் தமது பார்வைப் புலத்தில் பாதிப்பினைப் பெற்றுள்ளனர். கண் உடலின் 0.1 வீத பரப்பளவைக் கொண்டிருந்தாலும் முகத்தில் அதன் அமைவும் வளைவும் சாதாரணமாக எதிர்பார்க்கப்பட்ட அளவிலும், 30வீதம் அதிகமாகக் குண்டுவெடிப்பு தாக்கத்தில் பாதிக்கப்படும் சாத்தியம் உள்ளது.

அந்த வகையில் வன்னியில் உயர் தப்பியவர்களின் பார்வைப்புலத்தில் பல பாதிப்புக்கள் உள்ளன. இவற்றில் 90வீதமானவை விழிவெண்படலத்தில் ஏற்பட்ட பாதிப்புக்கள் ஆகும். இப்பகுதியில் நரம்புகள் அற்றமையால் இப் பாதிப்புக்கள் பொதுவாக வெளியில் தெரிவதில்லை. ஆனால் பின் வரும் நோய்நிலைகள் அவர்களின் பார்வையினைப் பாதிக்கின்றது.



(1) விழிவெண்படல நுண் உலோகத் தாக்கம் (Corneal Nano metastasis)

(2) தாழ்நிலை விழி வெண்படல சேதாரம் (Low Grade-Corneal laceration)

(3) விழிவெண்படல வடு (Corneal Scaring)

இவை குண்டு வெடிப்பின் அதிர்ச்சி அலைகள் மூலம் ஏற்பட்டிருக்கலாம். இவ்வதிர்ச்சி அலைகள் செக்கனுக்கு 10,000 மீற்றர் தொடக்கம், 30,000 மீற்றர் வரை வேகத்தில் தாக்கி கண்ணில் மறைமுகப் பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது.

மேலும் இதனால் விழித்திரையில் நீர் அழுக்கம் அதிகரித்தல் (Macular oedema) விழித்திரையில் பரவிய குருதிக்கசிவு (diffused retinal haemorrhage) என்பனவும் ஏற்பட சாத்தியம் உள்ளது.

மக்கள் கூட்டம்மீது எறிகணைத்தாக்குதல்கள், விமானத்தாக்குதல்கள் நிகழ்த்தப்பட்டமைக்கு நிரந்தர ஆதாரமாக அக் குண்டுத்தாக்கலில் உயிர்தப்பிய மக்கள் அமைகின்றனர். அவர்களின் கண்களின் விழிவெண்படலத்தில் குண்டுவெடிப்பு அதிர்சி அலைகள் நிரந்தர வடுவினை ஏற்படுத்தி உள்ளது.

மேலும் வெடிப்பின்போது சிதறும் உலோகங்களின் நுண்மங்கள், மண், தூசு என்பன விழிவெண்படலத்தில் படிந்து காணப்படும். விழிவெண்படலத்தின் தடிப்பு, அடர்த்தி, வடிவம், பாதிப்புக்கள் என்பனவற்றை விழிவெண்படல முப்பரிமாண அளவிடலுக்கான (Corneal Tomography) தளக் கதிர் படம் மூலம் அதாவது நவீன தொழில்நுட்பம் மூலம் (Oculus Pentacam) எந்த வித பாதிப்பும் இன்றி அறியலாம்.

இதன் மூலம் எமது சமூகத்தில் வன்னி அவலத்தில் பாதிக்கப்பட்டவர்களின் கண்களைப் பரிசோதித்து அவர்களுக்கு உரிய சிகிச்சையினைச் செவ்வனே செய்யலாம்.

மேலும் கட்புரைச் சத்திரச் சிகிச்சைக்கு முன்னரும் (Cataract) Oculus Pentacam மூலம் விழிவெண்படலத்தின் தன்மையை அறிதல் வேண்டும். இதன்போது மக்களின் விழிவெண்படல அசாதாரண நிலைக்கு எமது பிரதேசத்தில் நிகழ்கின்ற குண்டுவெடிப்புப் பாதிப்புக்களையும் கருத்தில் எடுக்க வேண்டும். வன்னி அவலம் நிர்ந்தர விழிவெண்படல வடுவினை ஏற்படுத்தியுள்ளமை பற்றிய விழிப்புணர்வு அனைவருக்கும் ஏற்படல் வேண்டும்.

முள்ளிவாய்க்கால் அவலம் எமது இனத்திற்கு ஓர் பாரிய சமூகவடு, மனவடு என்பவற்றோடு சுவாசவடு, புற்றுவடு, விழிவடு என இனப்படுகொலையின் எச்சங்களாக அமைந்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ)





சங்கானை பிரதேச இளைஞர் சம்மேளனத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் மற்றும் நிர்வாகத் தெரிவு என்பன சங்கானை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் வடமாகாண இளைஞர் சேவைகள் நிர்வாக உத்தியோகத்தர் மாவட்ட இளைஞர் சம்மேளனத்தின் தலைவர் மற்றும் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்கள், இளைஞர் சேவை அதிகாரிகள், இளைஞர் கழகங்களைச் சேர்ந்த நிர்வாக உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். 2018/ 2019 ஆம் ஆண்டுக்கான சங்கானை இளைஞர் சம்மேளன தலைவராக இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் அ.யோ.இன்பராஜ் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பாலம் சேதம்; மக்கள் சிரமம்



(பொற்பதி)

மாமுனைச் சந்தியிலிருந்து கிழக்குப் பக்கமாக செம்பியன்பற்று தெற்கில் 500 மீற்றர் தூரத்தில் காணப் படும் பாலமானது சேதமடைந்து பாவிக்க முடியாத நிலையில் காணப்படுகின்றது. இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

பல வருட காலமாக இப் பாலம் திருத்தப்படாமல் காணப்படுவதனால் இப் பகுதி மக்கள் பல பிரச்சினைகளை எதிர்நேக்கி வருவதாக தெரிவித்துள்ளனர்.

வயல் நிலங்கள் விவசாய நிலங்களிலுள்ள நீரினை வெளியேற்றுவதற்கும் தாழ் நிலப்பகுதியிலுள்ள நீர் வெளியேறுவதற்கும் இப்பாலம் பெரும் பங்கு வகித்ததாகத் தெரிவிக்கும் மக்கள் பாலம் பழுதடைந்த காலம் முதல் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரிவித்தனர்.

எனவே இப் பாலத்தினை விரைவாகத் திருத்தம் செய்து மக்களின் வாழ்க்கையினையும் வயல் மற்றும் விவசாய நடவடிக்கையினையும் சிறப்புற மேற்கொள்வதற்கு உரிய தரப்பினர் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-64)



தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் ஏற்பாட்டில் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் அதிபர் ம.மணிசேகரம் தலைமையில் விளையாட்டு விழா இடம்பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினராக தெல்லிப்பழை கோட்டக்கல்விப் பணிப்பாளர் எம்.ஆனந்தகுமார் கலந்து கொண்டார். இதில் தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன. (படங்கள்:-ஈச்சமோட்டை செய்தியாளர்)



புலோலி புற்றளை மகா வித்தியாலய அதிபர் ஆறுமுகம் சிவநாதனின் மணிவிழா அண்மையில் இடம்பெற்றது. விழா நாயகனை வாழ்த்தி வடமாகாண கல்வி அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் கௌரவிப்பு நிகழ்வையும் படங்களில் காணலாம்.

# தகுதியானவர்கள் பலர் உள்வாங்கப்படவில்லை

## மகரூப் குற்றச்சாட்டு

(கொழும்பு)

கிழக்கு மாகாண கல்வி அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள தொண்டராசிரியர்களின் பெயர்ப்பட்டியலில் தகுதியுள்ள பலர் உள்வாங்கப்படவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்தார்.

இந்நியமனங்கள் தொடர்பாக நேற்று ஊடகங்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யுத்த காலங்களில் பல கஷ்டங்களுக்கு மத்தியில் கற்பித்த நியமனத்துக்கு தகுதிகளை கொண்ட பலர் இந்தப் பட்டியலில் உள்வாங்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு பரவலாக முன்வைக்கப்படுகிறது.

ஆகவே யாருக்கும் அநீதி ஏற்படாவண்ணம் தகுதி உள்ளவர்களை தெரிவு செய்ய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசத்துடன் விரைவில் கலந்துரையாடவுள்ளேன்.



இதற்கு முன் தகுதியுள்ள பலருக்கு நேர்முகத் தேர்வுக்கு கடிதம் அனுப்பப்படாத சந்தர்ப்பத்தில் கல்வி அமைச்சரிடம் நான் விடுத்த வேண்டுகோளுக்கமைய கடிதம் அனுப்பப்படாதவர்களும் நேர்முகத்தேர்வுக்கு தோற்றும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது.

மேலும் வெளியிடப்பட்டுள்ள பெயர் விபரங்களின் வெளிப்படைத் தன்மை பற்றியும் தற்போது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. இது தொடர்பாகவும் ஆராயப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மத்திய வங்கி பிணைமுறி விவகாரம்

# மோசடியுடன் தொடர்புடையோருக்கு நிச்சயம் தண்டனை கிடைக்கும்

## ஐ.தே.க.அமைச்சர் நவீன் உறுதி

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி சம்பவத்துடன் தொடர்புடையவர்களுக்கு நிச்சயம் தண்டனை கிடைக்கப்பெறும் என அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நுவரெலியாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் வைத்து அவர் இதனைத் தெரிவித்தார்.

கட்சிக்காக எதனையும் செய்யத் தயாராக இருப்பதாகவும், ரணில் விக்கிரமசிங்கவை விடவும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதமர் பதவியே முக்கியமானது எனவும் அவர் தெரிவித்தார்.

அண்மைக்காலத்தில் மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி தொடர்பான குற்றச் சாட்டு ஐக்கிய தேசிய கட்சியின் மீது சுமத்தப்பட்டுள்ளது.

அந்த குற்றச்சாட்டு தொடர்பில் ஆராய்ந்து தவறிழைத்தவர்களுக்கு நிச்சயம் தண்டனை பெற்றுக்கொடுக்கப்படும் எனவும் அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்தார். (இ-7)



# அரசாங்கத்திலிருந்து விலகியவர்கள் சிறப்புரிமைகளை அனுபவிக்கின்றனர்

## ஐ.தே.க. குற்றச்சாட்டு

(கொழும்பு)

பிரதமர் உட்பட அரசாங்கத்திற்கு எதிராக கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளித்து, அரசாங்கத்தில் இருந்து விலகிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பாலானவர்கள் இன்னும் அமைச்சருக்கான வசதிகளை அனுபவித்து வருவதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

அரசாங்கத்தில் இருந்து விலகி, எதிர்க்கட்சி வரிசையில் அமரப் போவதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 16 பேர் அணியினர், கடந்த ஏப்ரல் 19ஆம் திகதி நாடாளுமன்ற செயலாளருக்கு கடிதம்ஒன்றை அனுப்பியிருந்தனர்.

எனினும் இவர்களில் பலர் அமைச்சராக பதவி வகித்த காலத்தில் பயன்படுத்திய வாகனங்கள் உள்ளிட்டவற்றை மீளக் கையளிக்காது தொடர்ந்தும் பயன்படுத்தி வருவதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம்சாட்டியுள்ளது.

அத்துடன் பல அமைச்சுக்களில் இருந்து பொருட்கள் காணாமல் போயுள்ளதாக தெரியவந்துள்ளது எனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க குற்றம்சாட்டியுள்ளார்.

அதேவேளை பிரதி சபாநாயகர் பதவியில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ள திலங்க சுமதிபால, அறிவித்து சுமார் ஒரு மாதகாலம் கடந்துள்ள நிலையிலும் பிரதி சபாநாயகருக்கான சிறப்புரிமைகளை அனுபவித்து வருவது பாரதூரமானது எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# சமுர்த்திக் கொடுப்பனவு குறைக்கப்படமாட்டாது

## அமைச்சர் ஹரிசன் தெரிவிப்பு

(கொழும்பு)

தற்போதைய அரசாங்கத்தின் கீழ் சமுர்த்திக் கொடுப்பனவுகள் எந்த வேளையிலும் குறைக்கப்படமாட்டாது என்று சமூக வலுவூட்டல்கள் அமைச்சர் பி.ஹரிசன் தெரிவித்துள்ளார்.

மேலும் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் பேருக்கு சமுர்த்தி நிவாரணத்தை பெற்றுக் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (இ-7)




# மணிவிழா நாயகியை வாழ்த்துகின்றோம்

## திருமதி. கலைஅரசி சிவகுமார்

இசை ஆசிரியை (SLTS-2) பிரதி அதிபர்,(யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை)



*சேவைப்பதிவுகள்:-*

திருமலை மேற்கு தமிழ் மகா வித்தியாலயம் 15.10.1979-31.12.1980

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை 01.01.1981-05.06.1982

கம்பகா/சென் ஆன்ஸ் பாலிகா மகா வித்தியாலயம் 06.06.1982-19.03.1990

யா/செங்குந்தா இந்துக் கல்லூரி 20.03.1990 - 26.04.2001

யா/நல்லூர் ஸ்தான சி.சி.த.க பாடசாலை 27.04.2001 - 08.01.2009

யா/நல்லூர் இந்து தமிழ் பெண்கள் பாடசாலை 09.01.2009 - 22.06.2010

யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை 23.06.2010 - இன்று வரை

*சங்கீத ஆசிரியராகவும் நூலகப் பொறுப்பாசிரியராகவும் பிரதி அதிபராகவும் சேவையாற்றியதுடன் சமய, கலை,கலாசார, பண்பாட்டு விழுமியங்களை போற்றி வளர்த்து மாணவர்களும் சமூகமும் சாதனை படைக்க வழிகாட்டி இன்று 14.05.2018 திங்கட்கிழமை மணிவிழாக் கொண்டாடும் மணிவிழா நாயகியின் ஓய்வுக்காலம் வளமும் நலனும் மகிழ்வும் நிறைந்ததாக நிலைக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.*

ஆசிரியர் நலன்புரிக் கழகம் - யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை

## அன்னையர் தினத்தில்

# காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள்; மனிதசங்கிலிப் போராட்டமும் கவனயீர்ப்பும்







(குருமன்காடு)

வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் அன்னையர் தினத்தில் கவனயீர்ப்பு போராட்டத்தையும் மனிதச் சங்கிலிப் போராட்டத்தையும் நேற்று முன்னெடுத்தனர்.

வவுனியாவில்நேற்று 444 ஆவது நாளாக போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் அன்னையர்தினமான நேற்று தமது தமது பிள்ளைகள் எங்கே என நீதி கேட்டு கவனயீர்ப்பு ஊர்வலத்திலும், மனிதசங்கிலிப் போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

வவுனியா, யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த விஜய் நற்பணி மன்ற இளைஞர்களின் பங்களிப்புடன் வவுனியா கந்தசாமி ஆலயத்தில் இடம்பெற்ற வழிபாடுகளைத் தொடர்ந்து பசார் வீதி வழியாக சென்ற காணாமல் போனோரின் கவனயீர்ப்பு ஊர்வலம், ஹொரவப்பொத்தானை வீதியை அடைந்து அங்கிருந்து கண்டி வீதி வழியாக காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டதளத்தை வந்தடைந்தது.


இதன்பின் மனிதசங்கிலிப் போராட்டம் இடம்பெற்றது. இதன்போது கருத்து தெரிவித்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், நேற்று உலக அன்னையர்தினம் அனைத்து அன்னையர்களுக்கும் தமது பிள்ளைகள் வாழ்த்துக்களை தெரிவித்தார்கள். ஆனால் நாம் எமது பிள்ளைகளை தேடிக் கொண்டிருக்கின்றோம். எமக்கு அந்த பாக்கியம் கிடைக்கவில்லை என கண்ணீர்விட்டு அழுதனர்.


விஜய் நற்பணி மன்ற உறுப்பினர்கள் கருத்து தெரிவிக்கையில் இந்த தாய்மாரின் வேதனை புரிகிறது. அன்னையர் தினத்தில் நாம் அனைவரும் ஒன்று கூடி இந்த தாய்மாரின் போராட்டத்திற்கு நீதி கிடைக்க வேண்டும் என குரல் கொடுத்துள்ளோம். இவர்களுக்கு அவர்களது பிள்ளைகள் கிடைக்க வேண்டும் எனத் தெரிவித்தனர்.

இதேவேளை, போதையற்ற தேசத்தை கட்டியெழுப்போம் எனவும் இதன்போது அன்னையர்கள் முன்னிலையில் இளைஞர்கள் சத்தியப்பிரமாணம்செய்துகொண்டனர்(2-250)

# வடிகால், சீரமைப்புப்பணி வவுனியாவில் மந்தகதியில்

## பொதுமக்கள், வர்த்தகர்கள் சுட்டிக்காட்டு





(புனிக்கன்குளம்)

வவுனியாவில்கால்வாய்கள் வடிகால்கள் என்பன சீரமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றது. இந்நிலையில் அப்பணிகள் மந்த நிலையில் இடம்பெற்று வருவதால் பொதுமக்கள், வர்த்தகர்கள் ஆகியோருக்கு பெரும் அசௌகரியங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பாக முதலாம் , இரண்டாம் குறுக்குத் தெருவின் பின்பகுதியிலுள்ள சூசைப் பிள்ளையார்குள வீதிகளில் இந்நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போது மாலை வேளைகளில் பெய்துவரும் மழையினால் குப்பைகள் வடிகால்களுக்குள் சென்று அடைத்துள்ளதால் துர்நாற்றம் வீசி வருகின்றது. இதனால் அப்பகுதியால் போக்குவரத்தை மேற்கொள்ள முடியாமலுள்ளதாகவும் வர்த்தக நிலையங்களுக்கு பொதுமக்கள் சென்றுவருவதில் பெரும் இடரினை எதிர்கொண்டுள்ளதுடன் ஒரு மாதத்திற்கு மேலாக இவ்வாறான நிலை காணப்படுகின்றது. இதனை உடனடியாக சீர் செய்வதுடன் பொதுமக்களின் பாதுகாப்பான பயணத்தை உறுதிப்படுத்துமாறு வியாபார நிலைய உரிமையாளர்கள் கோரியுள்ளார்கள். (2-281)

# 300 பொலிஸார் இலஞ்சம் பெற்ற விவகாரம்; கோத்தாவை நோக்கி திரும்பும் விசாரணை



(கொழும்பு)

சர்ச்சைக்குரிய அவன்கார்ட் கடற்பாதுகாப்பு நிறுவனத்தின் தலைவர் நிஸங்க சேனாதிபதியிடம் இருந்து சுமார் 300 இற்கும் அதிகமான பொலிஸார் இலஞ்சம் பெற்றுள்ளமை தொடர்பான விசாரணைகளை புலனாய்வுத் துறையினர் மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நிஸங்க சேனாதிபதியிடம் இருந்து பணம் பெற்றுக்கொண்ட பொலிஸ் உத்தியோகஸ்தர்களின் பெயர்ப் பட்டியல் குற்றத்தடுப்பு பிரிவு மற்றும், இலஞ்ச ஊழல் ஒழிப்பு பிரிவினரிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையக வட்டாரச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு சட்டவிரோதமாக பணம் பெற்றுக்கொண்ட பொலிஸ் அதிகாரிகளில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களும் உள்ளடங்குவதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பாக விரைவில் நேரடி விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும், இதன்போது இலஞ்சம் பெற்றுக்கொண்ட பொலிஸாரிடம் வாக்குமூலங்கள் பெற்றுக்கொள்ளப்படவுள்ளதாகவும் பொலிஸ் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேபோன்று நிஸங்க சேனாதிபதி எந்த செயற்பாட்டிற்காக பொலிஸாருக்கு இலஞ்சம் கொடுத்தார்? அதன் மூலமாக நிறைவேற்றப்பட்ட காரியம் என்ன? என்பது தொடர்பாகவும் விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவும் அவன்கார்ட் ஆயுத கொள்வனவு விவகாரத்தில் சந்தேக நபராக காணப்பட்டு வருகின்றார்.

எனினும் இந்த விடயம் தொடர்பிலான விசாரணைகள் இழுபறி நிலையிலேயே காணப்படுகின்றன.

எனினும் தற்போது கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில் விசாரணைகள் முன்னெடுக்கப்படும் போது அதன் காரணமாக கோத்தபாய ராஜபக்ஷவும் சிக்கல்களை சந்திக்க கூடும் எனவும் கூறப்படுகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது. (2-7)

# முல்லைத்தீவு மாவட்டத்தின் அபிவிருத்திக்குழு கூட்டங்கள்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மூன்று பிரதேச செயலகங்களின் அபிவிருத்திக் குழு கூட்டங்கள் இன்று நடைபெறவுள்ளன.

இதற்கமைய புதுக்குடியிருப்பு பிரதேச செயலக அபிவிருத்திக் குழு கூட்டம் இன்று காலை 9.30 மணிக்கும், கரைதுறைப்பற்று பிரதேச செயலக அபிவிருத்திக் குழுக் கூட்டம் இன்று முற்பகல் 11 மணிக்கும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக அபிவிருத்திக்குழு கூட்டம் இன்று பிற்பகல் 2 மணிக்கும் அந்தந்த பிரதேச செயலக மாநாட்டு மண்டபங்களில் அபிவிருத்திக் குழு இணைத் தலைவர்கள் தலைமையில் நடைபெறும். (2-281)

# துப்பாக்கியுடன் ஒருவர் கைது



(கொழும்பு)

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட துப்பாக்கி மற்றும் ரவைகளுடன் நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தங்காலை ஒழுங்கமைக்கப்பட்ட குற்றத்தடுப்பு பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய நேற்றுக்காலை சூரியவெவ - பெத்தேவெவ - நுகேகந்த பகுதியில் வைத்து பிரஸ்தாப நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

42 வயதான அதே பிரதேசத்தை சேர்ந்த நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதான நபர் அம்பாந்தோட்டை நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார். (2-7)

# ஒரு கோடி ரூபாய் பெறுமதியான ஹெரோயின் போதைப்பொருளுடன் இருவர் பளையில் கைதாகினர்

(மல்லாவி )

பளைப் பொலிஸ் நிலையப் பிரிவில் ஏ- 09 வீதி ஊடாக யாழ்ப்பாணத்தில் இருந்து கிளிநொச்சி நோக்கி பயணித்துக் கொண்டிருந்த ஹயஸ் ரக வாகனத்தை கரந்தாய்க் குளப் பகுதியில் தடுத்து நிறுத்தி சோதனையிட்ட அதிரடிப் படையினர் சுமார் ஒரு கோடி ரூபாய் பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருள் கடத்திச் செல்லப் பட்டமை கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் கடத்தலுக்கு பயன்படுத்திய ஹயஸ் ரக வாகனம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதுடன் சந்தேகத்தின் அடிப்படையில் வாகனத்தின் சாரதி உட்பட இரண்டு பேரை கைது செய்துள்ளதாக பளைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சந்தன பண்டார தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் வேளை நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கிளிநொச்சி பகுதியில் உள்ள அதிரடிப் படையினருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து ஏ-09 வீதியில் உள்ள கரந்தாய் குளப் பகுதியில் விசேட அதிரடிப்படையினர் வீதிப் பரிசோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது சந்தேகத்திற்கிடமான வகையில் பயணித்த ஹயஸ் ரக வாகனத்தை தடுத்து நிறுத்தி சோதனையிட்ட போதே ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், சந்தேகத்தின் அடிப்படையில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு பளை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதான சந்தேக நபர்களிடம் விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் விசாரணைகளின் பின்னர் தடயப் பொருட்களுடன் சந்தேக நபர்களை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளதாக பளைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ளார். (2-312-15)




# கொய்கா நிறுவனத்தின் 7.5 மில்லியன் நிதியில் கிளிநொச்சியில் 13 பாடசாலைகள் அபிவிருத்தி

## கல்வி இராஜாங்க அமைச்சர் உறுதி



(கண்டாவளை)

தென்கொரியாவின் கொய்கா அபிவிருத்தி செயற்றிட்டத்தின் மூலம் 7.5 மில்லியன் அமெரிக்க டொலர்களை கல்வி அமைச்சிற்கு நன்கொடையாக வழங்கப்படவுள்ளது. இந்த நிதியானது முழுமையாக கிளிநொச்சி மாவட்டத்தின் பாடசாலைகளின் அபிவிருத்திக்கு மட்டுமே பயன்படுத்த முடியும் என கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பாடசாலைகளையும் அதன் வளங்களையும் அபிவிருத்தி செய்வது தொடர்பான கலந்துரையாடல் கல்வி அமைச்சில் இடம் பெற்றது. இந்த கலந்துரையாடலில் கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுசாமி இராதாகிருஸ்ணன், பாராளுமன்ற உறுப்பினர்களான சாள்ஸ் நிர்மலநாதன், சி.சிறீதரன்,கல்வி அமைச்சின் தமிழ் பிரிவு பணிப்பாளர் சு.முரளிதரன், உட்பட தென்கொரிய நாட்டின் கொய்கா நிறுவன அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த கல்வி இராஜாங்க அமைச்சர்,இந்த நிகழ்ச்சி திட்டத்தின் அடிப்படையில் கிளிநொச்சி மாவட்டத்தில் 13 பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

இதன்படிபளை, கண்டாவலை, கரைச்சி, பூநகரி ஆகிய பிரதேசங்களை சேர்ந்த கிளிநொச்சி இந்து ஆரம்ப பாடசாலை, பிரமந்தனாறு மகா வித்தியாலயம், இயக்கச்சி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, முழங்காவில் ஆரம்ப வித்தியாலயம் ஆகிய நான்கு பாடசாலைகளும் மாதிரி பாடசாலைகளாகவும், சென்.தெரேசா பெண்கள் கல்லூரி, கனகாம்பிகை குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, சிவபாத கலையகம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, இராமநாதபுரம் (கிழக்கு) அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, பளை இந்து ஆரம்ப பாடசாலை, சோரன்கட்டு இலங்கை கிறிஸ்தவ தமிழ் கலவன் பாடசாலை, முக்கொம்பன் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, கரியாலை நாகபடுவான் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, இரணைதீவு ரோமன் கத்தோலிக்க கலவன் பாடசாலை ஆகிய ஒன்பது பாடசாலைகளும் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

இந்த அபிவிருத்தியில் பாடசாலை கட்டடங்கள், விசேட தேவை உடையோருக்கான வகுப்பு உபகரணங்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், கல்வி பணிப்பாளர்கள் ஆகியோருக்கான வெளிநாட்டு உள்நாட்டு பயிற்சிகள், மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டல், கணனி தொழில்நுட்பம் ஆகிய விடயங்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. இந்த திட்டத்திற்கு கல்வி இயல் அளவை மேம்படுத்தும் செயற்றிட்டம் என பெயரிடப்பட்டுள்ளது. இதற்கான ஒப்பந்தம் மிக விரைவில் கைச்சாத்திடப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-315)

# பொதுசன மாதாந்த கொடுப்பனவுகள் 4ஆயிரத்து 31 பேருக்கு வழங்கப்படுகிறது

## கரைச்சி பிரதேச புள்ளிவிபரத் தகவல்படி

(கண்டாவளை)

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேசத்தில் நான்காயிரத்து 31பேருக்கு பொதுசன மாதாந்தக்கொடுப்பனவுகள் வழங்கப்படுவதாக கரைச்சிப் பிரதேச செயலகப்புள்ளி விபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் வசிக்கும் நான்காயிரத்து 31 பேருக்கு பொதுசன மாதாந்த உதவிக்கொடுப்பனவு வழங்கப்பட்டு வருவதாகவும் இதனை விட 143 பேருக்கு புற்று நோய்க்கான கொடுப்பனவும் 12 பேருக்கு காசநோய்க்கான கொடுப்பனவும் சிறுநீரகப் பாதிப்புக்குள்ளாகிய 161 பேருக்கும் முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்ட 63 பேருக்கும் 70 வயதிற்கும் மேற்பட்டவர்களுக்கான கொடுப்பனவின் கீழ் இரண்டாயிரத்து 106 கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டு வருவதாக கரைச்சிப் பிரதேச செயலகப் புள்ளிவிபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

# எமது பிள்ளைகள் இல்லையெனின் காணாமல் போனோர் அலுவலகம் எதற்கு?

## வவுனியாவில் உறவுகள் கேள்வி




(குருமன்காடு)

கடந்த 2009 ஆம் ஆண்டு யுத்தத்தில் தமிழர்கள் அழியும் போது நிமல்கா பெர்னாண்டோ எங்கிருந்தார் என வவுனியாவில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் நேற்று முன்தினம் காணாமல் போனோர் அலுவலகத்தின் ஏற்பாட்டில் பொதுமக்கள் மற்றும் பொது அமைப்புகளோடு இணைந்து கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றிருந்தது. அதற்கு எதிர்ப்பு தெரிவித்து வவுனியா மாவட்டத்தில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் மன்னார் சென்று குறித்த கூட்டம் நடைபெறும் இடத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

அதன் பின்னர் நேற்று முன்தினம் மாலை வவுனியாவில் ஊடகவியலாளர்களை சந்தித்து கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தனர். அவர்கள் மேலும் தெரிவித்ததாவது.

நாம் காணாமல்போனோர் அலுவலகத்தை கடுமையாக எதிர்ப்பதுடன் அதில் எமக்கு துளியளவும் நம்பிக்கை இல்லை. காணாமல்போனோர் என்று யாரும் இல்லை என்று ஜனாதிபதி முன்னர் கூறி இருந்தார். பின்னர் இந்த அலுவலகத்தை அமைத்துள்ளார். எமது பிள்ளைகள் உண்மையில் இல்லை என்றால் இதனை அமைக்க வேண்டிய தேவை என்ன?

அத்துடன் ஜெனிவா மனித உரிமைகள் பேரவையால் இராணுவத்தால் பலாத்காரம் செய்யப்பட்ட பெண்களை நேரடியாக அழைத்து வருமாறு கூறி இருந்தனர். அதற்கு காணாமல் போனோர் குறித்து ஆராயும் குழுவின் ஆணையாளரான நிமல்கா பெர்னாண்டோ இராணுவ வீரர் ஒருவரின் மனைவியை அழைத்து சென்று பாதிக்கப்பட்டவர் என்று கூறியுள்ளார். எனவே இவ்வாறான ஒருவரை நாம் எவ்வாறு நம்புவது. அவர் பொய் சாட்சியத்தை அழைத்து சென்று சர்வதேசத்தையும் ஏமாற்றியுள்ளார். எனவே இவ்வாறானவர்கள் மூலம் எமக்கு தீர்வு கிடைக்கப் போவதில்லை.

2009ம் ஆண்டு நாட்டில் தமிழர்கள் அழியும் போது நிமல்கா எங்கிருந்தார்? மனித உரிமை பேசும் சிங்கள அமைப்புகள் அப்போது என்ன செய்தன? இதனால் இந்த அரசையும் அதனுடைய அலுவலகத்தையும் நாம் இனியும் நம்பப் போவதில்லை என்று கூறினர். மேலும் இன்றுடன் அவர்களின் போராட்டம் 445 நாட்களை எட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது . (2-250)

# வவுனியாவில் வடமாகாண பொலிஸ் விளையாட்டு விழா

(குருமன்காடு)

வடக்கு மாகாண பொலிஸ் விளையாட்டு விழா எதிர்வரும் 17 ஆம் திகதி வியாழக்கிழமை இடம் பெறவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கிடையிலான விளையாட்டுத் திறனை மேம்படுத்தும் நோக்கோடு நடத்தப்படும் இவ் விளையாட்டுப் போட்டியில் வடக்கு மாகாணத்தில் உள்ள ஆறு பொலிஸ் டிவிசனைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் கலந்து கொள்ளவுள்ளதுடன் இப்போட்டிகள் பொலிஸ்மா அதிபரின் வழிநடத்தலில் வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

17 ஆம் திகதி மற்றும் 19 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ள இவ் விளையாட்டு விழா வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் ரொசான் பெர்னாண்டோ தலைமையில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் வவுனியா மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் மற்றும் வட மாகாணத்தை சேர்ந்த உயர் பொலிஸ் அதிகாரிகளும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந் நிலையில் 19 ஆம் திகதி 6 பொலிஸ் டிவிசனைச் சேர்ந்த பொலிஸாரின் அணிவகுப்பும் நகரசபை மைதானத்தில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது (2-250)

# வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் எக்ஸ்ரே இயந்திரம் திருத்தம் செய்யப்படுகின்றது

## பணிப்பாளர் அகிலேந்திரன் தெரிவிப்பு

(பணிக்கன்குளம்)

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் எக்ஸ்ரே இயந்திரம் கடந்த ஐந்து நாட்களாக பழுதடைந்து காணப்படுவதனால் பல்வேறு சிரமத்திற்குள்ளாகுவதாகவும் நோயாளிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதனால் தாங்கள் வைத்தியசாலைக்கு அருகில் காணப்படும் தனியார் வைத்தியசாலைகளில் 800 ரூபா தொடக்கம் ஆயிரம் வரையிலான பணத்தை செலுத்தி எக்ஸ்ரே எடுக்க வேண்டியுள்ளதாகவும் பணம் இல்லாமையினால் அயலவர்களிடம் கடன் பெற்றே எக்ஸ்ரே எடுக்க வேண்டியுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் கு.அகிலேந்திரனிடம் தொடர்பு கொண்டு வினவிய போது.

வைத்தியசாலையில் கடந்த ஐந்து நாட்களாக எக்ஸ்ரே இயந்திரம் பழுதடைந்து காணப்படுகின்றது. அதனை சீர் செய்வதற்குரிய செயற்பாடுகள் நடைபெறுகின்றன. புதியதொரு எக்ஸ்ரே இயந்திரம் சில நாட்களில் வைத்தியசாலைக்கு கிடைக்கப் பெறும்.

நோயாளிகளை வைத்தியசாலையில் அனுமதிந்து நோயாளர்காவு வண்டி மூலம் செட்டிகுளம் வைத்தியசாலைக்கு அழைத்துச்சென்று எக்ஸ்ரே எடுப்பதாகவும் மேலதிக தகவல் தேவையெனின் நோயாளர்கள் தன்னை நாடுமாறும் அவர் கேட்டுள்ளார். (2-281)

# ஜனாதிபதி வேட்பாளருக்கு ரணிலே தகுதியானவர்

## மங்கள பரிந்துரை



(கொழும்பு)

2020ஆம் ஆண்டு நடை பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில், ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் களமிறக்கக்கூடிய தகுதியான வேட்பாளர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே என நிதி மற்றும் ஊடகத் துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

மாத்தறை மாவட்டத்தில், ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவான உறுப்பினர்களுடனான சந்திப்பில் நேற்று முன்தினம் பங்கேற்று கருத்து வெளியிட்ட அவர், ஒன்றிணைந்த எதிரணியைச் சேர்ந்த சிலருக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்தில் மாற்றம் தேவையெனவும், அது நகைப்புக்குரிய விடயம் எனவும் தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர்; "1980களில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவை பதவி விலகுமாறு அநுர பண்டாரநாயக்க வலியுறுத்தியிருந்தார். எனினும் அந்த சந்தர்ப்பத்தில் ஸ்ரீமாவோ கட்சியின் தலைமைப் பதவியில் இருந்து விலகவில்லை. அது பதவி ஆசையில் அல்ல, கட்சியை சரியான தலைவரிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற எண்ணம்தான்.

1998 - 99 காலப்பகுதியில் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க இரண்டாவது தடவையாக ஜனாதிபதித் தேர்தலில போட்டியிட்ட சந்தர்ப்பத்தில், "ரணிலுக்கு முடியாது" என்ற தலைப்பில் சுவரொட்டிகளை நானே ஒட்டினேன். காரணம் அந்த சந்தர்ப்பத்தில் எமக்கிருந்த சவால் ரணிலே, அவரால் முடியுமென நாம் நம்பினோம். அதனாலேயே நாங்கள் சுவரொட்டிகளை ஒட்டினோம்" எனவும் மங்கள சமரவீர மேலும் தெரிவித்தார். (இ-7)

# பொலிஸ்மா அதிபருக்கு எதிராக பொலிஸ் ஆணைக்குழு முறைப்பாடு



(கொழும்பு)

தேசிய பொலிஸ்ஆணைக் குழுவின் உத்தரவுகளை பொலிஸ்மா அதிபர் பின்பற்றாது புறக்கணித்து வருகின்றமை தொடர்பில் ஜனாதிபதிக்கும், அரசியலமைப்புச் சபைக்கும் முறைப்பாடு செய்ய பொலிஸ் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

கடந்த 2018 ஆம் ஆண்டின் ஆரம்பம் முதல் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் விடுக்கப்பட்ட பணிப்புரைகள் பல பொலிஸ் திணைக்களத்தினால் செயற்படுத்தப்படவில்லையெனவும் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

இதனால், தமது பொறுப்புக்களை நிறைவேற்ற முடியாத ஒரு நிலைமை தோற்றம்பெற்றுள்ளதாகவும்பொலிஸ் ஆணைக்குழுவின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் நியமனம் தொடர்பில் பொலிஸ்மா அதிபருக்கும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கும் இடையில கருத்து முரண்பாடுகள் நிலவியதாகவும் கூறப்படுகின்றது. (இ-7)

# முகாமைத்துவ உதவியாளர் சேவையில் புதிதாக 5000பேர்

(கொழும்பு)

அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையில் மேலும் ஐயாயிரம் பேர் புதிதாக சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

அண்மையில் நடைபெற்ற வரையறுக்கப்பட்ட மற்றும் போட்டி பரீட்சையின் ஆகக்கூடிய புள்ளிகளை பெற்ற பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சையின் மூலம் இதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அரச நிர்வாக அமைச்சின் ஒன்றிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் கே.வி.பி.எம்.ஜி.கமகே தெரிவித்தார்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அலரி மாளிகையில் இன்று திங்கட்கிழமை காலை வழங்கப்படவுள்ளது.

அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டாராவும் இந்த நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளார்.

சேவையில் இணைத்துக் கொள்ளப்படுவோருக்கு மாவட்ட மட்டத்தில் இரண்டு வார பயிற்சி வழங்கப்படும். இதனைத் தொடர்ந்து நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் நிலவும் வெற்றிடங்களுக்கு இவர்கள் நியமிக்கப்படுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

இவர்கள் சேவையில் இணைத்துக் கொள்ளப்படுவதன் மூலம் கடந்த வருடத்தில் ஜனவரி 30ஆம் திகதி அளவில் அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையில் நிலவிய அனைத்து வெற்றிடங்களும் முழுமைப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ-7)

# இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை குடிசன மதிப்பீடு

(கொழும்பு)

இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை நாட்டில் வீடுகள் மற்றும் குடிசன மதிப்பீட்டை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக குடிசன மதிப்பீடு புள்ளிவிபர திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அமர சத்ரசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் குடிசன மதிப்பீடு புள்ளிவிபரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அமர சத்ரசிங்க மேலும் தெரிவிக்கையில்,

பத்து வருடத்திற்கு ஒருமுறை மேற்கொள்ளப்படும் குடிசன மதிப்பீட்டுக்கு மேலதிகமாக இது மேற்கொள்ளப்படுகிறது. இதற்கமைய மே மற்றும் ஜூன் மாதங்களில் வீடு மற்றும் குடிசன மதிப்பீடுகள்மேற்கொள்ளப்படும்.

திணைக்கள அதிகாரிகளுக்கு மேலதிகமாக பயிற்சி பெற்ற அதிகாரிகள் சிலர் இந்த இரண்டு மாதங்களிலும் நாட்டிலுள்ள அனைத்து வீடுகளுக்கும் விஜயம் செய்து குடிசன மதிப்பீடுகளை மேற்கொள்வார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பொதுக்கூட்டமும் நிர்வாகத்தெரிவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கோட்டை முதியோர் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும் நேற்று முன்தினம் சனிக் கிழமை இடம்பெற்றது.

புதிய தலைவராக தேசமானி செல்லையா விஜயரட்ணம் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார். (இ

# கொழும்பு பொலிஸாருக்கு அதிர்ச்சி கொடுத்த நாட்டாமை

(கொழும்பு)

கொழும்பு புறக்கோட்டையில் நாட்டாமையாக செயற்பட்ட நபரை கைது செய்த பொலிஸார் அதிர்ச்சி அடைந்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

நாட்டாமையாக செயற்பட்ட நபர் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டார் என்ற சந்தேகத்தின் பேரில், பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார். 100 கிராம் ஹெரோயின் போதைப்பொருளை கையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட போதும், அவரை விசாரணை செய்த பொலிஸார் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

குறித்த சந்தேகநபரின் வீட்டினை சோதனை செய்த போது சுமார் 2.268 கிலோ கிராம் போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதன் பெறுமதி 2.45 கோடி ரூபாய் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சுனில் ஷாந்த வீரக்கொடி என்ற இந்த சந்தேக நபர் பல கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புபட்டுள்ளதாகவும், அவருக்கு எதிராக நீதிமன்றத்தில் 7 பிடியாணைகள் உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபரை ஹெரானை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது எதிர்வரும் 25ஆம் திகதிவரை அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (இ-7)

# 13 வருட உறுதி செய்யப்பட்ட கல்வி

## அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனங்களின் ஒத்துழைப்புக்களை பெற்றுக்கொள்ள தீர்மானம்



(கொழும்பு)

13 வருட உறுதி செய்யப்பட்ட கல்வி வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு அரச நிறுவனங்களைப் போன்று அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனங்களின் ஒத்துழைப்புக்களை பெற்றுக்கொள்ள தீர்மானித்துள்ளதாக கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

இதற்காக முன்வந்த நிறுவனங்களுக்கு அமைச்சர் நன்றி தெரிவித்துள்ளார்.

நாட்டின் முன்னேற்றத்திற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளில் அரச மற்றும் தனியார நிறுவனங்கள் ஒன்றிணைந்து செயற்படுவதன் அவசியத்தை அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

13 வருட உறுதி செய்யப்பட்ட கல்வி வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் கல்வியமைச்சில் இடம்பெற்ற இந்த பேச்சுவார்த்தையில் அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இந்த வேலைத்திட்டத்தின் கீழ் 26 தொழில் கற்கை நெறிகள், பாடசாலை கற்கை நெறிகளில் சேர்க்கப்படவுள்ளன.

க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் சித்தி பெற்ற மற்றும் சித்தி பெறத் தவறிய மாணவர்கள், இந்தத் தொழில் கற்கை நெறியின் கீழ் கல்வியை பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பம் கிடைக்கிறது.

இதன் முதற்கட்டத்தின் கீழ் 42 பாடசாலைகளை சேர்ந்த இரண்டாயிரத்து 400 மாணவர்கள்தற்போது இணைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)



கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரியில் மாணவர் பாராளுமன்ற அமர்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை கல்லூரி அதிபர் மு.கனகலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

(படங்கள்:-மகாலிங்கம்)

## சாரதியைத் தாக்கிய ரஷ்ய பிரஜை கைது

ஆட்டோ வண்டி சாரதியைத் தாக்கியமை தொடர்பில் ரஷ்ய நாட்டவர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் அதிகாலை ஹிக்கடுவ பகுதியில் வைத்து ரஷ்ய பிரஜை கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதிக மது போதையில் இருந்த ரஷ்ய நாட்டவர் ஹிக்கடுவ. நாரிகம. பிரதேசத்தில் ஆட்டோ சாரதி மீது தாக்குதல் மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தன்னுடன் வாடகை பயணம் செல்வதற்காக ஆட்டோ சாரதிக்கு, ரஷ்ய பிரஜை அழைப்பு விடுத்துள்ளார்.

அதிக மதுபோதையில் இருந்த வெளிநாட்டவரிடம் பணம் கிடைக்காதென என எண்ணிய அந்த சாரதி அந்த பயணத்தை நிராகரித்துள்ளார்.

இதனால் கோபமடைந்த ரஷ்ய பிரஜை குறித்த ஆட்டோ சாரதி மீது கடும் தாக்குதல் மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)







செயற்பட்டு மகிழ்வோம் போட்டியில் தேசிய ரீதியில் மூன்றாம் இடத்தினைப் பெற்றுக் கொண்ட கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலய மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலையில் இடம்பெற்றது. வட மாகாண கல்வி நிர்வாக உதவிக் கல்விப்பணிப்பாளர் யோ.ரவீந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பதக்கங்களையும் சான்றிதழ்களையும் வழங்கிக் கௌரவித்தார். (படங்கள்:- கிஷோர்)

## தமிழரின் பொருளாதார வழிவகைகளை திட்டமிட்டு தடை செய்ய அரசாங்கம் முயற்சி

### நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் எதிர்ப்பு

(நல்லூர்)

தமிழர் தம் பாரம்பரிய பொருளாதார வழி வகைகளை திட்டமிட்டு தடை செய்ய முயல்வதனை ஒருபோதும் அனுமதிக்க முடியாது என நல்லூர் பிரதேச சபை அமர்வில் சுட்டிக்காட்டப்பட்டது.

நல்லூர் பிரதேச சபையின் இரண்டாவது அமர்வு கடந்த 11 ஆம் திகதி இடம்பெற்ற போது உறுப்பினர் மதுசுதன் தெரிவிக்கையில்,

புகையிலை என்பது எமது வடக்கு தாயகப் பரப்பில் காலாதி காலமாக பயிரிடப்பட்டுப் வரும் ஒரு பணப் பயிராகும். இப்பயிரை எமது நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பல விவசாய காணிகளில் பயிரிட்டு வருகிறார்கள். இந்த பயிருக்கு திடீரென 2020 க்கு பிறகு தடை என அரசு சொல்வது வியப்பளிக்கிறது. அரசாங்கம் சிகரெட்டை இறக்குமதி செய்து கொண்டு எமது புகையிலைச் செய்கையை மாத்திரம் தடை செய்ய எத்தனிப்பது என்பது எமது மக்களின் தனித்துவமான சில வருமானமீட்டும் வழிமுறைகளை தடுப்பது போல் உள்ளது. மாறாக எமது உள்ளூர் உற்பத்திகளை தடுத்துவிட்டு இறக்குமதி செய்யப்படும் சிகரெட்டு வருமானத்தை மேலும் அதிகரிப்பதன் நோக்காகவும் கருதலாம்.

புகையிலை போதை சம்பந்தமான உற்பத்தி பொருளாக இருப்பினும் சிகரெட்டை புகைப்பதனால் ஏற்படும் நச்சுப் பாதக விளைவுகளை காட்டிலும் புகையிலையில் நச்சுப் பாதிப்புக்கள் குறைவு.

இன்றைய நல்லாட்சி அரசின் தலைவர் மைத்திரிபால சிறிசேன ஆட்சிக்கு வந்த போது சிகரெட் பெட்டிகளில் 80 வீதத்திற்கும் அதிகமான விளம்பரமானது அதை புகைப்பதால் ஏற்படும் பாதிப்புகளை பிரதிபலிப்பதாக அமைய வேண்டும் என்றார்.

எனினும் சிகரெட் பிடிப்பவர்களின் மருத்துவத்துக்காக ஜனாதிபதி நிதியத்திலிருந்து மருத்துவ வசதி ஏற்படுத்திக் கொடுக்கிறார். இந்த மருத்துவச் செலவுக்கு அளிக்கும் பணமென்பது ஒட்டு மொத்த சிகரெட் வருமானத்தில் இருந்து அரசுக்கு கிடைக்கும் வருமானத்தின் மிக மிகச் சிறிய அளவேயாகும்.

உண்மையாக நாட்டு மக்கள் நலனில் அக்கறையிருந்தால் முதலில் சிகரெட் மற்றும் மதுபானங்களை தடை செய்ய வேண்டும்.

எனவே போதைப் பொருள் என்ற போர்வையில் எமது பாரம்பரிய பணப்பயிரான புகையிலையை தடை செய்ய உடனடியாக அனுமதிக்க முடியாது.

வேண்டுமென்றால் அரசு சிகரெட் இறக்குமதியையும் தடை செய்ய முன்வந்தால் நாங்கள் புகையிலை செய்கை தடையையும் அனுமதிக்கலாம். எனவே சிகரெட்டை தடைசெய்யாது எமது தமிழர் தம் பாரம்பரிய பொருளாதார வழி வகைகளை திட்டமிட்டு தடைசெய்ய முயல்வதனை ஒருபோதும் அனுமதிக்க முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## ஐ.தே.கவிற்கு எதிராக முன்னணி சு.க.கூட்டத்தின் பின் நடவடிக்கை

### சந்திம வீரக்கொடி தகவல்



(கொழும்பு)

எதிர்வரும் 17 ஆம் திகதி இடம்பெறவுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தின் பின்னர், ஏனைய கட்சிகளுடனும் கலந்துரையாடி ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரான முன்னணி ஒன்றை உருவாக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

அந்தக் கூட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தேசிய அரசாங்கத்தில் தொடர்ந்தும் நீடிப்பதா என்பது குறித்து இறுதித் தீர்மானம் எடுக்க எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அரசாங்கத்தில் இருந்து வெளியேறிய 16 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் அரசாங்கத்துடன் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் பனிப்போர் உக்கிரமடைந்த நிலையில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 2 | 11. | 3 | 21. | 2 | 31. | 1 |
| 02. | 1 | 12. | 1 | 22. | 3 | 32. | 2 |
| 03. | 2 | 13. | 3 | 23. | 2 | 33. | 2 |
| 04. | 3 | 14. | 3 | 24. | 2 | 34. | 2 |
| 05. | 2 | 15. | 2 | 25. | 3 | 35. | 2 |
| 06. | 3 | 16. | 3 | 26. | 1 | 36. | 3 |
| 07. | 1 | 17. | 3 | 27. | 2 | 37. | 2 |
| 08. | 2 | 18. | 2 | 28. | 1 | 38. | 3 |
| 09. | 2 | 19. | 3 | 29. | 2 | 39. | 2 |
| 10. | 3 | 20. | 3 | 30. | 3 | 40. | நாம் பொய் பேச மாட்டோம் |

01. 1. சுப்பிரமணிய பாரதியாரைப் பற்றி
2.சுப்பிரமணிய பாரதியார்
3.எட்டயபுரம்/தமிழ்நாடு
4.சிறந்த
5.படித்தார்கள்
6.இறந்தார்
7.பாவலர்
8.சுவை நிறைந்த பாடல்களைப் பாடினார்

02. 1.தி-சங்கற்பம்
2.கைராட்டினம்

03. 1.சகபாடி
2.அகராதி

04. 1.அழி
2.பாணம்
3.இறங்கினார்
4.பரந்து

05. 1.நேரம்
2.பகைவன்

06. 1.வேலையாட்கள் எசமானியிடம் விசுவாசமாக இருந்தார்கள்
2.இவர் என பேர்த்தி

07. 1.கீழ்வானம்
2.கடற்கரை

08. 1. உதவி செய்தல்
2.பதற்றக்காரன்

09. 1. சதை
2.கலை


10. 1.விளையாடினான்
2. கொண்டுள்ளது
3.போற்றுகின்றது
4.எளிமையானவை

11. 1.Cart
2.Spider
3.Seven

12. 1.is
2.these

13. 1. புத்தகம் எடு.
2.அடி மட்டம் தாருங்கள்
3.எனக்கு பேனை தாருங்கள்


14. 1.அத்துல என்ன த?
2.ரத்துபாட்ட

15. 1.  2. 42963

ஆ நூ ப ஒ

## பேருவளையில் பெரு வெள்ளம்

### 150 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிப்பு







(கொழும்பு)

நேற்று முன்தினம் முதல் நிலவிவரும் கடும் மழையுடன் கூடிய காலநிலை காரணமாக பேருவளையின் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

பேருவளை பள்ளி வீதி, சமத் மாவத்தை போன்ற பிரதேசங்கள் உள்ளிட்ட பல பிரதேசங்களில் சுமார் 150 வீடுகள் இந்த வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட மக்களின் அத்தியாவசிய தேவைகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என பிரதேசவாசிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-7)

# பாரதம்

## இந்தியா - மியன்மார் இடையில் ஏழு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்



(டில்லி)

இந்தியாவுக்கும், மியன்மாருக்குமிடையில் ஏழு முக்கிய புரிந்துணர்வு உடன்படிக்கைகள் கைசாத்திடப்பட்டுள்ளன.

இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ், மியன்மாரின் அரச ஆலோசகர் ஆங் சான் சூகியை கடந்த வெள்ளிக்கிழமை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இதன்போதே இரு நாடுகளுக்கும் இடையில் இந்த ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ், இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு மியான்மரை சென்றடைந்துள்ளார். சுஷ்மா சுவராஜை மியன்மாருக்கான இந்திய தூதுவர் விக்ரம் மிஸ்ரி மற்றும் மியன்மார் வெளியுறவு கொள்கை அமைச்சர் உள்ளிட்டோர் வரவேற்றனர்.

அதனை அடுத்து, வெள்ளிக்கிழமை மாலை மியன் மார் ஜனாதிபதி வின் மிண்டை சுஷ்மா சுவராஜ் சந்தித்து பேசினார்.

இதன்போது ரோஹிஞ்யா முஸ்லிம்கள் குறித்து, கரிசனையுடன் செயற்படுமாறு இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் வலியுறுத்தியுள்ளார்.

இதனையடுத்து இன்று காலை மியன்மார் அரச ஆலோசகர் ஆங்சான் சூகியை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது இந்தியாவிற்கும், மியன்மாருக்கும் இடையிலான 7 முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன. குறிப்பாக ஆளுமை விருத்தி, பகோடாக்கள் மக்களின் மறு சீரமைப்பு உள்ளிட்ட ஒப்பந்தங்களே இதன் போது கைச்சாத்திடப்பட்டுள்ளன.

இதேவேளை மியன்மார் இராணுவத் தளபதி ஜெனரல் மன் ஆங் ஹிலிங்கையும் சுஷ்மா சுவராஜ சந்தித்து பேசியுள்ளார்.

இந்தியாவின் அண்டை நாடாக விளங்கும் மியன்மார், இந்தியாவுடனான எல்லையை ஆயிரத்து 640 கிலோமீற்றர் தூரத்துக்கு பகிர்ந்து உள்ளமை குறிப்பிடத்தக்கது

பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்டுள்ள நாகலாந்து, மணிப்பூர் ஆகியவை மியன்மார்நாட்டுஎல்லையில்அமைந்துள்ளதால், மியன்மாருடனான உறவு முக்கியமான ஒன்றாக கருதப்படுகின்றது. (7)

## பா.ஜ.க. ஆட்சி மீதான மக்களின் கோபம் அதிகரித்து வருகிறது

### சீத்தாராம் கூறுகிறார்

(புவனேஸ்வரம்)

பா.ஜ.க. ஆட்சி மீது மக்கள் கோபம் அதிகரித்து வருகிறது என்று மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு அகில இந்திய பொதுச் செயலாளர் சீத்தாராம் யெச்சூரி தெரிவித்துள்ளார்.

மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு அகில இந்திய பொதுச் செயலாளர் சீத்தாராம் யெச்சூரி ஒடிசா மாநிலம் புவனேஸ்வரத்தில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் தெரிவித்ததாவது.

மத்திய பாரதிய ஜனதா அரசின் தவறான பொருளாதார கொள்கைகள், மதவாத சக்திகளின் அத்துமீறல் செயற்பாடுகள், சட்டபூர்வமான அமைப்புகள் மீது நடக்கும்தாக்குதல்கள் போன்றவற்றின் காரணமாக மத்திய அரசு மீது மக்களின் கோபம் மிக வேகமாக அதிகரித்து வருகிறது.

கடந்த 3 ஆண்டுகளில் விவசாயிகள் தற்கொலை மிக அதிகரித்து இருக்கிறது. சுமார் 60 ஆயிரம் பேர் தற்கொலை செய்து இருக்கிறார்கள்.

பாரதிய ஜனதா அரசு விவசாயிகளுக்கு குறைந்த பட்ச ஆதரவு விலையை ஒரு மடங்கு உயர்த்துவதாக வாக்குறுதிகொடுத்தது. ஆனால், அந்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை.



ஒரு கோடியே 20 இலட்சம் விவசாய கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று விவசாயிகளும் குரல் கொடுத்து வருகிறார்கள். ஆனால், அரசு அதை செய்யவில்லை.

அதற்கு பதிலாக கார்ப்பரேட் நிறுவனங்களில் ரூ.2 இலட்சத்து 64 ஆயிரம் கோடி கடனை தள்ளுபடி செய்து இருக்கிறார்கள்.

இப்போது நாட்டில் சில்லறை வர்த்தகத்தை சீரழிக்கும் வகையில் வால்மார்ட் நிறுவனம் பிலிப்கார்ட் ஒன்லைன்வர்த்தக நிறுவனத்தை கைப்பற்றி இருக்கிறது.

இதன் மூலம் அந்நிய நிறுவனங்கள் ஒன்லைன் வர்த்தகம் மூலம் இந்தியாவுக்குள் நுழைய பிரதமர் நரேந்திர மோடி வசதிகளை ஏற்படுத்தி கொடுத்து இருக்கிறார்.

ஏற்கனவே ஜி.எஸ்.டி. வரி, பண மதிப்பிழப்பு காரணமாக வர்த்தகங்கள், சிறு தொழில்களின் முதுகெலும்பு உடைக்கப்பட்டுள்ளது. இப்போது மேலும் பாதிப்பை அடைய செய்துள்ளனர்.


இந்த அரசின் அபாயகரமான கொள்கைகளை எதிர்த்து போராடும் அமைப்புகளுக்கு பாரதிய ஜனதா அல்லாத கட்சிகள் அனைத்தும் பக்கபலமாக இருக்க வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார். (7)

## படையினர் – ப

## மியன்மாரில்

## மலேசியாவின் முன்னாள் பிரதமர் ரசாக் வெளிநாடு செல்லத்தடை

### மகாதீர் அரசு அதிரடி அறிவிப்பு



(கோலாலம்பூர்)

மலேசியா நாட்டின் முன்னாள் பிரதமர் நஜிப் ரசாக் மற்றும் அவரது மனைவி வெளிநாடுகளுக்கு செல்ல புதிய அரசு தடை விதித்துள்ளது.

மலேசியாவின் 14 ஆவது பாராளுமன்ற தேர்தலில் யாரும் எதிர்பாராத விதமாக 60 ஆண்டுகளுக்குப் பிறகு எதிர்க்கட்சிகள் கூட்டணி வெற்றி பெற்றது. இதையடுத்து 92 வயதான மகாதீர் முகமது அந்நாட்டின் பிரதமராக கடந்த வெள்ளிக்கிழமை பதவியேற்றுள்ளார். முன்னதாக, மலேசிய அரசின் நிதியில் இருந்து 680 மில்லியன் டொலர் அளவுக்கு முறைகேடு செய்து அந்த தொகையை தனது தனிப்பட்ட வங்கிக் கணக்குகளில் மடைமாற்றி விட்டதாக மலேசிய பிரதமர் நஜிப் ரஜாக் மீது குற்றச்சாட்டு எழுந்தது.

இதையடுத்து, அவர் பதவி விலக வேண்டும் என முன்னாள் பிரதமரும் எதிர்க்கட்சி தலைவருமான மகாதீர் முஹம்மது வலியுறுத்தி வந்தார். தேர்தலில் தோல்வியடைந்த பின்னர் கட்சி தலைவர் பதவியையும் நஜிப் ரசாக் இராஜினாமா செய்தார்.

தற்போது அங்கு ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ள நிலையில் ஊழல் வழக்கில் சிக்கியுள்ள முன்னாள் பிரதமர் நஜிப் ரசாக் வெளி நாட்டுக்கு தப்பிச் செல்லலாம் என தகவல் வெளியானது.

அதற்கேற்ப, நஜிப் ரசாக் ரோஸ்மா மன்சூர் தனி விமானம் மூலம் இந்தோனேசிய தலைநகர் ஜகார்தாவுக்கு நேற்று முன்தினம் செல்ல திட்டமிட்டிருந்ததாக உளவுத்துறையினருக்கு தகவல் கிடைத்தது.

இதைத்தொடர்ந்து, நஜிப் ரசாக் மற்றும் அவரது மனைவி வெளிநாடுகளுக்கு செல்ல மலேசியா நாட்டின் குடியுரிமைத்துறை நேற்று முன்தினம் தடை விதித்துள்ளது. (7)

## அணுவாயுத சோ அகற்ற வடகொ

(வோஷிங்டன்)

அணு ஆயுத சோதனை மையத்தை அகற்றும் வடகொரியாவின் முடிவுக்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நன்றி தெரிவித்துள்ளார்.

வடகொரியா ஜனாதிபதி கிம் ஜாங் உன் - அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஜூன் 12 ஆம் திகதி சிங்கப்பூரில் சந்தித்து பேசவுள்ளனர். இந்நிலையில், வடகொரியாவின் வடகிழக்கில் மண்டாப் மலைப்பகுதியில் உள்ள புங்யேரி பகுதியில் அந்நாட்டு அணு குண்டு பரிசோதனை நடத்தும் மையத்தையும், இரகசிய சுரங்கங்களையும் 23 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதிக்குள் அகற்றி விட அரசு முடிவெடுத் துள்ளது.

மேலும் அணு ஆராய்ச்சி மற்றும் கண்காணிப்பு மையங்கள், பாதுகாப்பு சாவடிகளும் முற்றிலுமாக அகற்றப்படும் என அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அணு குண்டு சோதனை மையத்தை அகற்றும் வடகொரியாவின் முடிவுக்கு அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் நன்றி தெரிவித்துள்

## லொறியுடன் கார் மோதி விபத்து ஐவர் பரிதாபமாக உயிரிழப்பு

(தஞ்சாவூர்)

தஞ்சாவூர், தஞ்சை பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஐவர் உயிரிழந்ததுடன் இருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தஞ்சை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச்சம்பவத்தில் தஞ்சை பகுதியைச் சேர்ந்தவர்கள் உயிரிழந்துள்ளனர். இவர்களில் நால்வர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களென பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

தஞ்சை, பட்டுக்கோட்டை பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறி ஒன்றின் மீது அவ்வீதியூடாக வந்த கார் மோதியதில் இந்த விபத்து சம்பவித்துள்ளது. காரின் வேகத்தினை கட்டுப்படுத்த முடியாது போனமையே விபத்துக்கு காரணமென பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் சடலங்கள் பிரேத பரிசோதனைக்காக தஞ்சை அரச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் தஞ்சை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (7)

# வெளிநாடு

# பழங்குடியினர் கடும் மோதல்

## 20 பேர் உயிரிழப்பு; 12 பேர் காயம்



(யாங்கூன்)

மியன்மார் இராணுவம் மற்றும் பழங்குடியின பிரிவினரிடையே நேற்று நடந்த மோதலில் 20 பேர் பலியாகியுள்ளனர். 12க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

சீன எல்லை அருகே மியன்மார் வடக்கே ஷான் பகுதியில் பல்வேறு ஊடுருவல் குழுக்கள் அதிகளவில் சுயாட்சி கோரி போராடி வருகின்றன.

இந்த நிலையில், மியன்மார் நாட்டு இராணுவத்திற்கும் மற்றும் டாங் தேசிய விடுதலை இராணுவம் என்ற ஊடுருவல் குழுவுக்கும் இடையே நேறடறு மோதல் ஏற்பட்டது.

மியன்மாரில் ராகீன் பகுதியில் ரோஹிஞ்யா முஸ்லிம்கள் மீது அந்நாட்டு இராணுவத்தினர் இனஅழிப்பு முயற்சியில் ஈடுபட்டனர் என குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இதுபற்றி விசாரணையும் நடந்து வருகிறது. எனினும், இராணுவத்தினர் இதற்கு மறுப்பு தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில், நேற்று அதிகாலை 5 மணியளவில் மியூஸ் பகுதியில் உள்ள இரு இராணுவ தளங்கள் மற்றும் பாலம் ஒன்றின் அருகே என 3 இடங்களில் இராணுவத்திற்கும், ஊடுருவல் குழுவிற்கும் இடையே மோதல் ஏற்பட்டது.

இந்த சம்பவத்தில் 20 பேர் பலியாகி உள்ளனர். 12க்கும் மேற்பட்டோர் காயமடைந்து உள்ளனர். (7)

# தேவாலயங்கள் மீது குண்டுத்தாக்குதல் பலி எண்ணிக்கை 11 ஆக அதிகரிப்பு




(ஜாகார்த்தா)

இந்தோனேஷியாவில் தேவாலயங்கள் மீது நடந்த வெடிகுண்டு தாக்குதலில் பலி எண்ணிக்கை 11 ஆக உயர்வடைந்துள்ளது.


உலகில் முஸ்லிம்கள் அதிகம் வாழும் நாடு இந்தோனேஷியா. இந்நாட்டில் மற்ற மதத்தினரும் குறைந்த அளவில் வசித்து வருகின்றனர். கடந்த வருடங்களில் கிறிஸ்தவர்கள் உள்ளிட்ட பிற மதத்தினர் மீது சகிப்பின்மை காரணங்களால் தொடர் தாக்குதல்கள் நடந்து வருகின்றன.

இங்குள்ள இரண்டாவது மிகப்பெரிய நகரம் சுரபயா. இந்நகரில் கிறிஸ்தவர்கள் வழிபடும் தேவாலயங்கள் அமைந்துள்ளன.

இந்த நிலையில், இந்நகரில் 3 தேவாலயங்கள் மீது தொடர்ச்சியாக 10 நிமிட இடைவேளையில் வெடிகுண்டு தாக்குதல்கள் நடந்துள்ளன. இதில் முதல் தாக்குதல் காலை 7.30 மணியளவில் நடந்தது.

அவற்றில் தற்கொலை வெடிகுண்டு தாக்குதல் ஒன்றும் அடங்கும். இந்த சம்பவத்தில் 2 பேர் பலியாகினர் என முதற்கட்ட தகவல் வெளியானது. இந்நிலையில் பலி எண்ணிக்கை 11 ஆக உயர்வடைந்துள்ளது. 35 பேர் காயமடைந்தனர். அவர்களில் 2 பொலிஸ் அதிகாரிகளும் அடங்குவர். இதற்கு எந்தவொரு அமைப்பும் இதுவரை பொறுப்பேற்கவில்லை. (7)

# சர்வதேச வான்வெளியில் பறந்த ரஷ்யாவின் போர் விமானங்களை இடைமறித்து அனுப்பிய அமெரிக்கா



(அலாஸ்கா)

அலாஸ்கா அருகே சர்வதேச வான்வெளியில் பறந்த ரஷ்ய போர் விமானங்களை அமெரிக்க போர் விமானங்கள் இடைமறித்து திருப்பி அனுப்பிய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது.

அமெரிக்காவில் உள்ள அலாஸ்காவின் மேற்கு கடற்கரையில் இருந்து சுமார் 200 மைல் தொலைவில் அமெரிக்காவின் வான் பாதுகாப்பு அடையாள மண்டலம் அமைந்துள்ளது. சர்வதேச வான்வெளியில் அமைந்துள்ள இப்பகுதியில் ரஷ்யாவுக்கு சொந்தமான இரண்டு டியூ-19 வகை போர் விமானங்கள் நேற்று முன்தினம் பறந்து சென்றுள்ளன.

அவற்றை அமெரிக்காவின் நோராட் எப்-22 ரக போர் விமானங்கள் நடுவழியிலேயே இடைமறித்துள்ளது.

அதைத்தொடர்ந்து வான் பாதுகாப்பு பகுதியை விட்டு ரஷ்ய போர் விமானங்கள் திரும்பிச் சென்றுவிட்டதாக வட அமெரிக்க விமானப் பாதுகாப்பு செய்தித் தொடர்பாளர் மேஜர் ஆன்ரூவ் ஹென்னெசி தெரிவித்துள்ளார்.

இதேபோல் கடந்த ஆண்டு மே 3 ஆம் திகதி ரஷ்ய விமானத்தை அமெரிக்க போர் விமானம் வழிமறித்து திருப்பி அனுப்பியது குறிப்பிடத்தக்கது. (7)

# சோதனை மையத்தை ...ரியா தீர்மானம்

## ட்ரம்ப் நன்றி தெரிவிப்பு





ளார். இது தொடர்பாக ட்ரம்ப் தனது கீச்சகத்தில், எங்கள் சந்திப்பு நடப்பதற்கு முன்னதாகவே அணு குண்டு சோதனை மையத்தை அகற்ற போவதாக வடகொரியா அறிவித்துள்ளது. வடகொரியாவின் இந்த உறுதியான நடவடிக்கைக்கு நன்றி என பதிவிட்டுள்ளார். (7)

# கார் விபத்தில் இளைஞர் பலி அமெரிக்கத் தூதரக அதிகாரி பாகிஸ்தானை விட்டு வெளியேற தடை

(இஸ்லாமாபாத்)

கார் விபத்தில் இளைஞர் பலியான சம்பவத்தில் தொடர்புடைய அமெரிக்க தூதரக அதிகாரி ஜோசப்ஹால்நாட்டை விட்டு வெளியேற பாகிஸ்தான் அரசு அதிரடி தடை விதித்துள்ளது.

அமெரிக்காவுக்கும் பாகிஸ்தானுக்கும் தற்போது சுமுகமான உறவு இல்லை. தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தான் புகலிடமாக இருப்பதாக கூறி அந்நாட்டுக்கு வழங்க இருந்த நிதியை ட்ரம்ப் நிறுத்தி வைத்தார். கடந்த சில மாதம் பாகிஸ்தானில் உள்ள அமெரிக்க தூதரக அதிகாரி ஜோசப் இம்மானுவேல் ஹால் சென்ற கார் மோதியதில் இளைஞர் பலியானார்.

ஜோசப் குடித்து விட்டு வாகனம் ஓட்டியதாக புகார் எழுந்த நிலையில், அவரை பொலிஸார் விசாரணைக்கு அழைத்துச் சென்றனர்.

இதன் பின்னர், பாகிஸ்தானில் உள்ள அமெரிக்க தூதரக அதிகாரிகள் கராச்சியில் உள்ள பழங்குடிகள் பகுதிக்கு செல்லக்கூடாது என பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சகம் உத்தரவிட்டது.

இதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக அமெரிக்காவில் உள்ள பாகிஸ்தான் தூதரக அதிகாரிகளுக்கு பல்வேறு பயணக் கட்டுப்பாடுகளை அமெரிக்கா விதித்தது.

தூதரகம் அமைந்துள்ள பகுதியில் இருந்து 40 கி.மீ தொலைவுக்கு மேல் பயணம் செய்ய வேண்டுமானால் முன் அனுமதி பெற வேண்டும் என புதிய விதிமுறைகள் விதிக்கப்பட்டன. அமெரிக்காவின் இந்த நடவடிக்கையால் கொதிப்படைந்த பாகிஸ்தான் அரசு, இஸ்லாமாபாத்தில் உள்ள அமெரிக்க உயர் தூதரகம் மற்றும் மற்ற பகுதிகளில் உள்ள நான்கு துணை தூதரகம் ஆகியவற்றில் பணியாற்றும் அமெரிக்கர்கள் முன் அனுமதி இல்லாமல் வெளியே சுற்றக்கூடாது என கட்டுப்பாடு விதித்தது.

இந்நிலையில், ஜோசப் ஹால் நாட்டை விட்டு வெளியேற பாகிஸ்தான் அரசு தடை விதித்துள்ளது. தூதரக அதிகாரி என்பதால் அவரை கைது செய்ய முடியாது. எனினும், சர்வதேச விதிமுறைகளின் படி அவர் மீதான விசாரணை நீதிமன்றத்தின் அனுமதியுடன் நடத்தப்படும் என பாகிஸ்தான் அரசு தெரிவித்துள்ளது. (7)

# ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட கோத்தாவே பொருத்தம்

## ஜோன் செனவிரத்ன தெரிவிப்பு



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில், ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடுவதற்கு, முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவே பொருத்தமானவர் என்று, அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான ஜோன் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

கூட்டு அரசாங்கத்தில் அங்கம் வகித்து விட்டு, அண்மையில் எதிர்க்கட்சியில் அமர்ந்துள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 16 நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரான ஜோன் செனவிரத்ன, தாம் அரசாங்கத்தில் இருந்து விலகிய போதும், கட்சியில் இருந்து விலகவில்லை என்றும் தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் கோத்தபாய ராஜபக்ஷவுடன் பங்கேற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.


இதன்போது, ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடும் விருப்பம் உள்ளதா என்று கோத்தபாய ராஜபக்ஷவிடம், ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

அதற்கு அவர், இதுபற்றித் தாம் முடிவெடுக்கவில்லை என்றும், இந்த விடயம் தொடர்பாக தமது சகோதரர் மகிந்த ராஜபக்ஷ முடிவெடுத்த பின்னர் தாம் முடிவெடுக்கவிருப்பதாகவும் பதிலளித்துள்ளார்.

அதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு, மைத்திரிபால சிறிசேனவே பொருத்தமான வேட்பாளர் என்று அந்தக் கட்சியின் செயலர் துமிந்த திஸாநாயக்க மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச்செயலர் மகிந்த அமரவீர ஆகியோர் கருத்து வெளியிட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மூக்கை உடைப்பேன் என்றவருக்கு நாக்கில் என்ன சுளுக்கா?

## சவாலை சரியாக ஏற்க வேண்டும் என்கிறார் திலகர்



(கொழும்பு)

நானும் ஒரு கட்சியின் செயலாளர். ஏன் நாடாளுமன்ற உறுப்பினர் கூட. அரசியல், தொழிற்சங்கங்கள் பற்றி அனைத்தும் நன்கு அறிந்தே வைத்துள்ளேன்.

எனவே, என்னுடன் விவாதிப்பதற்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் எம்.பி. வேறு என்ன தராதரம் பார்க்கின்றார்? மூக்கை உடைப்பேன் என கூளுநரைத் தவருக்கு தற்போது நாக்கில் சுளுக்கா?" இவ்வாறு தொழிலாளர் தேசிய சங்கத்தின் பொதுச் செயலாளரான திலகராஜ் எம்.பி. கேள்வி எழுப்பினார்.

இ.தொ.காவின் தலைவர் ஆறுமுகன் தொண்டமானை விவாதத்துக்கு அழைத்த திலகர் எம்.பிக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் அக்கட்சியின் உப தலைவரான மத்திய மாகாண சபை உறுப்பினர் கணபதி கனகராஜாவால் விடுக்கப்பட்டிருந்த கருத்துக்குப் பதிலடி கொடுக்கும் வகையிலேயே திலகர் எம்.பி. இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நுவரெலியாவில் கடந்த 7ஆம் திகதி நடைபெற்ற இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் மேதினக் கூட்டத்திலும், பேரணியிலும் "தில் இருந்தால் மோதிப் பாரு" என்ற கோஷம் ஓங்கி ஒலித்தது.

இவ்வாசகம் பொறிக்கப்பட்ட ரீசேட்டுகளையே கட்சித் தலைவர் உட்பட முக்கிய பிரமுகர்கள் அணிந்திருந்தனர். "தில் இருந்தால் மோதிப் பாரு மூக்கை உடைத்துக் காட்டுகின்றேன்" என்று ஆறுமுகன் தொண்டமான் எம்.பி. கூட வீரமுழக்கமிட்டிருந்தார்.

இதையடுத்து இவ்விவகாரம் சமூக வலைத்தளங்களில் காட்டுத் தீயாகப் பரவியதுடன், பலகோணங்களிலும் கருத்துகள் முன்வைக்கப்பட்டன.

அமைச்சர் பழனி திகாம்பரம் தலைமையிலான தொழிலாளர் தேசிய சங்கத்துக்கும், அச்சங்கம் அங்கம் வகிக்கும் தமிழ் முற்போக்குக் கூட்டணிக்குமே இ.தொ.கா. இந்தச் சவாலை விடுத்தது எனவும் கருத்துகள் முன்வைக்கப்பட்டன.

இந்நிலையில், "தில் இருந்தால் மோதிப் பாரு" விவகாரம் தொடர்பில் கடந்த 8ஆம் திகதி கருத்து வெளியிட்டிருந்த திலகர் எம்.பி., "எமக்கு தில் இருக்கின்றது.

மலையகம் தொடர்பில் நாடாளுமன்றத்திலோ அல்லது தொலைக்காட்சியிலோ பகிரங்க விவாதத்துக்கு வருவதற்குரிய "தில்" இருக்கின்றதா? அவ்வாறு இருக்குமானால் தொண்டமான் விவாதத்துக்கு வரவேண்டும்" என்று சவால் விடுத்திருந்தார்.

இந்தச் சவால் தொடர்பில் இ.தொ.காவின் நிலைப்பாட்டை வினவியபோது கருத்து வெளியிட்ட கணபதி கனகராஜ், "மலையக மக்களின் ஆதரவு எமக்கே இருக்கின்றது. எனவே, விவாதம் நடத்துவதற்கு நாம் அஞ்சமாட்டோம்.

தொண்டமான் அனுபவம் வாய்ந்த தொழிற்சங்க அரசியல்வாதி. அவருடன் விவாதத்தில் ஈடுபடுவதற்குத் தகுதி வேண்டும். அதற்குப் பொருத்தமானவர் நீங்கள் கூறிய நபர் அல்லர். தலைவர் எதற்கு? நாங்கள் இருக்கின்றோம்.

முடிந்தால் எங்களுடன் விவாதிக்கட்டும்" என்று கூறியிருந்தார். இ.தொ.காவின் உப தலைவர் செந்தில் தொண்டமானும் இவ்வாறே சவால் விடுத்திருந்தார்.

இவர்களின் கருத்துகள் குறித்து திலகர் எம்.பியின் நிலைப்பாட்டை வினவியபோது,

"தொலைக்காட்சி விவாதமாக இருக்கட்டும், வானொலி விவாதமாக இருக்கட்டும் ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக நான் பந்தா காட்டாமல் எவருடனும் அரசியல் விவாதத்துக்கும் கலந்துரையாடலுக்கும் சென்றிருக்கிறேன்.

ஆனால், மூக்கை உடைப்பேன் என்று சவால் விட்டவருக்கு நாக்கில் எத்தனை பலம் இருக்கின்றது என்பதே எனது சவால் என்ற அடிப்படையில் அப்படி பேசிய நாடாளுமன்ற உறுப்பினரான ஆறுமுகன் தொண்டமானுடனேயே நான் இந்த விவாதத்தில் பேசத் தயார்.

வேறு எவருடனும் அல்ல. நானும் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர். ஒரு கட்சியின் செயலாளர். அவரும் கட்சியின் தலைவராக மட்டுமல்ல, செயலாளர் பதவியையும் தன் வசம் வைத்திருக்கின்றார். நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருக்கின்றார்.

என்னோடு விவாதிக்க அவர் வேறு என்ன தராதரம் பார்க்கின்றார் எனத் தெரியவில்லை. கல்வித் தராதரம் தேவையெனில் அதனை முன்வைத்து களத்தில் இறங்கவும் நான் தயார். மூக்கை உடைப்பேன் என்றவருக்கு நாக்கில் என்ன சுளுக்கா?

அத்துடன், அவர்கள் கூறுவதுபோல என்னோடு விவாதிக்க அவர்களின் இரண்டாம் நிலைத் தலைவர்கள் தான் வருவார்களெனில், அவர்களுடன் விவாதிக்க எங்கள் அமைச்சரின் உதவியாளரும் எங்கள் இளைஞர் அணி உறுப்பினருமான தம்பி சுப்பையா கமலதாசன் போதும் என்பதே எனது நிலைப்பாடு.

எனக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் ஆறுமுகன் தொண்டமானுக்கும் உள்ள தகுதி வேறுபாடு என நான் கருதுவது, என் தாத்தா அமைச்சரில்லை, என் அப்பா அமைச்சரில்லை, என் மருமகன் மாகாண சபை அமைச்சரில்லை.

என் மகனை நான் அரசியலுக்கு அழைத்துவரப்போவதுமில்லை. நான் தோட்டத் தொழிலாளியின் பேரன். தொழிலாளியின் மகன்.

இதுதான் பிரச்சினை என்றால் இந்த உரையாடல் தொடரை நிறுத்திவிட்டு அடுத்த வேலையைப் பார்ப்போம். எனக்கு ஆயிரம் வேலை இருக்கின்றது" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## நாம் நாமாக...

நம்மை நம் நிலையிலிருந்து கீழே இறக்கிவிடப் பார்ப்பவர்களையும் தள்ளிவிடப் பார்ப்பவர்களையும் காலை வாரிவிட நினைப்பவர்களையும் நமக்குத் தெரியும்.

உண்மையில் நம்மை நம் தகுதியிலிருந்து கீழே இறக்கிவிடப் பார்ப்பவர்கள் வேறு ஒரு பிரிவினர். இவர்களை நாம் உன்னிப்பாகக் கவனிப்பது கிடையாது.

எனக்குத் தெரிந்த என் நண்பர் ஒருவர் பக்கத்து வீட்டுக்காரருடன் சண்டைக்குப் போகிறேன் என்று தெருவரை இறங்கி வந்து கத்த ஆரம்பித்துவிட்டார். இத்தனைக்கும் மிகவும் பண்பாளர் பரம சாது.

இந்தச் சம்பவத்தை குறிப்பிட்டு "நான் சண்டைக்குப் போன பிறகு இப்போதெல்லாம் என் பக்கத்து வீட்டுக்காரர் அந்தத் தவறைச் செய்வதில்லை?" என்று பெருமிதத்துடன் பேசினார்.

அதற்கு நான் தேவையில்லாமல் உங்கள் பக்கத்து வீட்டுக்காரருக்கு ஒரு பெரிய வெற்றியைத் தேடித் தந்துவிட்டீர்கள் என்றேன்.

என்னது என்று ஏமாற்றத்துடன் கேட்டுக் கொண்ட அவர், எப்படி? என்று விளக்கமும் கேட்டார்.

உங்களை உங்கள் தெருக்காரர்கள் ரொம்பவும் பண்பாளர் என்றும் அதிர்ந்து பேசமாட்டார் என்று நினைத்துக் கொண்டிருந்தார்கள். அந்த நினைப்பை உங்கள் பக்கத்து வீட்டுக்காரரால் வெற்றிகரமாக கெடுக்க முடிந்திருக்கிறது. ஒருவரிடம் வெற்றி பெற்ற உங்கள் தெருக்காரர்கள் அனைவரிடமும் உங்களது தோல்வியைச் சமர்ப்பித்துவிட்டீர்களே! பக்கத்து வீட்டுக்காரரை அடக்கவும் மாற்றவும் இது ஒன்றுதான்வழியா? என்றேன்.

நண்பர் சிந்திக்க ஆரம்பித்துவிட்டார்.

உறவினர் ஒருவர் மட்டமாகத் திட்டிக் கடிதம் எழுதுகிறார். அதே தரத்தில் நாமும் இறங்கிச் சென்று எழுதினால் நம் மனம் வேண்டுமானால் ஆறலாம். ஆனால் நம்மை நல்லவர்கள் என்று கருதிக் கொண்டிருக்கிற நினைப்பில் பூசப்பட்ட கரியாகும் இது.

ஒருவன் சேறு எடுத்துப் பூசுகிறான் என்பதற்காக நாமும் சேற்றைக் கையில் எடுத்துக்கொண்டால் அவன் தரத்திற்கும் நம் தரத்திற்கும் என்ன வித்தியாசம்?

நாம் நாமாக இருப்பது அவசியம். மற்றவர்கள் மட்டமாக நடந்து கொள்கிறார்கள் என்பதற்காக நாமும் இறங்கிப் போய் விட்டால் எதிராளிக்கு நாமே வெற்றியை மனமுவந்து அளித்துவிட்டோம் என்று பொருள். அந்தச் சம்பவத்தின் விளைவு என்னவாக இருந்தாலும் சரி. எத்தகைய மோசமான சூழ்நிலையிலும் நாம் நாமாகவே இருந்து விடுவோமே!

**லேனா தமிழ்வாணன்**

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் 3-ம் நாளான இன்று சாவகச்சேரியில் அஞ்சலி

(சாவகச்சேரி)

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் மூன்றாம் நாளான இன்று திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு சாவகச்சேரி சந்தையில் 1991 ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆம் திகதி இலங்கை விமானப்படை உலங்கு வானூர்தி மூலம் நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்ட 13 பொது மக்களுக்கான அஞ்சலி நிகழ்வு இடம்பெறவுள்ளது. வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் தலைமையில் இடம்பெறும் அஞ்சலி நிகழ்வில் சாவகச்சேரி நகர பிதா திருமதி சிவமங்கை இராமநாதன் பிரதான நினைவுச்சுடரை ஏற்றுவார். இந் நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் கே.சயந்தன் மற்றும் நகர பிரதேச சபைகளின் உறுப்பினர்கள், இறந்தவர்களின் உறவினர்கள், வர்த்தகர்கள் எனப் பெருந்திரளானோர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தவுள்ளனர். (இ-89)

## வெளிமடைப் பொங்கல்-கடை

தும்பளை நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் கோவிலின் வெளிமடைப் பொங்கல் எதிர்வரும் 2018.05.18 , 19 ஆம் திகதிகளில் (வெள்ளிக்கிழமையும், சனிக்கிழமையும்) நடைபெறவிருப்பதனால் உற்சவ காலக்கடைகளை நடாத்த கடைக்குரிய நிலத்தை குத்தகைக்கு எடுக்க விரும்புபவர்கள் 2017.05.16 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.00 மணிக்கு சபை அலுவலகத்திற்கு நேரில் சமுகம் தரவும்.

சபா ரவீந்திரன்
தலைவர்,
து.நெ.அ.கோ.த.ப.சபை,

(சி-2589)

## கேள்வி அறிவித்தல்

மேற்படி 10.05.2018 வலம்புரி பத்திரிகையில் 07 ஆம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட கமநல அபிவிருத்தி திணைக்களம், கிளிநொச்சி யின் கேள்வி அறிவித்தல், சிறிய நீர்ப்பாசன குளங்கள், கட்டடங்கள் புனரமைப்பு வேலைக்கான அட்டவணையின் 04 ஆம் நிரலில் "வேண்டப்படும் ICTAD தரம் / பதிவில்" இதனை" வேண்டப்படும் ஆகக்குறைந்த ICTAD தரம்/பதிவு" எனவும் அத்துடன் 4 ஆம் நிரலில் குறிப்பிட்ட "மட்டும்" என்ற பதம் அவ்விடத்தில் தவறுதலாக பிரசுரிக்கப் பட்டுள்ளது. அதை நீக்கியும் வாசிக்கவும்.

வே.ஆயகுலன், திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர், கமநல அபிவிருத்தித் திணைக்களம், கிளிநொச்சி. (சி-2588)

## புத்தர் சிலைக்கு வரியை செலுத்த அமைச்சு தயார்

(கொழும்பு)

வெளிநாடுகளிலிருந்து புத்தர் சிலைகளை இறக்குமதி செய்யும் சந்தர்ப்பத்தில், பௌத்த மத விவகாரங்களுக்கு பொறுப்பான திணைக்களத்தின், அனுமதியை பெற்றுக்கொள்வது அவசியமென அந்த திணைக்களத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மிஹிந்தலை ரஜமஹா விகாரையின் விகாராதிபதியால், சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 1,000 புத்தர் சிலைகளுக்கு, வரி செலுத்தப்படாத நிலையில், அவைகள் சுங்கத் திணைக்களத்தினால் இதுவரை விடுவிக்கப்படவில்லை.

இந்நிலையில், அவற்றை விடுவித்துக் கொள்வதற்கான வரியாக 32 இலட்சம் ரூபாவை செலுத்துவதற்கு பொதுமக்களிடமிருந்து நிதியுதவியை எதிர்பார்ப்பதாக, மிஹிந்தலை ரஜமஹா விகாரையின் விகாராதிபதி தெரிவித்திருந்தார்.

இந்த விடயம் தொடர்பில் கருத்து வெளியிட்ட பௌத்த மத விவகாரங்களுக்குப் பொறுப்பான திணைக்கத்தின் குறித்த அதிகாரி, குறித்த தேரர் கடிதம் மூலமாக கோரிக்கை விடுக்கும் சந்தர்ப்பத்தில் பௌத்த சமய விவகார அமைச்சு அந்த வரியை செலுத்தி, புத்தர் சிலைகளை விடுவித்து தருவதற்குத் தயாராக இருப்பதாக குறிப்பிட்டார். (இ-7)

## மணிவிழா நாயகியை மனதார வாழ்த்துகின்றோம்



திருமதி கலைஅரசி சிவகுமார் (SLTS-I)

(பிரதி அதிபர், யா/ நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை)

கலைமகளின்
அருள்பெற்று
கலை அரசியே
காசினியில்
பல்லாண்டு
வாழியவே!

அன்புடன்
ஐ.குமரதாசன் குடும்பத்தினர்.

## மணிவிழா நாயகியை மனதார வாழ்த்துகின்றோம்



திருமதி கலைஅரசி சிவகுமார் (SLTS-I)

(பிரதி அதிபர்,யா/ நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை)

கலைக்கு அரசியாய் கவினுறும் ஆசானாய்
நிலைத்த பெருமை நீங்கிடாப் பெற்றாய்
உளத்தில் உவகை பெருகிட உன்னை
உயர்வுற வாழ்த்தினேன் வாழிய வாழியவே!

வாழ்த்துபவர்:
செல்வி சகுந்தலாதேவி முருகேசு
(ஓய்வுபெற்ற வர்த்தக பாட ஆசிரிய ஆலோசகர்)

(3957)

## ஆதனப் பெயர் மாற்றம்

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-13 கச்சேரி நல்லூர் வீதி, ஆதன இலக்கம் 33 என்ற இலக்கத்தைக் கொண்ட ஆதனம் T. குணநாயகம் என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தின் மொத்த விஸ்தீரணம் நிலப்பரப்பு 8 ஆகும். குறித்த ஆதனத்தில் நில.பர.04 இனை (இல 23 (பழையது), இல 33 (புதியது)) கச்சேரி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தேவதாசன் குணநாயகம் கைம்பெண் றோஸ் சுகிர்தரட்ணம் என்பவர் பிரசித்த நொத்தாரிசு ரட்ணம் கோபாலரட்ணம் அவர்கள் முகதாவில் நிறைவேறிய உறுதி இல 756/16.10.1988 இன்மூலம் அறுதியாக சுண்டிக்குளியைச் சேர்ந்த M.பாக்கியநாதன் டானியல் மகள் றொசான் பற்றிசியா விஜயதேவிக்கு வழங்கியுள்ளார். பின்னர் இதே நொத்தாரிசு முகதாவில் நிறைவேறிய உறுதி இல.757/16.10.1988 இன் மூலம் M.பாக்கியநாதன் டானியல் கைம்பெண் ரூபி பவளரட்ணம் என்பவர் குறித்த ஆதனத்தில் நில.பர.2 உறுதி இலக்கம் 1749/14.04.1952 மூலம் தமக்கு சீதனமாக கிடைத்ததென வெளிப்படுத்தி அதனை தனது மகளான றொசான் பற்றிசியா விஜயதேவிக்கு அறுதியாக வழங்கியுள்ளார். இதன் மிகுதி ஆதனமான நில.பர.8 இல் சொரியலாக இருந்து நிர்நமாக்கிய நில.பர.02 இனை யாழ்ப்பாணம் கச்சேரி நல்லூர் வீதி இல.33 என்ற இடத்தைச் சேர்ந்த றொசான் பற்றிசியா விஜயதேவி கொன்ஸ்ரன்ஸ் (மானசே டானியல் மகள்) என்பவர் குறித்த ஆதனம் நில.பர.8 ஆக இருந்த போது அதில் சொரியலாக இருந்து நிர்நப்படுத்திய நில.பர.02 இனை நீண்ட காலமாக தனது பெரிய தாயாராகிய மேரி அன்னரட்ணம் குணநாயகம் என்பவர் உடமை கொண்டு வாழ்ந்து வந்தார் எனவும் ஆனால் அவர் திருமணம் ஆகாமலும் பிள்ளைகளற்று இறந்தமையாலும், மிகுதி நில.பர.06 இனது உரித்தும் உடமையும் தம்மிடமே நீண்ட காலமாக உள்ளதாலும் நில.பர.08 விஸ்தீரணமுடைய முழு ஆதனமும் தனக்கே உரித்தான ஆதனம் என பிரசித்த நொத்தாரிசு ஜொனி மதுரநாயகம் முகதாவில் 12.01.2015 திகதியிட்ட 1789 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்திய வெளிப்படுத்தல் உறுதி மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

ஆதன விபரம்:-வட மாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி, சுண்டிக்குளி கோவிற்பற்று, சிவியா தெரு இறை "வாரியார் தோட்டம்" இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் M.செல்வராஜா அவர்களின் வரைபட இலக்கம் 212/2017.05.20 இல் துண்டு 1,2, 3 எனக்காட்டப்பட்ட நில.பர.08 ஆகும். இதற்கெல்லை

வடக்கு:- சின்னப்பு ஜெயராஜின் ஆதனமும் ஒழுங்கையும்
கிழக்கு:- கச்சேரி நல்லூர் வீதி
தெற்கு:- V.T.சிவலிங்கத்தின் ஆதனம்
மேற்கு:- ஸ்ரீ ஞான வைரவர் ஆலயம்

தற்போது இவ்வாதனம் றொசான் பற்றிசியா விஜயதேவி (மானசே டானியல் மகள்) என்பவரது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு எமது பதிவேட்டில் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது றொசான் பற்றிசியா விஜயதேவி (மானசே டானியல் மகள்) என்னும் பெயரிற்கு பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்தப் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இம்மானுவல் ஆனல்ட்,
முதல்வர், மாநகரசபை, யாழ்ப்பாணம்.

(சி-2563)

## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

#### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை 3ஆம் பாதம்
உயரம்: 5'9"
தகைமை/தொழில்:AL
சொந்ததொழில்
தொ.இ: B/8573

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: ரேவதி 1ஆம்பாதம்
கி.பா: 37செவ் 4 இல்
உயரம்: 5'4'
தகைமை/தொழில்:BA வங்கியாளர்
தொ.இ: B/8574

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா: 04 சூரி செவ் 6 இல்
உயரம்: 175cm
தகைமை/தொழில்:O/L டோகா
தொ.இ: B/8576

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: அவிட்டம் 2ஆம்பாதம்
கி.பா: 54 செவ் 4 இல்
உயரம்: 6'
தகைமை/தொழில்:A/L சொந்தத் தொழில்
தொ.இ: B/8577

#### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: விசாகம்
தகைமை/தொழில்:BA
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/7743

பிறப்பு: 1976 இந்து
நட்சத்திரம்: அனுசம்
சூரிசெவ் 7 இல்
தகைமை/தொழில்:MBBS வைத்தியர்
அவுஸ்திரேலியா
தொ.இ: G/7746

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: 14சூரிசெவ் 5 இல்
தகைமை/தொழில்: MBBS
வைத்தியர்
தொ.இ: G/7747

பிறப்பு: 1985 கிறிஸ்தவம் RC
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:BM கணக்காளர்
லண்டன் NOT PR
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/7750

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# மலேசியாவில் கைது செய்யப்பட்ட இலங்கையர்களை சந்திக்கமுடியவில்லை



(கொழும்பு)

மலேசியாவில் எண்ணெய்த் தாங்கி கப்பல் ஒன்றில் கைது செய்யப்பட்ட இலங்கையைச் சேர்ந்த 131 அகதிகளையும் இலங்கை அதிகாரிகளால் இதுவரை சந்திக்க முடியவில்லை என வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தகவலை வெளியிட்டுள்ளார்.

அவுஸ்திரேலியாவுக்குச் செல்ல முயன்ற போது கடந்த முதலாம் திகதி 131 இலங்கையர்கள் கடலில் வைத்து மலேசிய அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்.

ஐந்து நாட்களின் பின்னரே அது குறித்த தகவல் வெளியிடப்பட்டது.

எனினும் மலேசியாவில் தேர்தலுக்குப் பின்னர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளதால், தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கையர்களை அங்குள்ள இலங்கை தூதரக அதிகாரிகளால் சந்திக்க முடியவில்லை எனத் தெரிய வருகிறது. (இ-7)

# ஜனாதிபதி வேட்பாளரை மகிந்தவே தீர்மானிப்பார்

## பசில் தெரிவிப்பு



(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே தீர்மானிப்பார் என அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான அழுத்தத்தை அரசாங்கத்துக்கு வழங்க வேண்டியுள்ளது. ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் இதுவே எம் முன் உள்ள பிரதான பணி எனவும் தெஹிவளையில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் பசில் தெரிவித்தார்.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவும் ஜனாதிபதி வேட்பாளரை தீர்மானிக்கும் அதிகாரம் மகிந்த ராஜபக்ஷவுக்கே உரியது என நேற்று முன்தினம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தந்தையின் தாக்குதலில் 5மாதக் குழந்தை மரணம்!

## பதுளையில் சோகம்

(பதுளை)

தந்தைக்கும் தாயுக்குமிடையிலான தகராறு காரணமாக 5 மாத குழந்தை உயிரிழந்த சோகச் சம்பவம் பதுளை பிரதேசத்தில் நிகழ்ந்துள்ளது.


பதுளை, கந்தேகெட்டிய, வெவேதென்ன பிரதேசத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த தந்தை தடியொன்றினால் தாயைத் தாக்கியுள்ளார். எனினும் அந்தத் தாக்குதல் தாயோடிருந்த குழந்தை மீது வீழ்ந்துள்ளது. அதனால் காயத்துக்குள்ளான குழந்தையை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற போதும் குழந்தை சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் சந்தேகத்திற்குரிய தந்தை குறித்த பிரதேசத்திலிருந்து தப்பிச்சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# தன்னைவிட தனது கட்சியை விட நாட்டை நேசிப்பவர்கள் அவசியம்

## அமைச்சர் துமிந்தவின் ஆசை இது



(கொழும்பு)

நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு தன்னைவிடவும், தனது கட்சியை விடவும், நாட்டை நேசிப்பவர்கள் அவசியம் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தேசிய அரசாங்கத்தின் சேவையைப் பெற்றுக்கொள்ள அனைவரும் முயற்சிக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

திருகோணமலை மொரவெள பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார். (இ-7)

# கயிலாச யாத்திரை

## ஓர் அனுபவப் பகிர்வு 44

பரமசாமி பஞ்சாட்சரம்

உணவின்பின் கடைகளிற்குச் சென்று பார்த்தோம். சிலர் படிகமாலைகளையும் கயிலாய நினைவுச் சின்னமாகச் சில பாவைகளையும் வாங்கினார்கள் (படிகம் இங்கு விலை வதாகக் கேள்விப்பட்டோம்.)

யாத்திரைக்குப் பொறுப்பான திரு தீபக் கார்கி "இன்று இரவு மானசரோவரில் தங்கவிரும்புகிறீர்களா? அல்லது சாகா சென்று சாகா விடுதியிற் தங்கவிரும்புகிறீர்களா? என்று கேட்டார். அதற்கு நாம் எல்லோரும் சாகா செல்லலாம் என்றோம். சாகாவிற்கு எங்கள் பேருந்து புறப்பட்டது. அன்றிரவு சாகா விடுதியிற் தங்கினோம்.

பன்னிரண்டாம் நாள் 13.08.14 - சாகா

புதன்கிழமை காலை சாகாவிலிருந்து புறப்பட்டு நைலத்தை அடைந்து நைலம் விடுதியில் தங்கினோம்.

பதின்மூன்றாம் நாள் 14.08.14 - நைலம்

வியாழக்கிழமை காலை நைலம் விடுதியில் இருந்து புறப்பட்டு ஜாங்மூ வந்து சீனாவிலிருந்து வெளியே செல்லும் விசாவையும் (Chinese Exit Visa) பின் நேபாளத்திற்கு உள்ளே செல்லும் விசாவையும் (Nepal Entry Visa) எடுத்தபின் கொடாரி கிராமத்திற்கு வந்து 'ஹொட்டெல் ஹிமாலயன் றிசோர்ட்' என்னும் நேபாள விடுதியிற் தங்கினோம்.

பதின்மூன்றாம் நாள் 14.08.14 - கொடாரி

நிலச்சரிவு ஏற்பட்டு ஒரு கி.மீ. மூடப்பட்ட பாதையை இன்னும் சரிசெய்யாததனால் அரசாங்கம் பாதையைத் திறக்கவில்லை. சனிக்கிழமை ஹெலியில் (helicopter) பயணத்தைத் தொடர்ந்து காத்மண்டு மல்லா விடுதிக்கு வந்து சேர்ந்தோம்.

பதினைந்தாம் நாள் 16.08.14- காத்மண்டு

ஞாயிற்றுக்கிழமை காலைப் போசனத்தின் போது எங்கள் குழுவினரையும் மலேசியக் குழுவில் இருந்து சிலரையும் சந்தித்துக் கருத்துப் பரிமாறிக் கொண்டோம். விசேடமாக மலேசியாவிலிருந்து வந்த இரு துறவிகளைச் சந்தித்தேன். அவர்களிடம் கயிலையைப் பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள் என்றும் கயிலையில் வீற்றிருக்கும் சிவனைப் பற்றியும் சிவனின் அருள் பற்றியும் கூறுங்கள் என்றும் கேட்டேன். அவர்கள் உதாரணங்கள் பல கூறி சிவனின் அருளினை நீங்கள் தான் உணரவேண்டும் என்றார்கள்.

யாத்திரையை நிறைவு செய்வது பற்றிய விபரத்தைக் கேட்டேன். "காத்மண்டுவில் உள்ள பசுபதிநாத் கோவில் அல்லது முக்திநாத் கோவில் சென்றும் யாத்திரையை நிவர்த்தி செய்யலாம். உங்கள் ஊரில் உள்ள தென் கயிலாசக் கோவிலுக்குச் சென்றும் நிறைவு செய்யலாம். இது அவரவர் விருப்பம்" என்று கூறினார்.



மல்லாவிடுதியில் ஞாயிற்றுக்கிழமை இரவு போசனத்திற்கு எல்லா யாத்திரிகர்களையும் பிரதான கூடத்திற்கு (Main Hall) வரும்படி அழைத்திருந்தார்கள். "எக்கோ ரெக்"கில் இருந்து புனித யாத்திரை சம்பந்தமானவர்கள் அனைவரும் வந்திருந்தார்கள். "எக்கோ ரெக்" கிடம் பாக்கிக் கணக்குகளைச் செலுத்திவிட்டு முக்திநாத் செல்லும் குழுவில் நாங்களும் சேர்ந்து கொண்டோம். அடுத்த நாள் பொக்கரா செல்லவேண்டும். அதன் பின் பொக்கராவிலிருந்து விமானத்தில் முக்திநாத் செல்வதாகச் சொன்னார்கள்.

பதினேழாம் நாள் 18.08.14- பொக்கரா பயணம்

திங்கட்கிழமை காலை ஒரு மினி பேருந்தில் காத்மண்டுவில் இருந்து 'பொக்கரா' புறப்பட்டோம். பொக்கராவிலிருந்து 'ஹெலிகொப்ரர்' மூலம் முக்திநாத் செல்ல ஒழுங்கு செய்திருந்தார்கள். இப் பயணத்தின் தூரம் 150 கி.மீ. ஆகும். பொக்கரா செல்லும் வழிகளில் பல கோவில்களையும் பல இடங்களையும் பார்த்தவண்ணம் சென்றோம்.

அடர்த்தியாக மக்கள் வாழும் நகரங்களில் பொக்கராவும் ஒன்று. ஒரு அணைக்கட்டும் பெரிய குளமும் இக் குளத்தின் நடுவிலே ஒரு கோவிலும் இருக்கின்றது. 19.08.14 திகதி காலை முக்திநாத் செல்லவிருந்தும் காலநிலை சரியில்லை என்ற காரணத்தினால் எங்களைக் காத்மண்டுக்குத் திரும்பி வரச்சொன்னார்கள். பொதுவாக இப் பயணம் இரண்டு மலைகளுக்கிடையே சென்று பின் இமயமலை உட்பகுதிகள் வழியே செல்ல வேண்டும்.

(தொடரும்)

# வீடு கட்டிக் கொடுத்த மைத்திரியின் மகள்





(கொழும்பு)

குறைந்தவருமானம்பெறும் குடும்பம் ஒன்றுக்கு ஜனாதிபதியின் மகள் சத்துரிக்கா சிறிசேன வீடு ஒன்றை கட்டி கொடுத்துள்ளார்.

ஹிங்குராங்கொட பிபில பிரதேசத்தில் வாழும் குடும்பத்திற்கே புதிய வீடு ஒன்று நிர்மாணித்து கொடுக்கப்பட்டுள்ளது.

குறைந்தவருமானம்பெறும் நுவன் சேனாரத்ன என்ற குடும்பத்திற்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் வீடு அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய அனைத்து வசதிகளையும் கொண்ட வீடு நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

வீட்டினை பயனாளருக்கு வழங்கும் நிகழ்வு ஜனாதிபதியின் மகள் சத்துரிக்கா சிறிசேனவின் தலைமையில் நடைபெற்றது. (இ-7)

# ஐ.தே.கவில் இணையேன் மகிந்த அமரவீர அறிவிப்பு



(கொழும்பு)

அரசியலுக்கு வந்து 28 வருடங்கள் கடந்து விட்டதாகவும், இந்த காலம் முழுவதும் ஒரே கட்சியில் இருந்து செயற்பட்டதன் காரணமாகவே மக்கள் தம்மீது நம்பிக்கை வைத்துள்ளதாகவும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளரான அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், அரசாங்கத்தில் இருந்து வெளியேறிய 16 பேர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து விலக மாட்டார்கள் என்ற நம்பிக்கை இருக்கின்றது.

சிலர் எம்மீது குற்றம் சுமத்துகின்றனர். நான் அரசியலுக்கு வந்து 28 வருடங்கள் கடந்து விட்டன. ஒரே கட்சியில் இருந்து செயற்பட்டதன் காரணமாகவே மக்கள் என் மீது நம்பிக்கை வைத்துள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியில் இணையும் எந்த எதிர்பார்ப்பும் இல்லை. அதேபோல் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் செல்லப் போவதில்லை. தொடர்ந்தும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்தே செயற்படுவோம்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு ஆட்சியமைக்கும் இயலுமை உள்ளது. 2020ஆம் ஆண்டு அரசியலில் இருந்து ஓய்வுபெற போவதில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார்.

மைத்திரிபால சிறிசேன அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவார். மைத்திரிபால சிறிசேனவே சிங்கள, தமிழ், முஸ்லிம் என அனைத்து மக்களின் நம்பிக்கையை வென்றுள்ள ஒரே தலைவர் எனவும் மகிந்த அமரவீர தெரிவித்தார். (இ-7)

# இலங்கை வந்துள்ள தம் பிரஜைகளுக்கு பிரித்தானியா விடுத்துள்ள எச்சரிக்கை

(கொழும்பு)

டெங்கு நோய்த் தொற்று அபாயம் காரணமாக இலங்கைக்கு பயணம் மேற்கொண்டுள்ள தமது நாட்டு பிரஜைகளுக்கு பிரித்தானியா பயண எச்சரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையின் அனைத்து பாகங்களிலும் நுளம்புகள் மூலம் பரவக்கூடிய டெங்கு காய்ச்சல் அபாயத்தால் பிரித்தானிய வெளியுறவு அலுவலகத்தால் இந்த பயண எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நுளம்புகளின் தாக்கத்திலிருந்து அவதானமாக இருக்க வேண்டும் என சுகாதார அமைச்சினால், கடந்த முதலாம் திகதி வெளியிடப்பட்ட பொதுமக்களுக்கான அறிவித்தலும் இந்த பயண எச்சரிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த நிலையில், உங்களது பயணத்தின்போது (இலங்கைக்கு பயணம் மேற்கொண்டுள்ள பிரித்தானிய பிரஜைகளுக்கு) அவசர உதவி தேவைப்படுமாயின், 011 269 1111 என்ற இலக்கத்துக்கு அழைத்து உதவிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், சிகிச்சைக்காக மருத்துவ உதவிகளைப்பெறும் போது தாங்களது காப்பீட்டு முகவரை தொடர்பு கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், தேசிய சுகாதார பிரிவின் புதிய அறிவுறுத்தல்கள் மற்றும் ஆலோசனைகளை கவனத்தில் எடுக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நகரங்களுக்கு வெளியே மருத்துவ வசதிகளை இலகுவில் பெற்றுக்கொள்ள முடியாது. கொழும்புக்கே வர வேண்டும்.

மேலும் பிரித்தானிய தரத்திலான மருத்துவ உதவிகளை கொழும்புக்கு வெளியே பெற்றுக்கொள்ள முடியாது என்றும் பிரித்தானியா விடுத்துள்ள பயண எச்சரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1412

Search for people, places and things  Nagendram  Home

### ரம்பா

மாமனார் வீட்டுக்குச் செல்லும் மாப்பிள்ளைகளுக்கு மதிப்பும் மரியாதையும் உபசரிப்பும் சற்றுத் தூக்கலாகவே இருக்கும்... ஏனென்றால்



அவர்களுக்கு மட்டுமே தெரியும் தங்கள் மருமகன் எவ்வளவு பெரிய தியாகி என்று

### ராதிகா

சீதனம் வாங்கி திருமணம் செய்து கொண்ட ஆண்களுக்கு



பெண் குழந்தைகளைப் பெற்றுக்கொடுப்பதே மனைவியரின் ஆசை...

### மோனிகா

கோடி பல கொடுத்தாலும் கிடைக்காது



இப்படி ஓர் அனுபவமும் சந்தோசமும்

### ரஜிதா

கிடைத்ததை பகிர்ந்துண்பவன் ஏழை



படைத்தவனிடம் பறித்துண்பவன் கோழை

### சுமித்திரா

ஒரு ரூபாய் பிச்சையாய்ப் போடும் ஏழையைப் பார்த்து



ஏளனமாகக் கடந்து போகிறான் எதுவும் போடாத பணக்காரன்

### சந்திரா

பள்ளங்கள் உருவானதால் தான் மேடுகள் உருவானது



அதுபோல தோல்விகள் வந்தால்தான் வெற்றிகளும் வரும்

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# அடை மழை காரணமாக வெள்ளத்தில் மூழ்கிய தென்னிலங்கை








(கொழும்ப)

நாட்டின் சில பகுதிகளில் பெய்த அடைமழை காரணமாக மீண்டும் வெள்ளம் ஏற்படும் நிலை ஏற்பட்டுள்ளதாக வளிமண்டவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை அடைமழை காரணமாக காலி, களுத்துறையிலுள்ள சில பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

அந்தப் பகுதியிலுள்ள தாழ் நிலங்கள் முழுமையாக வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.

அந்தப் பகுதியில் மழை நீர் வடிந்து வருவதாகவும் நதிகளின் நீர்மட்டம் அதிகரித்து வருவதாகவும் கூறினார்.

நேற்றுக்காலை ஆறு மணியுடனான 24 மணித்தியால காலப்பகுதியில் காலி ஜின் தொட்ட பிரதேசத்தில் அதிக மழைவீழ்ச்சி பதிவாகி உள்ளது. இங்கு 175 மில்லிமீற்றராக பதிவாகியுள்ளது.

இதேவேளை நேற்று முன்தினம் இரவு பெய்த அடைமழைகாரணமாக காலி நகரின் தங்கெதர டிடிஸ்வத்தை கிராமம் முழுமையாக நீரில் மூழ்கியுள்ளது.

இந்தக் கிராமத்தை சேர்ந்த நபர் ஒருவரின் சடலம் வைக்கப்பட்டிருந்த வீடு முழுமையாக பாதிப்படைந்துள்ளது.

இதனால் நேற்று அதிகாலை 3 மணியளவில் வேறொரு பிரதேசத்திற்கு சடலம் கொண்டு செல்ல நேரிட்டுள்ளது.

இக்காலப்பகுதியில் காலி நகரத்தில் 160 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. கோனபீனுவல என்ற பகுதியில் 125 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் ஹக்மீமன பகுதியில் 98 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் பதிவாகியுள்ளது. (இ-7)

## நாடாளுமன்ற வாகன முறைகேடு மரிக்காரின் குற்றச்சாட்டு நிராகரிப்பு



(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் முன்வைத்த குற்றச்சாட்டினை சபாநாயகர் கரு ஜெயசூரிய நிராகரித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த எஸ்.எம்.மரிக்கார் முன்னாள் பிரதி சபாநாயகர் திலங்க சுமதிபால மீது குற்றம் சாட்டியிருந்தார்.

திலங்க சுமதிபால பிரதி சபாநாயகராக இருந்த போது நாடாளுமன்றத்தின் வாகனத்தை தனது அரசியல் தேவைக்காக பயன்படுத்தியதாக குற்றச்சாட்டினை முன்வைத்திருந்ததுடன் அவர் மீது விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தார்.

இதன் போது குறுக்கிட்ட கரு ஜெயசூரிய "சுமதிபால பிரதி சபாநாயகராக இருந்த போது பயன்படுத்திய வாகனங்கள் மற்றும் பிற சொத்துக்களை அவர் ஒப்படைத்து விட்டார்.

எனவே கடந்த காலத்தில் என்ன நடந்தது என்பதைப் பற்றி நான் விசாரணை நடத்த முடியாது" என தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இளைஞர் சம்மேளன புதிய நிர்வாகத் தெரிவும் விளையாட்டு உபகரணங்கள் வழங்கலும்





(கோப்பாய்)

2018 ஆம் ஆண்டுக்கான கோப்பாய் பிரதேச இளைஞர் சம்மேளன நிர்வாகத் தெரிவு நேற்று ஞாயிற்றுக்கிழமை கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் இடம்பெற்றது.

பிரதேச இளைஞர் சேவைகள் அதிகாரி மற்றும் கோப்பாய் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் பகீரதன் ஆகியோர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் விருந்தினர்களாக வலி.கிழக்கு பிரதேச சபையின் உறுப்பினரும் வலி.கிழக்கு இளைஞர் விவகார அபிவிருத்திக் குழுவின் தலைவருமான சிவகுமார் அகீபன் மற்றும் யாழ். மாவட்ட இளைஞர் சம்மேளன தலைவர் காமராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது பிரதேச இளைஞர் சம்மேளனத்துக்கு புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டதோடு கோப்பாய் பிரதேச இளைஞர் சம்மேளனத்துக்கு வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபனின் நிதி ஒதுக்கீட்டில் சுமார் 75000/- ரூபாவில் பெற்றுக் கொள்ளப்பட்ட விளையாட்டு உபகரணங்களை வலி.கிழக்கு பிரதேச சபை உறுப்பினர் சிவகுமார் அகீபன் இளைஞர் கழகங்களுக்கு பகிர்ந்து வழங்கினார். (இ-89)



"நமக்காக நாம்" எனும் செயற்றிட்டத்தின் மூலம் மாதகல் மாரீசன்கூடல் றோ.க.த.க. பாடசாலை மாணவர்களின் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு பாடசாலை அதிபர் வ.அமலானந்தகுமார் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி விளையாட்டு இளைஞர் விவகார அமைச்சர் கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன், சிறப்பு விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ்.சிவானந்தராஜா ,கௌரவ விருந்தினராக "நமக்காக நாம்" செயற்றிட்ட வடமாகாண ஒருங்கிணைப்பாளர் நிலாம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# ஜனவரியில் எரிபொருள் விலை குறையும்

## நிதி அமைச்சர் எதிர்பார்ப்பு

(கொழும்பு)

எரிபொருட்களின் விலையை எதிர்வரும் ஜனவரி மாதமளவில் குறைப்பதற்கு முடியுமாக இருக்கும் என நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

உலக சந்தையில் எரிபொருள் விலை குறைவது தொடர்பில் பொருளியல் வல்லுநர்கள் எதிர்வு கூறியிருப்பதற்கு ஏற்ப எதிர்வரும் ஜனவரியில் உள்நாட்டிலும் அதன் பயனை அடையச் செய்விக்கலாம் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். மாத்தறையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். (இ-7)



# குடும்பப் பிணக்குகளும் அது தொடர்பான அடிப்படைச் சட்ட மற்றும் சமூக சேவைகளும்

பொதுவாக எமது பிரதேசங்களில் அதிகரித்துக் காணப்படும் குடும்பப் பிணக்கு பாரிய சமூகப் பிரச்சினையாக தொடர்வதை காணக் கூடியதாக உள்ளது நாளுக்கு நாள் அதிகரித்துக் காணப்படும் குடும்பப் பிணக்கு தொடர்பாக மக்கள் சட்ட நிவாரணத்தை தேடுகின்றார்கள். மக்களுக்கு குடும்பப்பிணக்கு தொடர்பான சட்ட சேவையை வழங்குவதற்கு பொலிஸார் மற்றும் சட்டத்தரணிகள் சட்ட உதவி ஆணைக்குழு மற்றும் சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்கள் காணப்படுகிறார்கள் பொலிஸில் சிறுவர் பெண்கள் பிரிவு இதற்காக தனியே இயங்கி வருகின்றது.

குடும்பப் பிணக்கு தொடர்பான மற்றும் சில அரச உத்தியோகத்தர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். மாவட்ட மற்றும் பிரதேசமட்ட உளவளத் துணையாளர்கள் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவன உளவளத் துணையாளர்கள், சமூகப் பணியாளர்கள் குடும்பப் பிணக்கு தொடர்பாக பணியாற்றி வருகிறார்கள்

குடும்ப வன்முறை தொடர்பான பிரச்சினைகளுக்கு பொலிஸ் சேவை இன்றியமையாத ஒன்றாக இருக்கிறது. 2005ஆம் ஆண்டு 31 ஆம் இலக்க குடும்ப வன்முறை தடுப்புச் சட்டம் குடும்பப் பிணக்கு காரணமாக குடும்பங்கள் சிதைவதை தடுப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ளது

குடும்பப் பிணக்கு காரணமாக உடல் உள ரீதியாக பாதிக்கப்பட்ட நபர் இந்த பிரிவின் கீழ் சட்டத்தரணி ஊடாகவோ பொலிஸ் ஊடாகவோ வழக்குப் பதிவு செய்ய முடியும். குறித்த எதிர் நபரிடம் இருந்து பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு என்பவற்றை பெற்றுக் கொள்ளவும் முடியும். இது தொடர்பான வழக்கு தற்போது நீதிமன்றில் அதிகரித்துக் காணப்படுகின்றது. இதற்கான கரணமாக மது, போதைப்பாவனை, அதிக நெருக்கீடு, பொருளாதாரப் பிரச்சினை, சந்தேகம் என்பன முக்கிய காரணமாக உள்ளது. அதிகமாக பெண்களே குடும்ப வன்முறை காரணமாக பாதிக்கப்படுகின்றார்கள். இதனால் பெண்கள் உடல் உளப் பாதிப்புக்கு உட்படுவதால் சட்டநிவாரணத்தை தாண்டி அவர்களுக்கு உள ரீதியான வழிப்படுத்தல், சமூக ஆதரவை பெற்றுக் கொடுத்தல் போன்ற செயற்றிட்டங்களும் தேவைப் படுவதால் அதுதொடர்பான உத்தியோகத்தர்களும் முக்கியத்துவம் பெறுகிறார்கள்.

தாபரிப்பு 1999ம் ஆண்டு 37ம் இலக்க பராமரிப்பு தொடர்பான வழக்கு பதிவுகள் அதிகமாக நீதிமன்றங்களில் காணப்படுகின்றன. தன்னை பராமரிக்க தவறிய வாழ்க்கை துணையிடம் இருந்து தனக்கும் தனது பிள்ளைகளுக்கும் பராமரிப்பை பெறுவது ஆகும். மேலும் தன்னை பராமரிக்க தவறும் பிள்ளையிடம் இருந்து முதிய தாய் தந்தையரும் பராமரிப்பு கோர முடியும். பராமரிப்புத் தொகை நாம் பராமரிப்பு கோருபவரின் உழைக்கும் திறன் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றது. தாபரிப்பு பெறும் குடும்பங்களுக்கு அந்த தொகை பொதுமானதாக இருப்பதில்லை. அதுதொடர்பாக அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் கவனம் எடுக்க வேண்டிய தேவையுள்ளது. அவர்களின் குழந்தைகளின் கல்வி, ஆரோக்கியம் பாதுகாப்பு போன்றவை பாதிக்கப்படுகின்றது. அந்த குடும்ப பெண்களை வலுவூட்ட வேண்டிய தேவையும் காணப்படுகின்றது. இதற்கு உளவளத் துணையாளர்களின் சேவை மற்றும் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தரின் சேவையும் அரச அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்பும் தேவையாகவும் அவசியமாகவும் உள்ளது

விவாகரத்து திருமணத்தை முறித்துக் கொள்ள தொடரப்படும் வழக்கு ஆகும். மாவட்ட நீதிமன்றில் இந்த வழக்குகள் போடப்படுகின்றன. இலங்கை சட்டத்தை பொறுத்த வரை பொதுத் திருமணச் சட்டத்துக்கு அமைவாக திருமணம் செய்த நபர்கள் விவாகரத்து பெற மூன்று காரணங்கள் மட்டுமே பார்க்கப்படும். வன்ம உறவறுத்தல், சோர வாழ்க்கை, குணப்படுத்த முடியாத மலட்டுத் தன்மை என்னும் மூன்று முக்கிய காரணங்களே பார்க்கப்படும். இந்த காரணங்களுக்கு அமைவாக சட்டத்தரணி ஊடாக வழக்குத் தாக்கல் செய்யமுடியும் .

விவாகரத்து வழக்குகள் அதிகம் வழக்குத் தாக்கல் செய்யப்படுகின்றது. காரணம் பல தாரமணம், சோர வாழ்க்கை, வன்ம உற வறுப்புத் தான் அதிக காரணமாக உள்ளது. தற்போது வெளிநாட்டுத் திருமணம் காரணமாகவும் பல விவாகரத்து வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்தியா, மலேசியா, இலங்கையில் வைத்து ஐரோப்பிய மற்றும் மேற்கத்தேய நாட்டில் வசிப்பவர்கள் திருமணம் செய்கினார்கள். சிலர் ஏற்கனவே அந்தநாடுகளில் திருமணம் செய்தவர்களாகவும் சிலர் திருமணத்துக்கு பின் ஏற்படும் பிணக்கு காரணமாகவும் திருமணத்தை முறித்துக் கொள்ள முற்படும் பல விவாகரத்து வழக்குகள் நீதிமன்றங்களில் பதியப்படுகின்றது அதிகம். இதில் வடக்கு கிழக்கு பகுதியில் இப் பிரச்சினை அதிகமாக காணப்படுகின்றது. இவ்வாறு உள்ள பிரச்சினைகளை வரும் முன் காப்பது மட்டுமே தீர்வாக அமையும் .

எமது கலாசாரப் பின்னணியில் ஒரு திருமண முறையே காணப்படுகிறது. மறுமணம் என்பது சமூகத்தில் சரியான தாக்கத்தையும் மதிப்பையும் கொடுப்பதில்லை. ஆனாலும் மறுமணம் செய்யும் முறை காணப்படுகின்றது.

திருமணம் செய்யும் போது பதிவுத் திருமணம் மிக முக்கியமானதாக காணப்படுகின்றது. பதிவுத் திருமணத்தில் இதற்கு முன் திருமணம் செய்யவில்லை என்னும் உறுதிப் பத்திரம் அவசியமகப் பார்க்கப்படுகின்றது பதின் நான்கு நாட்கள் அறிவிப்பு பலகையில் இருவர் பெயரும் அறிவிக்கப்படுகின்றது. இருவர் தொடர்பான ஏதாவது பிரச்சினைகள் இருப்பின் குறித்த பதிவாளருக்கு அறியப்படுத்த முடியும். இப்படி நடைமுறை இருந்த போதும் அது தொடர்பாக நடைமுறைப்படுத்தப்படுகிறதா என்றும் அதில் மக்கள் ஆர்வம் காட்டுகிறார்களா என்பதும் கேள்வியே. சமூக அக்கறை என்பது இவற்றை பின்பற்றுவதே ஆகும் பிரச்சினை நடந்த பிறகு சத்தமிடுவது அன்று இந்த நடைமுறை பதிவாளரும் மக்களும் பின்பற்றின் பல விவாகரத்துக்களை குறைக்க முடியும்.

ஒரு திருமணம் வலுதில் இருக்கும் போது வேறு ஒரு திருமணப் பதிவு எழுதப்பட்டால் முதல் பதியப்பட்ட திருமணமே செல்லுபடியாகும். மேலும் இரு திருமணம் செய்வது என்பது தண்டனைக்குரிய குற்றமாகவும் மாறும். முறைப்படி விவாகரத்து பெறாமல் பல இரண்டாம் திருமணப் பதிவுகளும் நடைபெற்று வருகின்றன.

மதுபோதையில் இருந்து புனர்வாழ்வு பெறவும் மீண்டும் குடும்ப வாழ்வில் இணையவும் செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. தனித்து சட்டம் தீர்ப்பு மட்டுமே சமூகத்தில் மாற்றத்தையும் குற்றச் செயல்களையும் குறைத்து விடப் போவதில்லை. சட்டம் மற்றும் சமூக சேவைகள் இணைந்த செயற்பாடுதான் ஒரு ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்க தேவையாக உள்ளது என்பதோடு அது நோக்கிய செயற்பாடுகளே தற்காலத்தில் நடந்து வருவதை காணக் கூடியதாக உள்ளது.

திருமணம் குடும்பப் பிணக்கு தொடர்பாக பல சட்ட பாதுகாப்பு அமைப்புக்கள் இருந்தபோதும் அதுமீறப்படும் சந்தர்ப்பங்கள் அதிகமாக உள்ளது. மேலும் சட்டம் தெரியாது என்பதும் அதில் இருந்து தப்பிக்க காரணமாகாது மக்கள் சட்டம் பற்றிய அடிப்படை அறிவை பெற்று இருக்க வேண்டியதும் அவசியமாகும்.

**எஸ்.வினோத்**
**சட்ட உதவி ஆணைக்குழு**

# செய்தித்துளிகள்

## விபத்தில் இளைஞர் உயிரிழப்பு

(கல்முனை)

கல்முனை - அக்கரைப்பற்று பிரதான வீதியில் காரைதீவு நீர்த் தாங்கிக்கு அருகில் ஏற்பட்ட விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஆட்டோ ஒன்று மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் மோதியதிலேயே குறித்த விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் சாரதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார். சம்மாந்துறை பகுதியை சேர்ந்த 25 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (இ-7)

## புதிய ஏற்றுமதியாளர்களை உருவாக்க வேலைத்திட்டம்



(கொழும்பு)

ஏற்றுமதி அபிவிருத்தி சபை ஏற்பாடு செய்த 2000 புதிய ஏற்றுமதியாளர்களை உருவாக்கும் வேலைத்திட்டத்தின் கண்காட்சி நேற்று முன்தினம் மாத்தறையில் இடம்பெற்றது.

இந்தக் கண்காட்சியை அமைச்சர்களான மங்கள சமரவீர, மலிக் சமரவிக்கிரம ஆகியோர் பார்வையிட்டனர். (இ-7)

## இனப்பிரச்சினையை தீர்க்க ஆட்சியாளர்கள் பின்னடிப்பு

(கொழும்பு)

ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு இனப்பிரச்சினையை ஆயுதமாக்கிய ஆட்சியாளர்கள் எமது மக்களுக்குரிய நீதியை வழங்குவதற்குப் பின்னிற்கின்றார்கள் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் மார்க்கண்டு நடராசா தெரிவித்துள்ளார்.

குருமண்வெளி மீனவர் கூட்டுறவுச் சங்கத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் வீச்சு வலைகள் வழங்கி வைக்கும் நிகழ்வு குருமண்வெளி பல நோக்கு மண்டபத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற போது இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார். (இ-7)

## கந்தபுராண புராணபடலம்

வடமராட்சியின் கதிர்காமம் என்று அழைக்கப்படும் தென் புலோலியூர் உபயகதிர்காமம் முருகன் ஆலயத்தில் இன்று திங்கட்கிழமை காலை விஷேட பூசைகளுடன் "கந்தபுராணம்" படிக்கப்படும். தொடர்ந்து புராணபடலம் நடைபெறும். (இ)

## புதிய நிர்வாக சபைத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

ஈச்சமோட்டை சனசமூக நிலையத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டம் அண்மையில் கிராம உத்தியோகத்தர் ரமணன் தலைமையில் இடம்பெற்றது.

இதில் புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெற்றது. தலைவராக சு.தவசீலனும் செயலாளராக கு.விஜயகுமாரும் பொருளாளராக கே. முருகமூர்த்தியும் 8 நிர்வாக சபை உறுப்பினரும் தெரிவு செய்யப்பட்டனர்.

• • • • • • • • • • • • • • • • • • • • • • • • •

யாழ்ப்பாண மாவட்ட பகிரங்க சேவை ஓய்வூதியர்கள் நம்பிக்கை நிதியத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம் யாழ். மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் கமலநாதன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இதில் புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது. தலைவராக பொ.கமலநாதனும் செயலாளராக அ.அருந்தவநாதனும் பொருளாளராக பொ.சிவலோகநாதனும் 5 நிர்வாக சபை உறுப்பினரும் தெரிவு செய்யப்பட்டனர். (இ-106)



# சிறுவர் அரங்கம்

## தவளையும் சுண்டெலியும்


அது ஒரு அழகிய குளம். அந்த குளத்திற்கு அருகில் ஒரு மரப்பொந்து ஒன்று இருந்தது. அந்த மரப்பொந்தில் சுண்டெலி ஒன்று வசித்து வந்தது. அந்த சுண்டெலிக்கு குளத்தில் வசித்த தவளையுடன் நட்பு ஏற்பட்டது. தினமும் அந்த தவளையும் எலியும் சந்திப்பது வழக்கம்.

ஒரு நாள் எலி, தவளை நீரில் விளையாடிக் கொண்டிருப்பதை பார்த்தது. உடனே எலி தவளையிடம், "எனக்கும் நீச்சல் கற்றுத் தர முடியுமா?" என்று கேட்டது. தவளையும், "நாளை உனக்கு நீச்சல் நான் கற்றுத் தருகிறேன்" என்று கூறிவிட்டுச் சென்றது.



அடுத்தநாள் சுண்டெலிக்கு நீச்சல் கற்றுத்தருவதாக கூறிய தவளை தன்னுடைய காலை எலியின் காலுடன் சேர்த்து ஒரு கயிற்றினால் கட்டிக்கொண்டது.

அப்போது மேலே பறந்து கொண்டிருந்த கழுகு ஒன்று இவைகளைப் பார்த்து தாக்க வந்தது. உடனே தவளை தன் உயிரை காப்பாற்றிக் கொள்வதற்காக சுண்டெலியுடன் தண்ணீரில் பாய்ந்தது. தண்ணீரில் மூழ்கிய சுண்டெலி மூச்சு திணறி இறந்து போனது. அதன் உடல் மேலே மிதந்த போதும் அதனுடைய கால்கள் தவளையுடன் சேர்த்து கட்டப்பட்ட நிலையிலேயே இருந்தது.



அந்த சமயம்... தண்ணீரின் மீது சுண்டெலி செத்து மிதந்ததைக் கண்ட கழுகு கீழ் நோக்கி வந்து அந்த எலியைக்கொத்திக்கொண்டு உயரப் பறந்தது. அதனுடன் சேர்ந்து கட்டப்பட்டிருந்த தவளையும் பருந்தின் பிடியில் சிக்கியது.

இரண்டு விருந்து கிடைத்த சந்தோசத்தில் பருந்தானது தவளையையும் கொன்று தின்றது.

**நீதி: நாம் ஒருவரை நண்பராக ஏற்றுக் கொள்வதற்கு முன் அதற்கு அவர்கள் தகுதியானவரா என்று யோசிக்கவேண்டும். இல்லையேல் தவளைக்கு நேர்ந்த கதி தான் நமக்கும் ஏற்படும்.**

## 2018.05 14 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

❖1656-ஒல்லாந்தர் கொழும்பைக் கைப்பற்றினர்.

❖1797-பிரான்சின் முதலாம் நெப்போலியன் இத்தாலியின் வெனிஸ் நகரைக் கைப்பற்றினான்.

❖1881-வட ஆபிரிக்காவில் துனீசியா பிரான்சின் நேரடி ஆட்சியின் கீழ் வந்தது.

❖1937-ஆறாம் ஜோர்ஜ் மன்னன் பிரித்தானியாவின் மன்னனாக முடி சூடினான்.

❖1949-சோவியத் ஒன்றியம் பேர்லின் மீதான முற்றுகையை நிறுத்தியது.

❖1981- ஐரிஷ் குடியரசு இராணுவத்தைச் சேர்ந்த தன்னார்வலர் பிரான்சிஸ் ஹியூஸ் சிறையில் உண்ணாநோன்பிருந்து இறந்தார்.

1982 - போர்த்துகலில் திருத்தந்தை இரண்டாவது ஜோன் போலைக் கொலை செய்ய எடுக்கப்பட்ட முயற்சி தோல்வியடைந்தது.

### பிறப்புகள்

❖1820-புளோரன்ஸ் நைட்டிங்கேல், இத்தாலிய-ஆங்கிலேய செவிலி, சமூக தீர்த்திருத்தவாதி (இ. 1910)

❖1843-தாமஸ் வில்லியம் ரைஸ் டேவிட்ஸ், பிரித்தானிய பாளி அறிஞர் (இ. 1922)

❖1891-வெ. துரையனார், தென்னாபிரிக்க-இந்திய விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர் (இ. 1973)

❖1899-இந்திரா தேவி, லாத்விய யோகா நிபுணர் (இ. 2002)

❖1905-அல்பர்ட் பீரிசு, இலங்கையின் நாடாளுமன்ற சபாநாயகர் (இ. 1907)

❖1910-டோரதி ஓட்ச்கின், நோபல் பரிசு பெற்ற ஆங்கிலேய உயிரிவேதியியலாளர் (இ. 1994)

❖1912-மாயவரம் வி. ஆர். கோவிந்தராஜ பிள்ளை, தமிழக கர்நாடக வயலின் இசைக் கலைஞர் (இ: 1979)

❖ 1913-தாத்தேயசு அகேகியான், ஆர்மேனிய-சோவியத் வானியற்பியலாளர் (இ. 2006)

❖1917-பாக்கீர் மாக்கார், இலங்கை அரசியல்வாதி (இ. 1997)

❖1924-சேக் சின்ன மௌலானா, தமிழக நாதசுவரக் கலைஞர் (இ. 1999)

❖1926-எம். எஸ். எஸ். பாக்கியம், தென்னிந்தியத் திரைப்பட, நாடக நடிகை

❖1932-டெரிக் மால்கம், பிரித்தானிய திரைப்பட விமர்சகர்

❖1942-பான் இயூ தெங், மலேசிய மனித உரிமை போராளி (இ. 2010)

❖1947-மைக்கல் இக்னேட்டியஃவ், கனடிய அரசியல்வாதி

❖1952-ப. ரங்கராஜன் குமாரமங்கலம், இந்திய அரசியல்வாதி (இ. 2000)

❖1955-கரு.அழ. குணசேகரன், தமிழக எழுத்தாளர், இலக்கிய ஆர்வலர், பாடகர் (இ. 2016)

### இறப்புகள்

❖1884-பெட்ரிக் சிமேத்தானா, செக் இசையமைப்பாளர் (பி. 1824)

❖1910-வில்லியம் ஹக்கின்ஸ், ஆங்கிலேய வானியலாளர் (பி. 1824)

❖1952-யு. ராமா ராவ், தென்னிந்திய அரசியல்வாதி

❖1970-நெல்லி சாக்ஸ், நோபல் பரிசு பெற்ற செருமானியக் கவிஞர் (பி. 1891)

❖1973-பிரான்சஸ் மரியன், அமெரிக்க எழுத்தாளர், ஊடகவியலாளர் (பி. 1888)

❖1980-சி. ஏ. முகிலன், தமிழ்த் திரைப்பட இயக்குநர், திரைக்கதை எழுத்தாளர் (பி. 1933)

❖1980-பெட்டி நெசுமித் கிரகாம், அமெரிக்கத் தட்டச்சாளர், வணிகக் கலைஞர் (பி. 1924)

❖1984-மு. அ. முத்தையா, தமிழக அரசியல்வாதி (பி. 1905)

❖1994-எரிக் எரிக்சன், செருமானிய-அமெரிக்க உளவியலாளர் (பி. 1902)

### சிறப்பு நாள்

❖உலக செவிலியர் நாள்

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 50 | 50 | 50 | 60 | 50 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 98 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 60 | 80 | 60 | 50 | 80 | 40 |
| தக்காளி | 120 | 100 | 100 | 100 | 120 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 50 | 35 | 40 | 30 |
| கோவா | 60 | 80 | 60 | 30 | 80 | 50 |
| கரட் | 100 | 100 | 100 | 80 | 200 | 90 |
| பூசணி | 40 | 20 | 40 | 15 | 40 | 20 |
| புடோல் | 80 | 20 | 60 | 30 | 80 | 50 |
| வாழைக்காய் | 40 | 30 | 40 | 30 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 140 | 160 | 160 | 160 | 160 | 140 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 80 | 75 | 100 | 90 |
| பாகற்காய் | 120 | 200 | 100 | 100 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 70 | 40 | 160 | 60 |
| கருணைக் கிழங்கு | 60 | 100 | 60 | 60 | 60 | 60 |
| பயற்றங்காய் | 100 | 100 | 80 | 80 | 80 | 100 |
| லீக்ஸ் | 200 | 220 | 200 | 120 | 200 | 160 |
| பீற்றூட் | 50 | 60 | 60 | 30 | 60 | 50 |
| குறிமிளகாய் | 100 | 100 | 60 | 40 | 100 | 80 |
| முருங்கைக்காய் | 200 | 100 | 120 | 80 | 140 | 180 |
| போஞ்சி | 200 | 200 | 200 | 40 | 240 | 160 |
| கத்தரிதம்புள்ள | 70 | 20 | — | — | 50 | 40 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 30 | 20 | 40 | 25 |
| தேசிக்காய் | 200 | 200 | 200 | 180 | 240 | 180 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 80 | 75 | 25-55 | 50-75 | 90 |
| இராசவள்ளி | 180 | 200 | 150 | — | 160 | 180 |
| வெங்காயப்பூ | 300 | — | — | — | — | 300 |
| முள்ளங்கி | 80 | 100 | -- | 25 | 80 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 10 | 30 | 30 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 10 | 20 | 35 |
| ஈரப்பலா | 80 | — | — | — | — | — |

சந்தோசம் இருக்கும் இடத்தில் வாழ நினைப்பதை விட, நீ இருக்கும் இடத்தில் சந்தோசத்தை உண்டாக்கு உன் வாழ்க்கையில் நிறைவு இருக்கும்.

– யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஓ! மானிடமே என்ன செய்கிறோம் எதற்காக இப்படி நடந்து கொள்கிறோம்

ஞானபூமி என்ற சஞ்சிகையில் காஞ்சிப் பெரியவர் பதில் கூறும் பகுதி ஒன்று இருந்தது.

பெரியவரிடம் ஓர் அன்பர் கேள்வி ஒன்றைக் கேட்கிறார். சுவாமி இந்த மனிதப் பிறப்பில் ஏன் எல்லோரும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை.

ஒரு தாய்க்கும் ஒரு தந்தைக்கும் பிறந்த பிள்ளைகள்கூட ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக இருக்கின்றனர்.

ஒரு குடும்பத்தில் வளர்ந்த பிள்ளைகளிடம் குணவியல்பு உள்ளிட்ட அனைத்திலும் வேறுபாடுகள் இருக்கின்றன. இவற்றுக்கெல்லாம் கார்ணம் யாதோ என்று வினவுகின்றார்.

இதற்குக் காஞ்சிப் பெரியவர் விடைகூறுகிறார். அன்பரே! உங்கள் கேள்வி நியாயமானதுதான். ஆனால் இந்தப் பிரபஞ்சத்தில் படைத்தல் தொழிலை பிரம்மதேவர் செய்கிறார் என்பது எங்கள் சமய நம்பிக்கை.

பிரம்மதேவர், படைத்த மண்ணை எடுத்து மீண்டும் படைப்பதில்லையாம். ஒவ்வொரு படைப்பும் புதியவை. அதனால் ஒன்றுபோல் இன்னொன்று இருக்க முடிவதில்லை என்றார்.

மனிதப் பிறப்பில் எத்தனை எத்தனை வேறுபாடுகள். சிலர் நீதி நியாயம் என்பர். இன்னும் சிலர் சொந்த நலனே முதன்மையானது என்று அடம்பிடிப்பர்.

இன்னும் சிலருக்கு தர்மம் என்றாலே வெறுப்பு. அதர்மத்தின் வழியில் செல்வதுதான் அவர்களுக்கு விருப்பமானது.

இவ்வாறாக உடன்பட்டும் எதிர்த்தும் குழப்பியும் குத்தகம் விளைவித்தும் இவை எல்லாவற்றையும் அமைதியாக இருந்து பார்த்தும் நடப்பதை விமர்சிப்பதே நம் தொழில் என்பதாகக் காலம் கழிப்பதும் மனித வாழ்வில் சகஜமாயிற்று.

இதன்காரணமாக மனிதன் எனப் பிறப் பெடுத்துவிட்டால், அவன் வாழ்க்கையில் சந்திக்க வேண்டிய சவால்கள் ஏகப்பட்டவை.

தமக்கு முன்னெழுகின்ற சவால்களை வெற்றி கொள்பவர்கள் சாதித்து விடுகின்றனர். சவால்களைக் கண்டு துவண்டு போபவர்கள் வாழ்க்கையை இழந்து பரிதவிக்கின்றனர்.

எல்லோரும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை என்பதால் இளகிய மனம்; கல் மனம்; எதையும் கோபத்துடன் அணுகும் முரட்டுத்தனம்; பழிதீர்க்கும் வஞ்சகத்தனம்; மற்றவரின் இழப்பில் தன் நலனை முன்னெடுக்கும் கொடுமைத்தனம் என எல்லாமும் நடந்தாகிறது.

இன்றைய நம் வாழ்க்கையை எடுத்துக் கொண்டால் விலையேற்றம் ஒருபுறம், போதை வஸ்து பாவனை மறுபுறம் பெருமதியிக்க மோட்டார் சைக்கிள்களில் ஓடித்திரியும் இளைஞர்களின் வேகம் மறுபுறம்.

அரச மற்றும் தனியார் நிர்வாகங்களில் ஏற்படும் முரண்பாடுகள், பழிவாங்கல்கள் இவற்றில் இருந்து வாதப் பிரதிவாதங்களை எழுப்பும் தொழிற்சங்கங்கள் என எங்கும் ஒரே குழப்பம்.

இந்நிலையில் ஐயா! ஒன்றும் வேண்டாம் ஆளைவிடு என்று வெளிக்கிடுகின்ற ஒரு நிலைமைதான் நம் மத்தியில் ஏற்பட்டு வருகிறது.

இதைநினைக்கும்போதுதான் இதெல்லாம் எதற்காக என்ற கேள்வி உள்ளிருந்து எழுகிறது.

# புதிய அமைச்சுக்களின் பொறுப்புக்கள் அடங்கிய வர்த்தமானி வெளியீடு

(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கத்தின் நான்காவது அமைச்சரவை மறுசீரமைப்பின் பின்னர் ஏற்படுத்தப்பட்டுள்ள புதிய அமைச்சுக்களுக்கு உட்படும் நிறுவனங்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பிலான விசேட வர்த்தமானி அறிவித்தல் நேற்று காலை வெளியிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

புதிய அமைச்சரவை நியமிக்கப்பட்டு இரண்டு வாரங்கள் ஆகியும் நியமிக்கப்பட்ட அமைச்சுக்களுக்கு கீழ் உள்ள நிறுவனங்கள் எவை என்பது தெரியாது காணப்படுகின்றமை புதிய அமைச்சர்களுக்கு தமது பணிகளை முன்னெடுக்க பெரும் தடையாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டு வந்தன.

புதிய அமைச்சரவையிலுள்ள அமைச்சுக்களை விஞ்ஞான ரீதியில் ஒழுங்கமைப்பதாக ஜனாதிபதி அறிவித்திருந்தமை, அரசியல் தரப்பில் பெரும் பரபரப்பாக பேசப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (மு)

## முகநூல் கொண்டாட்டம் 19 பேர் அதிரடியாக கைது!

முகநூல் நண்பர்களுடன் நேற்று அதிகாலை மிடியாகொட பிரதேசத்தில் நடத்திய கொண்டாட்டத்தில் கலந்துகொண்டவர்களில் 19 பேர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் 7 பேரிடம் போதைப் பொருட்கள் இருந்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் 3 பேர் யுவதிகள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அநுராதபுரம், நொச்சியாகம, தம்புத்தேகம மற்றும் கொழும்பு ஆகிய பகுதிகளிலிருந்து வந்திருந்த 150 இற்கும் அதிகமானோர் இந்த நள்ளிரவு கொண்டாட்டத்தில் கலந்து கொண்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடத்தில் கஞ்சா, போதை ஊட்டும் ரொபி என்பனவும் மீடகப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ள பொலிஸார், இந்த சுற்றிவளைப்புக்கு 75 பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டதாகவும் கூறியுள்ளனர். (மு)

## வெள்ளத்தில் மூழ்கி சிறுமி பலி

(கொழும்பு)

திடீர் மழை பெய்ததால் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட 10 வயதுச் சிறுமி ஒருவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் கண்டி - பஸ்ஸர, மெதவல பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது. மெதவெலகம பாடசாலையில் 5ஆம் தரத்தில் கல்வி கற்கும் மெதவெல, எகொடகம பகுதியை சேர்ந்த நிம்சரணி ரஸ்மி தார என்ற சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மேலதிக வகுப்பிற்கு சென்று தனது தாயுடன் வீடு திரும்பிக் கொண்டிருந்த போது திடீரென ஏற்பட்ட வெள்ளத்தால் அவர்கள் இருவரும் இழுத்துச் செல்லப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பிரதேசவாசிகள் ஒன்றிணைந்து தாயைக் காப்பாற்றியபோதும் சிறுமி உயிரிழந்துள்ளார் எனறு தெரிவிக்கப்படுகிறது. (மு)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**பொறுமை என்பது என்ன?**

பொறுமை மனிதனுக்கு மிக அவசியமான ஒரு குணமாகும். ஒரு வீட்டில் உள்ளவர்கள் பொறுமையில்லாதவர்களாக இருந்தால் அந்த வீட்டில் எப்போதும் சண்டையும் வாக்குவாதங்களும் நடைபெற்றுக் கொண்டேயிருக்கும். அதனால் அனைவரும் நிம்மதி இழந்து காணப்படுவார்கள். அந்த வீட்டில் மகிழ்ச்சி இருக்காது. வாழ்க்கை நரகமாக இருக்கும். பொறுமை ஒரு சிறந்த குணமாகும். இது சாத்வீகமாகும். பொறுமையுடன் இருப்பது நம்மை ஒரு சிறந்த மனிதனாக மாற்றும். மற்றவர்களின் அன்பை நமக்குப் பெற்றுத் தரும்.

*(தொடரும்)*

## இத்தாலியில் வேலைவாய்ப்பு மோசடியில் ஈடுபட்ட மூன்று பேர் கைது!

(கொழும்பு)

நிதி மோசடி விவகாரம் தொடர்பில் மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எந்த வயதினரானாலும் இத்தாலியில் தொழில் வாய்ப்பை பெற்றுத் தருவதாக கூறி ஒரு குழுவினர் பாரிய நிதி மோசடியில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின்படி, நேற்று முன்தினம் இரவு அம்பாந்தோட்டை திக்வெல்லையில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் பெண் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (மு)

## காய்ச்சல் காரணமாக யுவதி மரணம்

காய்ச்சல் காரணமாக கிண்ணியா தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்ட 20 வயது யுவதி சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்த யுவதி கிண்ணியா, அண்ணல் நகரைச் சேர்ந்த என். பாத்திமா சஹானா (20 வயது) என தெரிய வருகின்றது.

நான்கு நாட்களாக காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்த குறித்த யுவதி நேற்றைய தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதுடன் நீரிழிவு நோய் அதிகமாக காணப்பட்டதால் உயிரிழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் வைத்தியசாலை பேச்சாளரொருவர் தெரிவித்தார். (ம)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை வவுனியா பிரதேசத்தில் தவசிக்குளம் கிராமம், கல்மடு II கிராமம், சாம்பல்தோட்டம் கிராமம், வேப்பங்குளம் கிராமம், குடாகச்சகொடிய, மகாமயிலங்குளம், துட்டுவாகை, குடாகச்சகொடிய கல் உடைக்கும் ஆலை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## மகா மறைபொருள்



இருப்பு களம், இயக்க களம், வானுவும் கோள்கள், ஓரறிவு முதல் ஆறறிவு வரை வாழ்ந்து கொண்டிருக்கும் உயிர்வகைகள் அனைத்தையும் பயனாய்க் காண்பவன் மனிதனே. இவ்வளவு பொருட்களுக்கும், இயக்கங்களுக்கும் மனித மனம் அளிக்கும் மதிப்பும், இவற்றால் மனிதன் அடையும் பயனும் தான் பேரியக்க மண்டலத்தில் குறிப்பிடத்தக்க சிறப்புகள்.

இத்தகைய மதிப்பு வாய்ந்த மனதின் சிறப்பு அவன் கருமையத்தின் வளமே அன்றி வேறு எது? மனிதன் உடலுக்கும், மனத்திற்கும், தனி மனிதனுக்கும் சமுதாயத்திற்கும் இடையே, மனிதனுக்கும் வான் கோள்களுக்கும் இடையே, மனிதனின் முன்பிறவிக்கும் பின்பிறவிக்கும் இடையே பாலம்போல அமைந்து இறை, உயிர், மனம் எனும் மூன்று மறைபொருட்களுக்கும் இருப்பிடமான மகா மறைபொருள் தான் கருமையம்.

இத்தகைய மதிப்பு வாய்ந்த பேரியக்க மண்டல இரகசிய மையத்தின் பெருமதிப்பை உணரக்கூடியவன் மனிதனே. இந்தக் கருமையத்தைத் தூய்மையாகவும், வளமாகவும் வைத்துக் கொள்ள அறிந்தவன், அதற்கு ஏற்ற தகுதி பெற்றவன் மனிதனே. வேதங்கள், மதங்கள், இலக்கியங்கள், சமுதாய நல நோக்கமுடையோர் அனைவரும் கூறும் போதனைகள் அனைத்தும் மறைமுகமாகக் கருமையத் தூய்மையே ஆகும்.

# வன்னியின் பெரும் சமர் சமநிலையில் முடிவடைந்தது

8ஆவது வன்னி பெரும் சமர் மாபெரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டி வெற்றி தோல்வி இன்றி சமநிலையில் முடிவுக்கு வந்தது.

கிளிநொச்சி மகா வித்தியாலயம் மற்றும் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி ஆகியன பங்குகொள்ளும் வன்னியின் பெரும் சமர் மாபெரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டி நேற்று முன்தினம் ஆரம்பமானது. காலை 9 மணியளவில் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் ஆரம்பமான குறித்த போட்டியின் ஆரம்ப நிகழ்வு மகா வித்தியாலய முதல்வர் ஜெயந்தி தனிபாலசிங்கம் தலைமையில் இடம் பெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி வலய கல்வி பணிப்பாளர் ஜோன் குயின்ஸ்ரன் கலந்து கொண்டிருந்தார்.

முதலாம் நாள்

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற புதுக்குடியிருப்பு மத்தியகல்லூரி அணி துடுப்பாட்டத்தை தெரிவு செய்தது. துடுப்பெடுத்து ஆட ஆரம்பித்த புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணி அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 63 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. கோபிப்பிரியன் அதிகபட்சமாக 27 ஓட்டங்களை பெற்றார். பந்து வீச்சில் விதுசன் 5 ஓட்டங்களிற்கு 4 விக்கெட்டுகளையும், பிரவீதன் 9 ஓட்டங்களிற்கு 3 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணியினர் துடுப்பாட்டத்தில் முதல் இனிங்சில் பிரகாசிக்கவில்லை.



63 ஓட்டங்களுடன் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்த புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணிக்கு எதிராக துடுப்பாட்டத்தை ஆரம்பித்த கிளிநொச்சி மகா வித்தியாலய அணி 26.1 ஓவர்களில் 6 விக்கெட் இழப்பிற்கு 103 ஓட்டங்களை பெற்றிருந்த நிலையில் மழை குறுக்கிட்டது. தொடர்ச்சியாக மழை பெய்தமையால் முதல் நாள் ஆட்டம் கைவிடப்பட்டது.

இரண்டாம் நாள்

முதல் இனிங்சை தொடர்ந்த கிளி நொச்சி மகா வித்தியாலய அணி 36.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 155 ஓட்டங்களை பெற்றது. பிரவீந்தன் ஆட்டமிழக்காது 53 பந்துகளை எதிர்கொண்டு 40 ஓட்டங்களை அதிகூடிய ஓட்டங்களாக பெற்றிருந்தார். சதுசன் 15 ஓவர்களில் 53 ஓட்டங்களை கொடுத்து 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

தொடர்ந்து புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணி தனது இரண்டாவது இனிங்சை ஆரம்பித்தது. நிதானமாக துடுப்பெடுத்தாடிய புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணி 6 விக்கெட் இழப்பிற்கு 46 ஓவர்களில் 84 ஓட்டங்களை இரண்டாவது இனிங்சில் பெற்றது.

இதேவேளை துடுப்பாட்ட வீரர்கள் அனுமதியின்றி வெளியே சென்று திரும்பியமையால் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணியின் ஓட்ட எண்ணிக்கையிலிருந்து பனால்ட்டி முறையில் 5 ஓட்டங்கள் பெறப்பட்டு கிளிநொச்சி மகா வித்தியாலய அணியின் ஓட்ட எண்ணிக்கை 160வதாக பதிவு செய்யப்பட்டது.

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணி சார்பில் சதுசன் ஆட்டமிழக்காது 38 பந்துகளை எதிர்கொண்டு 20 அதிகூடிய ஓட்டங்களை பெற்றிருந்த அதேவேளை நிலக்சன் ஒரு ஓட்டம் பெற்றிருந்த வேளை போட்டி நிறைவுக்கு கொண்டு வரப்பட்டது. கிளிநொச்சி மகா வித்தியாலய அணி சார்பில் இரண்டாவது இனிங்சில் யசிக்குமார் 8 ஓவர்கள் பந்து வீசி 2 விக்கட்டுகளை கைப்பற்றியிருந்தார். மற்றைய பந்து வீச்சாளர்கள் தலா ஒரு விக்கெட்டுகளை வீழ்த்தியிருந்தனர். இதன்படி 8வது வன்னி பெரும் சமர் கிரிக்கெட் சுற்றுப் போட்டி சமநிலையில் முடிவுக்கு வந்தது.

போட்டியின் சிறந்த களத்தடுப்பாளராக, வீரராக புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் விதுசனும் சிறந்த பந்து வீச்சாளராக புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் சதுசனும் சிறந்த துடுப்பாட்ட வீரராக கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் பிரவிந்னும் சகலதுறை ஆட்ட வீரராக கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் அணித் தலைவர் மிதுசனும் தெரிவாகினர்.

குறித்த போட்டியின் ஆட்ட நாயகனாக கிளிநொச்சி மகா வித்தியாலய அணியின் பிரவிந்தன் தெரிவு செய்யப் பட்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும். (க-315)

# சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு-III

## றெயின்போ அணி அசத்தல் வெற்றி



சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு III தொடரில் இருந்து 2 அணிகளை தெரிவு செய்வதற்கான தகுதிகாண் போட்டிகள் வரிசையில் கடந்த வாரம் நடை பெற்ற ஓர் போட்டியில் றெயின்போ அணி, டிறிபேக்ஸ்ரார் அணியை 4 இலக்குகளால் வெற்றி பெற்றதன் மூலம் கால் இறுதி முன் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளனர். முதலில் துடுப்பெடுத்தாடிய டிறிபேக்ஸ்ரார் அணி 42.5 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 185 ஓட்டங்களை பெற்றது.

பிரவீன்-11, பதுமன்-17, தர்ஷன்- 27, பார்த்தீபன்-10, சாங்கீதன்-15, றஜீவ்-16, மார்க்சிங்-23,வக்ஸன்-17 ஓட்டங்களைப் பெற்றனர். களத்தடுப்பில் செந்தூரன் - 04, யதூசன்,கிருஸ்யன் தலா-02 இலக்குகளையும், சௌமிதரன், நிரோஜன் தலா ஒரு இலக்கினையும் கைப்பற்றினர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய றெயின்போ அணி 26 ஓவர்களில் 6 இலக்குகளை இழந்து 186 ஓட்டங்களை பெற்றது. சௌமிதரன்-59, றஜீவன்-35, செந்தூரன் - 16, நிரோஸன்-18, நிஸான்ஸ் ஆட்டமிழக்காது 23 ஓட்டங்களை பெற்றனர். களத்தடுப்பில் சுஜன்தன், தசின்தன்,றஜீவ், மார்க்சிங் தலா ஒரு இலக்கினையும் சங்கீதன்-02 இலக்கினையும் கைப்பற்றினர். இப்போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம் நடத்தும் தர வரிசை (Rating) பட்டியலுக்கு றெயின்போ அணி 8.26 புள்ளிகளையும், டிறிபேக்ஸ்ரார் அணி 2.45 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டன. (க)


**அன்பு வாசகர்களே!**

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை
Valampurisp@gmail.com அல்லது
076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு
அனுப்பிவையுங்கள்.

**உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்**





2018 ஆம் ஆண்டிற்கான யாழ்.மாவட்ட பிரதேச செயலக பிரிவுகளிற்கிடையிலான விளையாட்டுப் போட்டியில் தெல்லிப்பழை பிரதேச செயலகம் 75 புள்ளிகளுடன் இரண்டாம் இடத்தினைப் பெற்றுக் கொண்டது. (க)

# இன ஐக்கிய சமாதான செயற்பாடுகளில் அனைவரும் கூட்டாக பயணிப்பதே சிறந்தது

## ஆசிய மன்றத்தின் சிரேஷ்ட அதிகாரி கமாயா ஜயதிஸ்ஸ தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

சமாதான சகவாழ்வுச் செயற்பாடுகளில் சிரேஷ்ட பிரஜைகள், அனுபவஸ்தர்கள் மாத்திரமல்லாது, இளைஞர் யுவதிகளும் பெண்களும் இணைத்துக் கொள்ளப்பட வேண்டும் என ஆசிய மன்றத்தின் சிரேஷ்ட நிகழ்சித் திட்ட அதிகாரி கமாயா ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

தேசிய சமாதானப் பேரவையின் மட்டக்களப்பு மாவட்ட சர்வமதப் பேரவையினால் ஒழுங்கு செய்யப்பட்ட கலந்துரையாடல் மட்டக்களப்பு கிறீன் கார்டன் விடுதியில் நேற்று இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட சர்வமதப் பேரவையின் மாவட்ட இணைப்பாளர் இராசையா மனோகரன் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் தேசிய சமாதானப் பேரவையின் திட்ட முகாமையாளர் சம்சுதீன் ஷாபி நயாஜ், மாவட்டத்திலுள்ள தமிழ் முஸ்லிம் சிங்கள சமூகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இந்து இஸ்லாமிய, கிறிஸ்தவ பௌத்த சமயங்களைச் சேர்ந்த சமாதான சௌஜன்ய செயற்பாட்டாளர்கள் சுமார் 40 பேர் கலந்து கொண்டனர்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய கமாயா மேலும் கூறியதாவது,

இன ஐக்கிய சமாதான செயற்பாடுகளில் அனைவரும் கூட்டாகப் பயணிப்பதே சிறந்தது. அவ்வாறு செயற்படும்போது அதன் பலாபலன்கள் சந்தேகமில்லாத நீடித்த சமாதானத்திற்கும் அச்சமின்றிய புரிந்துணர்விற்கும் ஆக்கபூர்வமான அபிவிருத்திக்கும் வழிவகுக்கும்.

எனவே, இந்தப் பயணத்தில் அனைத்து சமூகங்களையும் சேர்ந்த ஆர்வலர்களுடன் ஆன்மீகவாதிகள், ஆண்கள், பெண்கள், இளைஞர், யுவதிகள், அனுபவசாலிகள், அனுபவமற்றோர் என்று எல்லோரும் இணைந்து கொள்ள வேண்டும். அவ்வாறானதொரு கூட்டு அணியாலேயே சமாதானச் செயற்பாடுகளை வெல்ல முடியும்.

தனியே அனுபவஸ்தர்கள் ஒரு புறமும் அனுபவமில்லாதர்கள் இன்னொரு திசையிலும் பயணிப்பதால் பல்லின சமுதாயங்கள் வாழும் ஒரு நாட்டிலும் பிரதேசத்திலும் நீடித்த நிலையான சமாதானத்தை ஒரு போதும் அடைய முடியாது.

அனுபவஸ்தர்களையும் அனுபவம் இல்லாதவர்களையும் கொண்டு இயங்கும் ஒரு கற்றுக் கொள்ளும் அணியாலேயே எதிர்காலத்தை சிறப்பாக வடிவமைக்க முடியும்.

இளையோரை முதியோரும் முதியோரை இளையோரும் பரஸ்பரம் புரிந்து கொள்ள முடியாத ஒரு பரம்பரை இடைவெளி இப்பொழுது ஏற்பட்டுள்ளது.

இதனை நிவர்த்தி செய்து பரஸ்பரம் ஒருவரையொருவர் புரிந்து கொண்டு அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டு பயணப் பாதையைத் தெரிந்தெடுக்க வேண்டும்.

சமூக ஒருங்கிணைப்பில் எல்லோருடைய பிரதிநிதித்துவமும் இருப்பதுதான் வெற்றிக்கு வழிவகுக்கும்.

தன்னிச்சையாக இயங்காமல் எல்லோருமாக பரஸ்பர கலந்துரையாடலை மேற்கொண்டு பிரச்சினைகளை ஆய்வு செய்து அதற்கு பதிலளிக்கும் வகையில் இயங்க வேண்டும் என்றார்.

இந்நிகழ்வில் இன நல்லிணக்க செயற்பாடுகளிலும் பயிற்சிப் பட்டறைகளிலும் பங்கு பற்றியவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

நாடுபூராகவும் தற்போது இடம்பெற்று வரும் "இலங்கையில் அனைத்து சமயங்கள், மற்றும் அனைத்து இனங்களுக்கும் இடையிலான கலந்துரையாடல்" திட்டத்தை பிரிட்டிஷ் உயர் ஸ்தானிகராலயம், ஆசிய மன்றம் மற்றும் தேசிய சமாதானப் பேரவை ஆகிய நிறுவனங்கள் அமுலாக்கம் செய்கின்றன. (மு)

# சகவாழ்வினையும் ஒற்றுமையினையும் கட்டியெழுப்புவதற்கு விளையாட்டு அவசியம்

## சிறியானி விஜயவிக்கிரம தெரிவிப்பு

(கல்முனை)

சமூகங்களிடையே சகவாழ்வினையும் ஒற்றுமையினையும் கட்டியெழுப்புவதற்கு விளையாட்டு சிறந்ததொன்றாகும் என பிரதி விளையாட்டுத்துறை மற்றும் மாகாண உள்ளூராட்சி பிரதி அமைச்சருமான சிறியானி விஜயவிக்கிரம தெரிவித்துள்ளார்.

கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி தேசிய பாடசாலையின் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான இல்ல விளையாட்டுப் போட்டியானது நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கல்லூரியின் முதல்வர் செபமாலை சந்தியாகு தலைமையில் நடைபெற்றபோது.

அங்கு பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், மக்களுடைய எண்ணங்கள் ஒவ்வொன்றும் வேறுபட்டதாகவே காணப்படுகின்றது. எமது நாட்டில் சகவாழ்வை ஏற்படுத்துவதற்கான ஒரே ஒரு மார்க்கம் விளையாட்டேயாகும். இதற்கு நாங்கள் முன்னுரிமை வழங்க வேண்டும்.

சிறுவர்களை சிறந்த முறையில் வழிப்படுத்தல் வேண்டும். இவர்களிடம் குரோத மணப்பாங்கு கிடையாது. சரியான முறையில் வழிப்படுத்தினால் சிறந்த சமுதாயம் எதிர்காலத்தில் உருவாகும் எனக்கூறியுள்ளார். (மு)

# அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவுக்கே ஆதரவு; ஜோன் செனவிரத்ன

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையின் கீழ் நடைபெறும் அடுத்த தேர்தலுக்கு ஆதரவு வழங்க தயார் என முன்னாள் அமைச்சர் ஜோன் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சியில் இணைந்த பின்னர், இரத்தினபுரி குருவிட்ட நகரில் நேற்று நடைபெற்ற வரவேற்பு நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு பின்னர் நாட்டில் ஒருவித இருண்ட யுகம் ஏற்பட்டுள்ளது.

இரண்டு கட்சிகளுக்கும் தனித்து ஆட்சியமைக்க முடியாத காரணத்தினால் பேச்சுவார்த்தையின் பின்னர் இரண்டு வருடங்களுக்கு தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தற்போது பலவீனமான நிலைமைக்கு சென்றுள்ளது. நம்பிக்கையில்லாப் பிரேரணையின் போது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கு பலர் சதி செய்தனர்.

இதில் கட்சியின் பொதுச் செயலாளரும் சம்பந்தப்பட்டுள்ளார் எனவும் ஜோன் செனவிரத்ன குறிப்பிட்டுள்ளார். (மு)

# மாணவர்கள், பெண்களின் பாதுகாப்பு கருதி சிரமதானம்



(அல்லைப்பிட்டி)

அல்லைப்பிட்டி கிழக்கு அலுமினியத் தொழிற்சாலை வீதியை பெண்கள், மாணவர்கள் என பலரும் அதிகளவில் பயன்படுத்தி வருகின்றனர். அலுமினியத்தொழிற்சாலை வீதியின் யாழ்ப்பாணம்-ஊர்காவற்றுறை வீதிக்கு அண்மித்த பகுதிகளில் மாலை நேரங்களில் வீதியின் கரையோரங்களில் வெளியிடங்களைச் சேர்ந்தோர் ஒன்றுகூடி மது அருந்தி வருவதால் மாலை நேரத்தில் அவ்வீதியால் பயணம் செய்யும் பெண்களும் தனியார் கல்வி நிலையங்களுக்கு சென்று மாலையில் திரும்பும் மாணவர்களும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்த நிலையில் அப்பகுதி இளைஞர்கள் சிலரால் வீதியின் கரையோரங்களில் இருந்த பற்றைகள் சிரமதானம் மூலம் நேற்றைய தினம் துப்புரவு செய்யப்பட்டது. (மு)

# தேசிய அரசிலிருந்து விலகிய 16 பேரும் அரசாங்கத்திற்கு எதிராக ஒன்று திரளுவர்

## மகிந்த ராஜபக்ஷ ஆரூடம்



(கொழும்பு)

தேசிய அரசாங்கத்தில் இருந்து விலகிய சுதந்திர கட்சியின் 16 நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு, ஐக்கிய தேசிய கட்சிக்கு மாத்திரமின்றி தேசிய அரசாங்கத்திற்கு எதிராகவும் ஒன்று திரளும் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற சமய நிகழ்வொன்றுக்கு பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதில் வழங்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதன்போது சிங்கப்பூர் உடன்படிக்கை தொடர்பில் கருத்து தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி, உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ள விதத்தில் பிரச்சினை நிலவுவதாக தெரிவித்தார்.

இதனுடன், இந்த உடன்படிக்கை ஊடாக இந்நாட்டின் கலாசாரத்திற்கும் அழுத்தம் ஏற்பட்டுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டார். (மு)

# நடைபெற்ற இளைஞர் சம்மேளன நிர்வாக தெரிவும் விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைப்பும்



(தெல்லிப்பழை)

2018ஆம் ஆண்டுக்கான தெல்லிப்பழை பிரதேச இளைஞர் சம்மேளன நிர்வாகத் தெரிவு அண்மையில் தெல்லிப்பழை பிரதேச மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவும், சிறப்பு விருந்தினராக வலி.வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன் ஆகியோர் கலந்து கொண்டனர். இதில் இளைஞர் சம்மேளன அதிகாரி, இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர், இளைஞர்கள், யுவதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது பிரதேச இளைஞர் சம்மேளனத்துக்கு புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டதோடு தெல்லிப்பழை பிரதேச செயலகத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவின் நிதியொதுக்கீட்டில் 10 இலட்சம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டது.

அத்துடன் வலிகாமம் வடக்குப் பிரதேச இளைஞர் சம்மேளனத்துக்கு உட்பட்ட இளைஞர் கழகங்களில் அனைத்து விதத்திலும் சிறப்பான பெறுபேறுகளை வெளிக்காட்டிய பன்னாலை கணேசன் விளையாட்டுக்கழகம் மற்றும் கருகம்பனை இந்து இளைஞர் கழகம் ஆகியவற்றுக்கு சிறந்த கழகங்களுக்கான விருதுகளும் வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (மு-78)

# வவுனியா பூமாங்குளத்தில் வெடிபொருட்கள் எனக் கூறி பிளாஸ்ரிக் பொருட்கள் மீட்பு

(குருமன்காடு)

வவுனியா பூமாங்குளம் விநாயகர் ஆலய வீதியில் அமைந்துள்ள வீட்டு வளாகத்தில் வெடிபொருட்கள் இருப்பதாக கிடைத்த தகவல்களை அடுத்து வவுனியா நீதிமன்ற உத்தரவுக்கமைய வவுனியா பொலிஸார் மற்றும் வவுனியா பெரியமடு விசேட அதிரடி படையினர் இணைந்து நேற்று மாலை அந்தப் பகுதியில் கனரக வாகனங்களின் உதவியுடன் அகழ்வுப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

அந்த அகழ்வின் போது பிளாஸ்ரிக் பரல் ஒன்று மீட்கப்பட்டது. குறித்த சம்பவம் தொடர்பாக செய்தி சேகரிக்க சென்ற ஊடகவியலாளர்களுக்கு விசேட அதிரடிப்படையினர் அனுமதி மறுத்துள்ளதுடன் அவர்களை அச்சுறுத்தி வெளியேற்றியுள்ளனர்.

இதன்காரணமாக பிளாஸ்ரிக் பரலில் இருந்தது என்ன என்பது தெரியாமலே அகழ்வுப் பணி நிறைவு பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. (மு-250)

## உங்கள் இயலாமையை மறைக்க...

யற்ற பொருளாதார முகாமைத்துவ நிர்வாகத்தின் காரணமாகவே தற்போது நாடு பாரிய எதிர்விளைவுகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. தங்களது இயலாமையினை மறைப்பதற்கு கடந்த கால அரசாங்கத்தினை குறை கூற வேண்டாமெனவும் எச்சரித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கூட்டு எதிர்க் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன கூறியுள்ளார்.

எரிந்து கொண்டிருக்கும் இலங்கையின் பொருளாதாரத்தில் அரசாங்கம் பெற்றோல் ஊற்றியுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தை கவிழ்த்து 100 நாள் புரட்சி எனக் கூறி அழிவான வேலைத்திட்டத்தை முன்னெடுத்த நபர்கள் தற்போது எரிபொருளை குறைக்குமாறு கோருவது அனர்த்தமாகமாறியுள்ள இலங்கையின் பொருளாதாரத்திற்கு உதவியாக அமையாது.

இலங்கைக்கும் சிங்கப்பூருக்கும் இடையிலான சுதந்திர வர்த்தக உடன்படிக்கை என்ற பெயரில் பெரிய காட்டிக்கொடுப்பு உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்த உடன்படிக்கைக்கு அமைய மனித வளத்தை வழங்கும் நிறுவனங்களை இலங்கையில் ஸ்தாபிக்கும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

எட்கா உடன்படிக்கை மூலம் இந்தியாவில் இருந்து இலங்கை வர முடியாத தொழிலாளர்கள் இந்த உடன்படிக்கை மூலம் சிங்கப்பூர் வழியாக இலங்கைக்கு வர சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

இதேவேளை, அமைச்சர் மலிக் சமரவிக்ரம, ஜனாதிபதி மற்றும் அமைச்சரவையை தவறாக வழிநடத்தி இந்த உடன்படிக்கையை கைச்சாத்திட செய்துள்ளார் எனவும் பந்துல குணவர்தன குறிப்பிட்டுள்ளார். (மு)

## புகையிரத...

10 ரூபாய் கட்டணம் அதிகரிப்பில்லாத போதும் 10 ரூபாயால் பயணம் செய்யக்கூடியதாகவுள்ள 10 கிலோ மீற்றர் தூரத்தை 8 கிலோ மீற்றராகக் குறைக்கவுள்ளதாக கட்டணங்கள் தொடர்பாக நியமிக்கப்பட்ட ஐவர் கொண்ட குழு தெரிவித்துள்ளது.

அத்துடன் 10 கிலோ மீற்றராகவிருந்த தூரம் 8 கிலோ மீற்றராக குறைக்கப்பட்டதால் ரயில் நிலையங்களுக்கிடையில் 10 ரூபாயாகவிருந்த கட்டணம் 15 ரூபாயாக அதிகரிக்கப்படுமென தெரிவிக்கப்படுகிறது. (மு)

## சங்கங்களிடையே...

மௌனம் முன்வைத்துள்ளது.

எவ்வாறெனினும், கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம், தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் விலை அதிகரிப்புக்கள் மேற்கொள்ளப்படவேண்டும் என குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டவுடன், ஆட்டோ போக்குவரத்து கட்டணங்கள் அதிகரிக்கப்படும் என சில சங்கங்கள் குறிப்பிட்டாலும் தமது சங்கம் அவ்வாறான விலை அதிகரிப்புக்களை மேற்கொள்ளாது என ஆட்டோ சாரதிகள்சங்கம் குறிப்பிட்டுள்ளது.

இதனிடையே, எரிபொருள் விலை அதிகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து மீனவர்கள் சிலர் நேற்று திஸ்ஸமஹாராம பகுதியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (மு)

## ராஜபக்ஷ சகோத...

றின் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட முன்னாள் ஜனாதிபதி, ராஜபக்ஷ சகோதரர்கள் இடையில் கருத்து வேறுபாடுகள் இருப்பதாக சிலர் கூறுகின்றனர். என்னும் நாங்கள் ஒற்றுமையாகவே இருக்கின்றோம்.

அதேவேளை இலங்கைக்கும் சிங்கப்பூருக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்டுள்ள சுதந்திர வர்த்தக உடன்படிக்கைக்கு அமைய எந்த நபர்களையும் இலங்கைக்கு அழைத்து வர முடியும். இதன் மூலம் நாட்டின் கலாசாரத்திற்கு அழுத்தங்கள் ஏற்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார். (மு)


### விற்பனைக்கு

★ மீன்பிடி றோலருக்கான 30 அடி புதிய வள்ளம், யன்மார் 2 சிலிண்டர் (Full Recondition) எஞ்சினுடன் விற்பனைக்குண்டு.

வேம்படி வல்வெட்டித்துறை (3000) தொடர்புகளுக்கு 077 357 3055

### விரைவு பொதிகள் சேவை
### விசேட விலை குறைப்பு



DELIVARY IN 3-5 DAYS

UK - 550 /=Kg
கனடா - 900 /=Kg
ஜேர்மனி - 700 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg

0768226240

● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

V2 TRAVELS


## பிரிந்திருந்த...

ரும் கூட்டாக இணைந்து இந்த நிகழ்வை முன்னெடுப்பதாக அறிவித்திருந்தனர். அந்த வகையில் நேற்று குறித்த நிகழ்வுகள் தொடர்பான முன்னாயர்த்தங்களை செய்வது தொடர்பாக தீர்மானிப்பதற்கு அனைத்து தரப்பினரும் முள்ளிவாய்க்கால் மண்ணுக்கு சென்றிருந்தனர்.

வடக்கு மாகாண சபையினர் காலை அவ்விடத்துக்கு சென்று கலந்துரையாடி தீர்மானங்களை மேற்கொண்டு விட்டு சென்றிருந்தனர். அதன் பின்னர் யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் அப்பகுதிக்கு சென்று கள நிலவரங்கள் தொடர்பாக ஆராய்ந்திருந்தனர். அத்துடன் தமிழ் தேசிய மக்கள் முன்னணி, ஜனநாயக போராளிகள் கட்சி, மத தலைவர்கள், மற்றும் பொது அமைப்புக்கள் அப்பகுதி மக்கள் என பலரும் இச் சந்திப்புக்களில் கலந்து கொண்டிருந்தனர்.

இருப்பினும் நேற்றைய தினம் முள்ளிவாய்க்காலில் மேற்கொள்ளவிருந்த முன்னாயர்த்த கலந்துரையாடல் தொடர்பாக இரு தரப்பினரும் இறுதியான தீர்மானம் எடுத்துக் கொள்ளாத நிலையில், இரு தரப்பினரும் வெவ்வேறு நேரங்களில் அவ் இடத்துக்கு சென்று தமது கடமைகளை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (மு-9)

## காணாமல்...

அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான அலுவலகம் குறித்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை விசாரணையில் இருந்து தப்புவதற்கான முயற்சிகளில் ஒன்றே காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகம் என நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார். (மு)

## அரச மருத்...

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்படும்இப் போராட்டமானது, அரச மருத்துவ அதிகாரிகளுக்கு வழங்கப்படவேண்டிய மேலதிக கொடுப்பனவுகள் (புதிய சுற்று நிருபத்தின் படி) கடந்த நான்கு மாதங்களாக வட மாகாணத்தில் பணிபுரியும் வைத்தியர்களுக்கு மட்டும் வழங்கப்படவில்லை. இது சம்பந்தமாக அரச மருத்துவ அதிகாரிகள் தாய்ச் சங்கம் பலதடவைகள் வட மாகாண சுகாதார அதிகாரிகளிடம் உரிய நடவடிக்கை எடுக்குமாறு, கோரியிருந்தது எனினும் இதற்கு பலன் ஏதும் கிடைக்காமையால் வட மாகாண சுகாதார அமைச்சர், மற்றும் வட மாகாண சுகாதார பணிப்பாளர் ஆகியோருடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்தது. மேற்படி கொடுப்பனவுகள் சிறிது காலத்தில் வழங்கப்படும் என அவர்கள் உறுதி அளித்திருந்தனர். எனினும் உறுதி அளித்தவாறு கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை.

எனவே இலங்கையில் அனைத்து மாகாணத்திலும் (கிழக்கு மாகாணம் உட்பட) வைத்தியர்களுக்கு உரிய கொடுப்பனவுகள் வழங்கப்படும்போது வட மாகாண அதிகாரிகளின் அசமந்த போக்கு காரணமாக அதற்கு எதிர்ப்பு தெரிவித்த மேற்படி போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

பணிப் புறக்கணிப்பில் ஈடுபடும் வைத்தியர்கள் நோயாளர்களின் உயிர்காக்கும் அவசர சிகிச்சைகளை அனைத்து வைத்திய சாலைகளிலும் வழங்குவார்கள் என அறிவித்துள்ளனர். (மு-9)

## எனது பயணத்தை யாராலும் நிறுத்தமுடியாது - கோத்தபாய

(கொழும்பு)

கைது செய்வதன் ஊடாக தனது பயணத்தை நிறுத்திவிட யாராலும் முடியாது என முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ மேற்கொள்ளும் தீர்மானத்திற்கு ராஜபக்ஷ குடும்பத்திலுள்ள அனைவரும் மதிப்பளிப்பார்கள் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எம்பிலிப்பிட்டிய பகுதியில் கொடக்கவெல மஹிந்தராம விகாரையில் புத்தர் சிலையை திறந்துவைக்கும் நிகழ்வில் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ச கலந்துகொண்டார்.

இந்த நிகழ்வில் அண்மையில் அரசாங்கத்தில் இருந்து விலகிய முன்னாள் அமைச்சர் டபிள்யூ.டி செனவிரத்னவும் பிரசன்னமாகியிருந்தார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய கோத்தபாய ராஜபக்ச, பௌத்தர்கள் ஆகிய எமக்கு ஏனைய இனங்களுடன் நல்லிணக்கத்துடன் வாழ்வது எவ்வாறு என வெளிநாட்டவர்கள் கூற வேண்டிய அவசியமில்லை என சுட்டிக்காட்டினார்.

நல்லிணக்கத்தை இல்லாது செய்வது பௌத்தர் அல்ல எனவும் வேறு சில கடும்போக்குவாதிகளே அதனை செய்கின்றனர் என்பதை கவலையுடன் கூற வேண்டியுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவீர்களா என எழுப்பப்பட்ட கேள்விக்கு பதில் அளித்த கோத்தபாய ராஜபக்ஷ, அந்த தீர்மானத்தை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே மேற்கொள்ள வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

மகிந்த ராஜபக்ஷ, மேற்கொள்ளும் தீர்மானத்திற்கு குடும்பத்திலுள்ள அனைவரும் நாட்டுக்காக ஒற்றுமையுடன் செயற்பாடுவார்கள் எனவும் அவர் கூறியுள்ளார். (மு)

## த.தே.கூட்டமைப்பு...

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (புளொட்) மத்திய செயற்குழுக் கூட்டம் வவுனியாவில் நேற்று இடம்பெற்றுள்ளது.

புளொட்டின் செயற்குழுக் கூட்டம் வவுனியாவிலுள்ள தனியார் விடுதியில் புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தலைமையில் நேற்று நடைபெற்றது.

மத்திய செயற்குழுக் கூட்டம் நிறைவு பெற்றதையடுத்து ஊடகவியலாளர்கள் சந்திப்பு இடம்பெற்றது.

இதில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் உரையாற்றினார். அதில் அவர் தெரிவித்ததாவது.

அரசுக்குள் மிகப்பெரிய குழப்பங்கள் இருந்துகொண்டிருக்கின்றது.

இரண்டு கட்சிகள் மிகப்பெரிய அளவிலே அவர்கள் மத்தியிலே முரண்பாடுகள் தோன்றியிருக்கின்றன.

இந்த முரண்பாடுகள் எப்படி இந்த அரசைக்கொண்டு செல்லும் என்பதும் அதேநேரத்தில் நான் மாத்திரமல்ல மத்திய குழுவிலே இருக்கக் கூடிய மற்றைய உறுப்பினர்களுடைய அபிப்பிராயங்களும் அரசியல் தீர்வு சம்பந்தமாக நியாயமான தீர்வை இந்த அரசு எட்டாது என்ற அபிப்பிராயம் இருக்கின்றது. அது நிச்சயம் எனக்கும் இருக்கின்றது.

இதேவேளை, தமிழரசுக் கட்சி தானாகவே முடிவெடுக்கின்ற நிலைமைகள் எல்லாம் இருக்கின்றது. ஆனால் அதில் பெரிய மாற்றம் இருப்பதாக நான் கருதவில்லை என்றும் பெரியமாற்றங்கள் இல்லை அவர்கள் திருந்தவேண்டும்.

இன்று கூட்டமைப்பு நாங்கள் விரும்புகின்றோமோ இல்லையோ உண்மையான நிலைமை கூட்டமைப்பு பலவீனம் அடைந்திருக்கின்றது.

இந்த உள்ளூராட்சித் தேர்தல் இதனை மிகத்தெளிவாக காட்டுகின்றது எனவும் அவர் கூறியுள்ளார். (மு)

## காணாமல் போனோருக்கான...

தெனியாய மத்திய மகா வித்தியாலயத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை தேசிய சகவாழ்வு அரச கரும மொழிகள் அமைச்சின் நடமாடும் சேவை ஒன்று முன்னெடுக்கபபட்டது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட அமைச்சர் மனோ கணேசன் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே இதனைக் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் முதற்குடிமகன் என்ற வகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடமே அந்த அமைச்சுக்கள் இருக்கவேண்டும் அப்போது தான் அவர் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் பொறுப்புக்கூற முடியும்.

எனவே நான்தான் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க விடமிருந்த அமைச்சு எனக்கு வழங்கப்பட்டபோது நான் மறுத்து விட்டேன். பொறுப்புக்கூறலில் இருந்து எமது அரசாங்கம் தவறி விடக்கூடாது என்ற நல்லெண்ணத்திலேயே நான் குறித்த அமைச்சைப் பொறுப்பேடுக்க மறுத்துவிட்டேன்.

நான் அமைச்சுப் பதவிகளுக்கு ஆசைப்படுபவன் அல்ல. மக்களுக்கான சிறந்த சேவையினை வழங்குவதே எனது நோக்கமும் குறிக்கோளும். வடக்கு கிழக்கில் 50ஆயிரம் வீடுகள் அமைக்கும் பணியும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

அத்துடன் வீதிகள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளும் எனது அமைச்சின் கீழ் செயற்படுத்தப்பட இருக்கின்றன. எனவே இவற்றைத் திறமையுடன் செய்து முடிப்பதற்குச் சிறந்த ஆளுமை என்னிடம் இருக்கின்றது' என அமைச்சர்மனோ கணேசன் மேலும் தெரிவித்துள்ளார். (மு-9)


### வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

- ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக, அதி விரைவு, விரைவு, சிக்கன பொதிகள் சேவை.
- கடலுணவு, இறைச்சி, எண்ணை வகை, மருந்துப் பொருட்கள், பழ வகைகள்,
- பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்

### அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (C-2580)

நெல்லியடியில் - இல.01, பெற்றோல் செற் லேன், நெல்லியடி. 076 443 1576 | சாவகச்சேரியில் - இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576 | கிளிநொச்சியில் - இல.10, கண்டி வீதி, கரடிப்போக்கு கிளிநொச்சி (தம்ரோ காட்சி அருகில்) 076 443 1576 | 021 222 3536


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.05.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.